உமா

ஆசிரியர்: ஜீ. உமாபதி

நிர்வாக ஆசிரியர்: ர. சண்முகம்

செடி 1 மலர் 10	பிப்ரவரி 1954	விஜய ஹூ தை மீ

பொருளடக்கம்

கிளர்ச்சி வேண்டும்; ஆனல்...!	தலையங்கம்	... 9
நாமும் நீங்களும்		... 11
எதிரொலி		... 12
உலகோடு ஒட்டி வாழ்	'பதி'	... 13
சூடும் சுவையும்	நையாண்டி பாரதி	... 15
நம்பிக்கையின் எல்லைக்கோட்டிலே....!	(உலக இலக்கியம்) குயிலன்	 18
சிந்தனைக்கு அப்பால்	புனர்வஸு	 27
தோல்வி	மே. ச. பரதன்	 35
சேற்றில் செந்தாமரை	திரிலோக்சந்த்	 42
ஓய்வு நேரம்	'தெய்வம்'	 49
அன்பு வென்றது	"ஜயலக்ஷ்மி"	 51
அருட்கவி பாரதி	பாரதிமோகன்	 58
கண்ணீர்	ஆர். பி. மல்லாரி	... 59
உங்களுக்கு தாழ்வுமனப்பான்மை இருக்கிறதா?	ஜி. சுவாமிநாதன்	... 62
நாட்டிய நிலை	கே. என். தண்டாயுதபாணி	... 66
வாழ்க்கையும் இலக்கியமும்	நா. பார்த்தசாரதி	 75

உமா 'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே, சம்பவங்களும் கற்பனையே.



"இப்ப என்ன சொல்லிப்பிட்டாங்க இப்படி........!
ஒரேயடியா கோவிச்சுக்கிட்டு உட்கார்ந்திட்டியே..."

197204
சென்னை-600 005.

கிளர்ச்சி வேண்டும்; ஆனால்...!

தமிழகத்தில் பொறுப்புணர்ச்சி மிக்க கிளர்ச்சி யொன்று உருவாக வேண்டும்; அக்கிளர்ச்சியின் குறிக்கோளில் கட்சி விஷம் கலக்கக் கூடாது; தனிப்பட்ட சுயநலப் பாசி பிடிக்கக் கூடாது. தமிழனாகப்பிறந்த ஒவ்வொருவரும், தமிழகத்தின் நலத்தில் பற்று கொண்ட ஒவ்வொருவரும் அக்கிளர்ச்சியில் இணைந்து நின்று ஒரே குரலில் முழக்கமிட வேண்டும்; அந்த முழக்கம் - அந்தக் கிளர்ச்சி ''தமிழகத்தில் விரைவில் தமிழ் ஆட்சி பீடமேற வேண்டும்'' என்பதேயாகும். இப்பொழுது தேவையான ஒரே ஒரு கிளர்ச்சி இது தான்.

ஆனால் துர்ப்பாக்கியவசமாக தமிழகத்தில் இன்னும் 'ஸ்தான்' வாதம் பேசப்படுகிறது. வட நாடு—தென் நாடு பிரிவினைப் பற்றிய கூக்குரல் எழுகிறது. ஆரிய—திராவிட பிரச்னை எழுப்பப்படுகிறது; முதலாளி—தொழிலாளி பாகுபாடு பற்றிய ஆராய்ச்சி நடக்கிறது...இன்னும் என்னென்னவோ அர்த்தமற்ற சச்சரவுகள் இங்கே மோதி குட்டை குழப்பப்படுகின்றன.

தமிழகம் சுயாட்சி பெற்ற நாடாக விளங்க வேண்டும் என்று விரும்பினோம்; நமது நன்மைக்கான சட்ட திட்டங்களை நாமே வகுத்துக் கொள்ள வேண்டும் என்று கருதினோம். இதில் கட்சி வேறுபாடே இருக்கவில்லை. எல்லோரும் ஒப்புக் கொண்ட ஒரு லட்சியம்.

சுயாட்சி பெறும் தமிழகம் இந்திய அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமா? வெட்டிக்கொள்ள வேண்டுமா? என்பதில் மட்டும் சிறு கருத்து வேறுபாடு இருந்ததுண்டு. அந்த வேறுபட்ட கருத்துடையவர்களும் சுயாட்சித் தமிழகத்தை விரும்புபவர்கள் தான் என்றாலும் உணர்ச்சி வேகத்தில் கொஞ்சம் தீவிரமாகப் போகும் பண்புள்ளவர்கள்.

ஆந்திரம் பிரிந்த பின்னர் நமக்கு 'சுயாட்சித் தமிழகம் கிட்டத்தட்ட கிடைத்துவிட்டது என்றே கூறலாம். இப்பொழுது தமிழகம் இந்தியப் பேரரசுடன் இணைந்த ஒரு சுயாட்சி நாடுதான். தமிழகத்தை நிர்ப்பந்தப்படுத்தித் தனக்கு கீழ்ப்படிய வைக்கும் அவ்வளவு பெரிய அதிகாரம் எதுவும் இப்பொழுது இந்தியப் பேரரசுக்கு இல்லை. சில விஷயங்களில் தமிழக அரசியல் நிர்வாகத்தில் மத்திய அரசினர் குறுக்கீடு இருந்தாலும், எதிர் காலத்தில் அதை ஒழுங்குபடுத்திவிடுவது அவ்வளவு பெரிய சிரமமல்ல.

ஆகவே சுயாட்சித் தமிழகமே நமக்குக் கிடைக்கவில்லை என் கருதிக்கொண்டு இனியும் 'ஸ்தர்ன்' வாதம் பேசுவதும்; நாடு—தென்னாடு என்று பிரித்துப் பிரித்துப் பிரிவினைக் எழுப்புவதும்; வீணாக மத்திய அரசினரை குறை கூறிக் டிருப்பதும் பொருளற்ற கூக்குரல் என்றுதான் கூற வே

இன்று நம்முன்னுள்ள ஒரே பிரச்னை "தமிழ் அரசு மொழியாக வேண்டும்" என்பது தான். இதன் முக்கியத்துவத்தை தமிழக அரசினரே மறுக்கவில்லை. உடனடியாக சாத்தியமில்லை என்பது தான் அவர்கள் கூறும் சமாதானம்.

ஆகவே இப்பொழுது தமிழரிடையே ஏற்படவேண்டிய கிளர்ச்சி நம்மை நாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளும் பண்பாகத்தான் இருக்கவேண்டும்.

தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், கட்சி—கழகத் தலைவர்கள் ஆகியோரின் கூட்டுறவுடன் கூடிய ஒரு அமைப்பை உடனடியாக உருவாக்கி தமிழ் அரசு மொழியாவதற்குச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளில் முனைந்து இறங்க வேண்டும்.

தமிழ் அரசு மொழியாவ்தற்கு இப்பொழுது சாத்தியமில்லை என்று அரசினர் கூறினால், உடனே அரசாங்கத்தை எதிர்த்துக் குழப்புவதைவிட "எப்படி சாத்தியம்" என்பதைப் பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தை மேற்குறிப்பிட்ட அமைப்பு, அரசாங்கத்துக்கு அறிவிக்கலாம், தமிழில் இல்லாத சட்ட—விஞ்ஞான நூற்களை உடனடியாக உருவாக்கி அதைப் புயல் வேகத்தில் மக்கள் மத்தியில் வைக்க அந்த அமைப்பு முயற்சிக்கலாம்; தகுதியுள்ள சிலருக்கு சீக்கிரமாக தமிழில் சட்ட—விஞ்ஞான நுணுக்கங்களைப் போதித்து தமிழில் அரசாங்கம் நடத்துவதற்குப் பயிற்சி அளிக்கலாம்.

இப்படிபட்ட உருப்படியான ஒரு கிளர்ச்சியை எவ்வளவு விரைவில் துவக்குகிறோமோ அவ்வளவு விரைவில் எவ்வித தடங்கலுமின்றி தமிழ் ஆட்சி பீடத்தில் அமரும்; இதை தமிழ் அறிஞர்கள்—அரசியல் தலைவர்கள் கவனிப்பார்களா ?

பெரியாரின் புது பக்தி !



ட்டு புத்தரை எதிர்காலத்தில் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் !

நாமும் நீங்களும்

"இவ்வளவு அற்புதமான— அழகிய மலரை ஏராளமான பக்கங்களோடு மிகக் குறைந்த விலையில் எப்படித்தர முடிந்தது" என்று பொங்கல் மலரை பற்றி வாசகர்கள் மட்டுமன்றி பெரிய — பிரபல பத்திரிகை உலக 'ஜாம்பவான்' களும் வியப்புக் கேள்வி எழுப்பி எங்களைத் திணற அடித்திருக்கின்றனர். எங்கள் கடைக்கால் (அதாவது மக்கள் ஆதரவு) பலமாக இருக்கும் போது அதன் மீது பிரம்மாண்டமான அழகு மாளிகையை அமைக்க நாங்கள் ஏன் அச்சப்பட வேண்டும்?

இந்த இதழில் "மன நோய்க்கு மருந்து" "சூடும் சுவையும்" என்ற இரண்டு புதுப்பகுதிகள் ஆரம்பமாகின்றன. இந்தப் பகுதிகள் பற்றி வாசகர்களின் எண்ணம் தேவை; தயவு செய்து எழுதுங்கள்.

சின்னஞ் சிறு கிராமங்களில் உள்ள வாசகர்கள் பலருக்கு 'உமா' தொடர்ந்து கிடைக்க வசதியில்லை என்று கடிதங்கள் எழுதியுள்ளனர்; இவர்கள் நேரடியாக சந்தாதாரர்களாக சேர்ந்துக் கொள்வதன் மூலம் இந்தக் குறையைப் போக்கிக் கொள்ளலாம்.

பொங்கல் வாழ்த்துத் தெரிவித்து 'உமா'வின் சேவையைப்பாராட்டிய அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றி.

— ஆசிரியர்.

மேலட்டைச் சித்திரம்:

ஒரு பெண் பாண்டியனிடம் மனதைப் பறிகொடுத்து விடுகிருள்; மாலை நேரத்தில் பாண்டியன் குதிரை மீதமர்ந்து உல்லாசமாகச் செல்லும் போது அவன் அழகை கதவு மறைவில் நின்று ரசித்து மகிழ்வது அவள் வழக்கம். ஆனுல் பாண்டியன் ஏறிவரும் குதிரை வேகமாகச்செல்லும் காரணத்தால் அந்தப் பெண்ணின் மகிழ்ச்சி அதிக நேரம் நிலைக்க வழியின்றி போய்விடுகிறது. அதனுல் அவளுக்கு அந்தக் குதிரை மீது ஆத்திரம் பிறக்கிறது. குதிரையை மனதிற்குள்ளேயே சபிக்கிருள்.

"போர்களத்தில் தான் எதிரிகளை முறியடிக்க பாய்ந்து பாய்ந்து ஓடுகிருய்; இங்கே ஊரில் செல்லும் போது கூடவா உனக்கு இவ்வளவு அவசரம்? மெதுவாகப் போனுல் என்ன?...."

அவள் இதயக் குமுறல் ஒரு முத்தொள்ளாயிரப் பாடலில் எவ்வளவு அழகாகப் படம் பிடிக்கப்படுகிறது பாருங்கள்!

போரகத்துப் பாயுமா!
பாயா(து) ஒருபடியா
ஊரகத்து மெல்ல
நடவாயோ! பார
மதவெங் களியானை
மாறன் தன் மார்பம்,—
கதவங் கொண்(டு) யாமும்தொழ

குதிரையின் வேகமும்; பெண்ணின் மன வேகமும் டைட்டபடத்தில் இணைந்து எப்படிப் பிரகாசிக்கிறது பாருங்

எதிரொலி

பாராட்டுகிறோம்.

சென்னை நூல் நிலையக் கமிட்டியின் தலைவராக திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். ஆண்டுக்கு மூன்று லட்ச ரூபாய்கள் வருமானமுடைய நூல் நிலையக் கமிட்டி மூன்றாண்டுகளாக வேலை செய்யாத காரணத்தால் ஒன்பது லட்ச ரூபாய்கள் லோபிகைப்பொருள்போல சேமிப்பு நிதியில் கிடக்கிறது. இருக்கும் நூல் நிலையங்களை சீர்படுத்தியும், புதிதாக பல நிலையங்களைத் திறந்தும் செயலாற்ற வைக்கும் முயற்சியில் நூல் நிலையக் கமிட்டி முனைந்தால் இதைவிடச் சிறந்த சேவை வேறென்ன இருக்க முடியும். தகுதியுள்ள ஒருவரை பொறுப்புள்ள பதவிக்கு தேர்ந்தெடுத்தன் மூலம் சென்னை நூல் நிலையக் கமிட்டி தன் எதிர்காலச்சேவைக்கு இப்பொழுதே முத்திரையிட்டுவிட்டது. சிறந்த தலைவரின் கீழ் எதிர் காலத்தில் உயர்ந்த சேவைகளைச் செய்து அறியாமையை மக்களிடமிருந்து விரட்ட பாடுபட கமிட்டியினரை வாழ்த்துகிறோம்.

இலங்கை இந்திய ஒப்பந்தம்!

நாம் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை; சொல்லப்போனால் ஏமாற்றமே! இந்தப் பிரச்னைக்கு சீக்கிரம் முடிவு கட்டி இலங்கை இந்தியர்களின் துயர் துடைக்க வேண்டும் என்ற ஆவலால் இந்தியப் பிரதமர் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டார்; இதை இலங்கைப் பிரதமர் வெகு சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டார். அடிப்படைப் [illegible]களில் மாறுதல் இருக்கவில்லை: என்றாலும் மேலோட்டமாக சில அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. தற்காலிகமாக இந்த ஒப்பந்தத்தை வரவேற்கலாம்.

பாக்கிஸ்தான் பயங்கரம்

நாளுக்கு ஒரு சிந்தனையும், நிமிஷத்துக்கு ஒரு பேச்சுமாக பாக்கிஸ்தான் குட்டை குழப்புகிறது. அமெரிக்காவுக்குப் போர்த்தளம் அளிப்பதன் மூலம் ஆசியாவின் அமைதியைப் பறிக்கொடுக்க பாக்கிஸ்தான் புயல் வேகத்தில் முன்னேறுவதை உலகமே வெறுக்கிறது; இங்கே நம் நாட்டில் உள்ள சில பகுத்தறிவாளர்கள் கூட பாக்கிஸ்தான் செய்வதும் சரிதான் என்ற ரீதியில் பேசுவதறிந்து வெட்கப்படுகிறோம். நேரு சர்க்கார் மீது ஆத்திரமிருக்கிறது என்ற காரணத்தால் இப்படி அர்த்தமின்றி உளறிக் கொட்டுவது மக்களின் மன உறுதியைச் சிதைப்பதாகும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

வ. உ. சி. யும், கப்பலும்!

கப்பலோட்டி வெள்ளை அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்தார் வ. உ. சிதம்பரனார். அதன் பயனாக வாழ்வில் அவர் அடைந்த தொல்லைகளை தமிழகம் அறியும். அவர் பெயரால் தூத்துக்குடிக்கும் இலங்கைக்குமிடையே ஒரு கப்பல் போக்குவரத்து இருந்தது. எதிர்பாராத விதமாகக் கப்பல் நிர்வாகம் சரியாக இல்லாத காரணத்தால் சென்னை அரசாங்கம் கப்பலைக் கைப்பற்றியுள்ளது; சிதம்பரனாரின் சேவைக்கு ஒரே சின்னமாக இருந்த இக்கப்பல் மீண்டும் கடலில் நடமாட அரசாங்கம் அவசியம் நேரே நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.



உலகோடு ஒட்டி வாழ்!

அன்புள்ள தம்பி,

வேலைத் தொந்தரவுகள் என்னை ஆக்ரமித்துவிட்ட காரணத்தால் உன்னுடன் சில நாட்களாகத் தொடர்பு கொள்ள இயலவில்லை. நீயும் பொங்கல் புதுநாள் கொண்டாட்டத்தில் மூழ்கி யிருந்திருப்பாய். நான் கடிதம் எழுதியிருந்தாலும் உனக்கு படிக்க ஓய்வோ, சிரத்தையோ இருந்திருக்காது.

தம்பி, நீ திருக்குறள் படித்திருக்கிறாயா? இதுவரை இல்லாமலிருந்தால் நீ அவசியம் படிக்க முயற்சி எடுத்துக்கொள். ஏனெனில் திருக்குறள் ஒரு வாழ்க்கைத் துணை நூல். நான் நான்கு கடிதங்களில் உனக்குக் கூறும் விஷயங்களை திருவள்ளுவர் இரண்டே வரிகளில் கூறி விளக்கும் அபார திறனைப் பெற்றவர். குறள் மணிகள் ஒவ்வொன்றிலும் பொதிந்து கிடக்கும் போதனைகளை தொடர்ந்து கற்றுணர்ந்தவன் வேறு முன் அநுபவமில்லாமல் ஒரு பெரிய அரசாங்கத்தின் பொறுப்பைக் கூட ஏற்று நடத்தி விடலாம்.

எடுத்த எடுப்பில், இப்படி "குறள் உபதேசம்" செய்ய முற்பட்டதன் நோக்கம் என்ன வென்றால் இந்தக் கடிதத்தில் குறளாசிரியர் கூறும் ஒரு தத்துவத்தைத்தான் உனக்கு எடுத்துக் கூற நினைக்கிறேன்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."

என்று ஒரு குறள். இதன் பொருள் உனக்கே புரிந்திருக்கும். ஒருவன் என்னதான் பல நூல்களைக் கற்ற அறிஞனாக இருப்பினும், அவன் உலகத்தோடு ஒட்டிப் பழகும் பண்பு பெறாதவனாக இருப்பின் அவனுடைய அறிவும், திறமையும் பயனற்றதாகவே முடியும் என்பது வள்ளுவர் கூறும் வாக்கு.

உலகத்தோடு ஒட்டி ஒழுகும் பண்பு வாழ்க்கையின் ஒவ்வொரு துறைக்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் திறமைசாலியாகத்தான் இருப்பார்கள். திறமையற்ற யாருமே மனித வர்க்கத்தில் இல்லையென்று கூறலாம். ஆனால் தங்களிடம் உள்ள திறமையை பிறருக்கு வெளிப்படுத்த முடியாத காரணத்தால் தான் அநேகம்பேர் முன்னுக்கு வருவதினின்றும் தடைப்பட்டு நிற்கின்றனர். இப்படி திறமை வெளிப்படாததற்கு உலகத்தோடு ஒட்டிப் பழகும் பண்பு குறைவாக இருப்பதுதான்.

சிலர் ஆயிரக்கணக்கில் மூலதனம் வைத்து ஏதாவது வியாபாரம் தொடங்குவர். ஆனால் அடுத்த மாதமே வியாபாரம் படுத்துவிடும். நஷ்டம் ஏற்பட்டு விடும்.

அரைக்காசுகூட மூலதனம் வைக்காமல் நாணயமும், பொறுப்பும் நிறைந்த வாய்ப்பேச்சு மூலமாகவே வியாபாரத்தைத் தொடங்கி லட்சக்கணக்கில் சிலர் பொருள் சேர்த்து விடுவார்கள்.

முன்னவர் வியாபாரத்தில் தோல்வியுறுவதற்கு உலகத்தோடு ஒட்டிப் பழகும் பண்பு இல்லாததும், பின்னவர் உயர்வுக்கு மேற்படி பண்பு மட்டுமே காரணம் என்பதும் கூறவும் வேண்டுமா ?

இம்மாதிரி வாழ்க்கையில் எந்தத் துறைக்கும் உலகத்தோடு ஒட்டிப் பழகும் பண்பு அவசியம் வேண்டும்.

உலகத்தோடு ஒட்டி பழகுதல் என்றால் சாதாரணமாக எல்லோரிடமும் நேசமாகப் பழகிவிடுவது என்று மட்டும் பொருளல்ல. உலத்தோடு ஒட்டிப் பழகுவதற்கு இன்று தவறான ஒரு பொருளைக்கூடக் கொண்டிருக்கின்றனர். மற்றவர்களிடம் காரியம் சாதிக்கும் முறையில் முகஸ்துதியாகப் பேசி அவர்கள் மனதை மகிழ்விப்பது போலவே ஏமாற்றிப் பழகுவதையே சிலர் உலகத்தோடு ஒட்டிப் பழகுதல் என்றுஎண்ணி விடுகின்றனர். இந்த வினோதப் பண்பை "காக்கை பிடித்தல்" என்று வேடிக்கையாக அழைப்பார்கள்.

தம்பி, நீ இந்தப் பண்பு உலகத் தோடு ஒட்டிப் பழகும் பண்பு எனக் குழப்பிக் கொண்டு ஏமாறாதே. இந்த முறை சரியே அல்ல.

நமது வாழ்வுக்கு பயனளிக்கூடிய அறிஞர்களை நாமே வலிய சென்று அறிமுகம் செய்துக் கொள்ள வேண்டும். அறிஞர்கள் என்றால் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், அரசியல் வாதிகள் என்று மட்டும் அர்த்தமல்ல, பிரபல வியாபாரிகள், தொழில் நிபுணர்கள் போன்றோரும் அந்தந்தத் துறைகளில் அறிஞர்களே. நமக்கு எந்த வழியில் ருசியிருக்கிறதெனக்கண்டு, அவர்களுடைய கூட்டுறவை நாமே வலிய சென்று அடைய வேண்டும். நமக்கு இருக்கும் சக்தியை அவர்களுக்கு உணர்த்தி, அவர்களுடைய நல்லுபதேசங்களை பெற முனைய வேண்டும். நம்மால் அவர்களுக்கு ஆகக் கூடிய சிறு உதவிகள் ஏதாவது இருக்குமாயின், அதை அவர்களுக்காகச் செய்வது தாழ்வான செயலல்ல. அப்படிச் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும். ஆனால் நாம் அவர்களிடம் பெறும் அறிவுக்கு இந்தச் சிறு உதவிகள் கூலிபோன்று அமையும் வண்ணம் இருந்துவிடக் கூடாது.

பொது இடங்களில் பழகும் போது இனிமையுடனும், அங்கிருக்கும் மற்றவர்கள் மனதில் நல்ல அபிப்பிராயத்தை உண்டாக்கும் வண்ணம் பழகுவது அடுத்த முக்கியமானதொரு விஷயமாகும். பொது இடங்களில் யாரிடமாவது எதையாவது கேட்டுத் தெரிந்துக் கொள்ள நினைத்தால் அதை மிகப் பணிவுடனும், தாழ்ந்த குரலிலும் கேட்க வேண்டும். பிறரை அதிகாரம் செய்வது போன்றோ, உரத்தக் குரலில் மிரட்டுவது போன்றோ கேட்டால் நமக்குப் பதில் கிடைக்காததோடு, விபரீதமான விளைவுக்கும் வழி ஏற்பட்டுவிடும்.

நம்மைப் பிறரிடம் அறிமுகப் படுத்திக் கொள்ள நேரிடும் பொழுது நம்மிடம் அமைந்திருக்கும் திறமையை நாமே எடுத்துக் கூறுவது தவறல்ல. ஆனால் அதை அடக்கமாகக் கூறவேண்டுமே தவிர, அகம்பாவத்துடன் கூறவேண்டாம்.

தம்பி, உலகத்தோடு ஒட்டிப் பழகும் இந்தக் குணம்தான் உன் திறமையைப் பிரகாசிக்க வைக்கும் தூண்டுகோல் என்பதை நன்றாக உன் நினைவில் நிறுத்திக் கொள்வாய் என்ற நம்பிக்கையில் இந்தக் கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புள்ள தமையன்.

நீண்ட காலத்திற்குப் பிறகு நண்பர் நையாண்டி பாரதி இதோ தலை காட்டுகிறார்; அவருடைய சூடான, ஆனால் சுவையான அபிப்பிராயங்கள் பிரசித்தமானவை. இனி தொடர்ந்து 'உமா'வில் அவற்றை எதிர்பார்க்கலாம். இந்தப் பகுதி அவருடைய சொந்தக் கருத்துக்களே, என்பதை மட்டும் மறந்துவிட வேண்டாம்.

—ஆசிரியர்.

பேராசிரியர் ஒருவருக்கு ஒரு வழக்கம் இருந்ததாம். தனக்குத் தானே பேசிக்கொள்ளும் வழக்கம் அது. அது ஒரு வியாதியாகவும் இருக்கலாம்; லூஸ் தனமாகவும் இருந்திருக்கலாம். ஆனால் அவரோ அதை மேதைக் குணமாகவே மதித்திருந்தார்.

"ஏனய்யா நீராகவே பேசிக்கொள்கிறீர்? இது என்ன வழக்கம்?" என்று ஒரு நண்பர் அவரைக் கேட்டார். அதற்கு அப் பேராசிரியர் சொன்ன பதில் அற்புதமானதாகும்.

"அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. 1. நான் புத்திசாலியின் பேச்சையே கேட்க விரும்புகிறேன். 2. நான் புத்திசாலியோடு மட்டுமே பேசிக்கொண்டிருக்க ஆசைப்படுகிறேன்" என்றார் அவர்.

* * *

இத்தகைய 'புத்திசாலிகள்' தமிழ் எழுத்துலகத்திலும் ரொம்பப் பேர் இருக்கிறார்கள்.

பெயர் பெற்ற எழுத்தாளர் எவரிடம் வேண்டுமானாலும் பேசிப் பாருங்கள். மேலே குறிப்பிட்டுள்ள பேராசிரியத்தனம் அவருள்ளும் உறைந்து கிடப்பதை நீங்கள் எளிதில் உணர முடியும்.

அந்தக் கதையைப் படித்தீர்களா? இந்தப் புத்தகத்தைப் படித்தீர்களா? அவர் எழுதியுள்ள இதைப் படித்தீர்களா? இவர் எழுதி வருகிற அதைப் படித்தீர்களா? இப்படி எல்லாம் விவரமாக விசாரித்துப் பாருங்கள்.

'படிக்கவில்லை' 'நமக்கு நேரமில்லை' 'எவர் எழுதிய எதையும் நான் படித்ததில்லை' என்று பெருமையோடு சொல்வார் ஸ்ரீமான் எழுத்தாளர். பேசிக்கொண்டே இருந்தால், அவருடைய நிஜமான எண்ணத்தையும் வெட்ட வெளிச்சமாகச் சொல்லி விடுவார்.

"எவன் ஸார் நாம் எல்லாம் படிக்கக்கூடிய வகையிலே நன்றாக எழுதுகிறான்? நாம் நம்முடைய எழுத்துக்களைத்தான் திரும்பத் திரும்பப் படித்து மகிழ்வோம். அப்படிப் படியாத போது, நமது எழுத்தில் கலந்துள்ள அற்புதங்களை எண்ணி எண்ணி நமக்கு நாமே சிரித்துக் கொள்வோம்!" என்று சொல்லுவார், பெயர் பெற்ற ஸ்ரீமான் எழுத்தாளர்.

* * *

அகில இந்திய ரீதியில் ஒரு இலக்கிய ஆராய்ச்சி நடைபெற்றது. ஒவ்வொரு மொழி இலக்கியம் பற்றியும் ஒவ்வொருவர் பேசினர். அம் மொழியின் ஆதி

காலம், இலக்கிய உதயம், வளர்ச்சி, இலக்கிய ஆசிரியர்கள் முதலிய சகல விஷயங்களை யும் பற்றிச் சொன்னார்கள். வருங்கால இலக்கியத்தை வளப்படுத்தும் முறையில் உழைக்கும் இளம் எழுத்தாளர்களில் குறிப்பிடத் தக்கவர்களைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். தமிழ் இலக்கியம் பற்றிப் பேசுவதற்கு ஒரு பேராசிரியர் முன் வந்தார்.

அவர் பேசினார். விரிவாகப் பேசினார். இறந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் ஆகிய முக் காலம் பற்றியும் பேசினார். அவர் பேச்சில் முழுக்க முழுக்க வியாபித்திருந்த விஷயம் என்ன என்று ஆராய்ந்தால், கிடைக்கக் கூடிய விவரம் சுவையானதாகும்.

"ஆரம்ப காலத்தில் நான் எழுதிய கதைகள்........ இடைக் காலத்தில் நான் எழுதியுள்ள அற்புதமான கதைகள்.... இப்போது நான் எழுதிக்கொண்டிருக்கிற மகத்தான நாவல்கள்.... இனிமேல் நான் எழுத எண்ணியுள்ள அபூர்வமான புத்தகங்கள்!' இந்தப் 'பாயின்டு' களை வைத்துக்கொண்டு அலசு அலசு என்று அலசித் தீர்த்து விட்டார் அவர்.

"தமிழ் என்றால் நாம் தான்' நாமே தான் தமிழ் இலக்கியம்!" என்கிற சொந்த நம்பிக்கையைச் சொல்லாக்கி விட்ட பெருமை ஸ்ரீமான் தமிழ்ப் பேரெழுத்தாளருக்குக் கிடைத்து விட்டது. உண்மை! ஆனால், மற்றவர்கள் தமிழ் இலக்கியத்தைப் பற்றிச் சரியாக அறிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது என்பதும் உண்மையின் மற்றொரு பகுதியே ஆகும்.

* * *

இந்த ரக மகானுபாவர்களில் சிலர் விமர்சகர்களாகி விடுவது வழக்கம். அவர்கள் எழுதுகிற விமர்சனங்கள் எப்படி இருக்கும் என்பது சொல்லியா தெரிய வேண்டும்?

விமர்சகர்கள் விதம் விதம்! புத்தகங்களைப் படிக்காமல் புரட்டி விட்டு அட்டைப் படத்தையும் அச்சு அமைப்பையும் பற்றி அளப்பவர்கள்; படித்துப் பார்க்காமலே 'மட்டமான புத்தகம்' என்று தீர்ப்புக் கூறுகிறவர்கள், தங்களுக்கு வேண்டியவர்களையும், தங்களைப் பார்த்துப் பல்லிளித்துக் கும்பிடு போடுகிறவர்களையும் பாராட்டி ஆதரிப்பது; பிறர் எழுதுகிறவற்றைக் குறை கூறுவது எனும் கொள்கை உடையவர்கள்; ஏதாவது கொள்கை—கட்சி என்று சொல்லிக் கொண்டு அந்த ஒரே ஒரு கண்ணோட்டத்தோடு மட்டுமே கவனிப்பவர்கள்; யாராவது மூணு நாலு பேர்வழிகளின் பெயரை மட்டுமே மந்திரம் போல் திரும்பத் திரும்ப முனங்கிக் கொண்டிருப்பவர்கள்; 'இவர்களே மூலவர்கள்' 'இவர்களே பிரம்மா, விஷ்ணு, சிவன்' 'இவர்கள் எழுதுவதே இலக்கியம்' என்று சத்தியம் செய்கிறவர்கள்; இவர் தமிழ் நாட்டு பெர்னாட்ஷா.... இவருடைய எழுத்து ரஷ்ய மேதை டாஸ்டாவ்ஸ்கியின் திறமையை ஞாபகமூட்டுகிறது.... இவர் 'எட்கார் அலன்போ' போல எழுதுகிறார் என்று அநாவசியமாக--சம்பந்தம் கொஞ்சம் கூட இல்லாத—உவமை காட்டி எழுதுவோர், இன்னோரன்ன பிறர்!

இத்தகைய விமர்சன வீரர்கள் உண்மையாகவே இலக்கிய விமர்சனம் செய்ய வேண்டும் என்ற நோக்கம் உடையவர்கள் அல்லர். எப்படியாவது தாங்கள் கவனிப்புப்பெற வேணும் என்பதே இவர்களது லட்சியம்!

* * *

ரஷ்ய ஆசிரியர் ஐவான் டர்ஜனீவ் எழுதியுள்ள அழகான கதைகளில் ஒன்று 'புத்திசாலி' யைப் பற்றியதாகும்.

ஒரு புத்திசாலி இருந்தான், அவனது மேதைத்தனம் மற்றவர்களுக்குப் புரியாமல் போய் விட்டது! ஆகவே, அவனை முட்டாள் என்று எண்ணிவிட்டார்கள் அவர்கள். அவனால்பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. யாரிடமும் எதைப் பற்றியும் தடலடித்தனமாகப் பேசுவது என்று தீர்மானித்தான்.

"ஸ்ரீமான் அவர்களைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?" என்று ஒருவர் கேட்டார்.

"அவனா? சுத்த மடையன்!" என்று ஓங்கி அடித்தான் அவன்.

"மிஸ்டர், இன்னார் ஒரு புதிய புத்தகம் எழுதியிருக்கிறாரே; படித்துப் பார்த்தீரா?" என்று யாராவது கேட்டால், அவன் தயங்காமல் சொன்னான் —

"புத்தகமா அது? வெறும் குப்பை! அவனெல்லாம் ஏன் தான் புத்தகம் எழுத வந்துவிடுகிறானோ தெரியவில்லை!"

கொஞ்ச காலம் வரை அவனுடைய பேச்சு மற்றவர்களுக்கு 'அதிர்ச்சி' யாகப் பட்டது. பிறகு 'அவன் சொல்வதும் சரியாக இருக்குமோ?' என்று சந்தேகம் எழுப்பியது. 'அவன்சொல்வதிலும் உண்மை இருக்கிறாப் போல் தான் தெரியுது' என்று மற்றவர்கள் எண்ணத் தொடங்கினார்கள். அப்புறம் என்ன ஆயிற்று? 'அவன் தான் அறிவாளி. அவன் சொல்வது தான் சரி' என்றே மதிக்கத் தொடங்கி விட்டார்கள்.

இக் கதையில் வருகிற 'அறிவாளி' மாதிரிப் பெயரும் புகழும் பெறத்தான் தமிழ் நாட்டு விமர்சகர்களில் பெரும் பலர் ஆசைப்படுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

* * *

சில பேராசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சுயமாக எதுவும் எழுதுவதில்லை. எங்காவது படித்த ஏதாவது கருத்தை வைத்துக் கொண்டு 'ஜிலு ஜிலுப்பு' வேலை செய்து விடுவார்கள்,

அப்படிப்பட்ட பேராசிரியர் ஒருவரைப் பற்றிய விஷயம் இது. எங்காவதிருந்து எடுத்த அமைப்புகள் மேலே ஜிகினு வேலையும் நகாஸு மெருகுகளும் ஏற்றி சுலபமாகக் கவனிப்பைப் பெறும் பண்பு உள்ள அவருக்கு ஒரு நம்பிக்கை உண்டு. தமிழில் வருகிற எல்லா சிருஷ்டிகளுமே கடன் வாங்கியோ, இரவல் பெற்றோ, காப்பி அடித்தோ, களவாணித்தனம் பண்ணியோ எழுதப்படுகிற விஷயங்கள் தான் என்பது அவரது எண்ணம்.

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டால், அவர் விளக்குவார்:

"சிந்தனை என்பது ஒருவருக்கு மட்டுமே உரித்தானது இல்லையே? ஆராயப் போனால், புதிய சிந்தனை என்று எதுவுமே கிடையாது. சொல்லப்பட வேண்டியவைகள் எல்லாம் பல்வேறு காலங்களில் பலப்பல இடங்களில் உள்ளவர்களால் பலபல விதமாக வெல்லாம்! சொல்லப்பட்டு விட்டன. ஆகவே, என்ன தெரிய வருகிறது? நீர் சொல்வது உமக்குப் புதுசு என்று தான் தோன்றும். ஆனால் அதே கருத்தை உமக்குத் தெரிந்தோ தெரியாமலோ இதற்கு முன்னரே யாராவது எங்காவது சொல்லித் தான் இருப்பார்கள். புரியவில்லை?"

தன்னைப் போலவே பிறரையும் மதிப்பிடும் மனப் பண்பில் விளைந்த விளக்கம்தான் இது.

இந்தரக மனோபாவம்' பெரும் பேர் பெற்ற பேராசிரியர்களுக்கும் இருக்கிறதே! பேஷ் பேஷ்! இதனால், அவர்களும் மனிதர்கள் தான் என்று நன்றாகத் தெரிகிறது, இல்லையா!

அந்தப் பிஞ்சு உள்ளம் நம்பிக்கையின் நிலைத் தளத்திலே நர்த்தனமாடிக் கொண்டிருந்தது. ஆனால் நம்பிக்கையின் எல்லைக் கோட்டிலே நிகழ்ந்த அந்தப் பயங்கர நிகழ்ச்சி........!

★

நம்பிக்கையின்

ரயில் வண்டி பிரயாணிகளை யும் அவர்களுடைய மூட்டை முடிச்சுகளையும் விழுங்கி விட்டு, ஒரு பெரிய மலைப்பாம்பைப் போல, ஸ்டேஷன் குகை யிலிருந்து முன்னேக்கி நகரத் தொடங்கியது. அப்போது என் னுடைய உள்ளத்திலும் வேத னையின் கரும்புகை மேலெழும் பியது. வாழ்க்கையிலே ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அடை வதற்காக வந்துசேர்ந்த ஒரு நகரத்தை விட்டு, விடை பெற் றுக் கொள்ளும்போது யாரு டைய உள்ளந்தான் வேதனை யடையாமல் இருக்க முடியும்? உள்ளத்திலே எண்ண அலைகளை எழுப்பும் எத்தனையோ நிகழ்ச் சிகள்; கசப்பும் இனிப்பும், வெறுப்பும் விருப்பும் ஒன்ருே டொன்று பிணைந்து கிடக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகள். அவற்றின் ஞாபகங்களை மட் டும் சுமந்து கொண்டு இதோ வெறுங்கையுடன் எனது சொந்த ஊருக்குத் திரும்பு கிறேன்.

எனது அன்பிற்குரிய அந்த நகரத்தை கடைசியாக ஒரு முறை பார்ப்பதற்காக, வண்டி யின் சாளரத்தின் வழியே தலையை நீட்டிப் பின்னல் திரும் பினேன். கல்கத்தா நகரின் மாடமாளிகைகளின் கூரைகள் மட்டும் தென்பட்டன. உச்சி வெய்யிலின் ஒளிபட்டு அவை வர்ணக் கம்பளமாக மாறியிருந் தன. கட்டிடங்களின் மாடிகளுக் கெல்லாம் மேலே, ஆகாயத் தைச் சுட்டிக் காட்டும் இயற்கை யன்னையின் விரல்போல, அக் டர்லோனி துரையின் ஞாபகஸ் தூபி தலைதூக்கி நின்றது. உள் ளத்தைக் கவரும் காட்சி என் பதற்காக என் கண்கள் அந்த ஸ்தூபியைப் பார்க்கவில்லை. எனக்கு ஆதரவும் அன்பும் நல் கிய ஒரு நண்பனைப் பார்ப் பதைப் போல நான் அதைப் பார்த்தேன். நீரும் நிழலும் கிடைக்காது தனியாகச் சுற்றி யலையும் ஒரு செம்மறி யாட்டுக் குட்டியைப் போல, கல்கத்தா நகரின் தெருக்களிலே அலைந்து திரிந்த அந்த நாட்களிலே, அந்த ஸ்தூபியினுடைய பாதம் எனக்கு சுமார் ஒண்ணரை மாத காலம் புகலிடம் கொடுத்திருக் கிறது. எனவேதான், வெள்ளைத் துரையின் ஞாபக ஸ்தூபியாக இருந்த போதிலுங்கூட நான் அதை நேசிக்கிறேன். அது மட்டுமல்ல; அந்த ஞாபக ஸ்தூபி எனது மனதை விட்டு மறையாமல் இடம்பெற்று நிற் பதற்கு மற்ருெரு காரணமும் உண்டு.

நலலல பனிநிறைந்த ஒருநாள். சூரியன் மேற்கில் தலைசாய்த்த பின்னர். நகரம் முழுவதையும் மஸ்லின் திரையிட்டு மூடிய தைப் போல, மூடுபனி கவிந்து கொண்டிருந்தது. ரோமத் தொப்பிகளும் சொட்டர்களும் ஓவர் கோட்டுகளும் போட்டு மூடிக்கொண்டு, எஸ்கிமோக் களைப் போல் அதிர்ஷ்டசாலி கள் சென்று கொண்டிருந்தார் கள். ஒரு 'கிழிந்த மப்ளரா'' வது தலையில் கட்டாத டோங் காக்காரனைக்கூட பார்க்க முடி யாது. அக்கடும் குளிரிலே,

மலையாள மூலம்: கே. எம். ஜபார்.
மொழிபெயர்ப்பு: குயிலன்.

எல்லைக்கோட்டில்...!

கதவுகளும் ஜன்னல்களும் உடைய பழைய சட்டையைப் போட்டுக்கொண்டு நான் உத்தியோக வேட்டைக்காக அலைந்து திரிந்தேன். இரவு பத்து மணி வரை சுற்றிவிட்டு, வழக்கம் போல அன்றும் அக்டர்லோனி ஞாபக ஸ்தூபியின் அடியில் உறங்குவதற்கு வந்தேன். என்னைப்போல ஆதரவற்ற அனாதைகள் அந்த ஸ்தூபியின் பாதத்தை சரணடைவது வழக்கம். அன்றும் அடையாளம் தெரியாதபடி மூடிச் சுருட்டிக் கொண்டு அசாதாரணமான பொட்டலம் போன்ற ஒரு வஸ்து அங்கே கிடந்தது. பனி நிறைந்த அந்த மங்கிய நிலவின் ஒளியிலே அது ஒரு நீண்ட பொட்டலமாகத் தென்பட்டது. ஊசி முனை கொண்டு இருதயத்தில் குத்துவதைப் போன்ற கொடிய குளிர். கையிலுள்ள தோல் பையை தலையணையாக்கிக்கொண்டு தரையில் படுத்தேன். இடையில் உடுத்திருந்த வேட்டியை அவிழ்த்துப் போர்த்துக் கொண்டேன். ஆனால் குளிர் என்னுடைய வேட்டியைத் துளைத்துக்கொண்டு உட்புகுந்து வாட்டியது.

குறக்க வலிக்கும் பனியை எதிர்த்து நிற்க சக்தியற்ற அந்த நேரத்தில், கதகதப்பான இளம் உடல்களைப்பற்றி நினைத்துக் கொள்வதுண்டு. கல்கத்தா நகரிலே மிகவும் விலை மலிவான சரக்குகள் மானிட சரீரங்கள். ஆனால் வறுமையின் கொடுமை எனக்கு அதுவும் கிடைக்காமல் செய்துவிட்டது.

“பாபூ தூங்கிவிட்டீர்களா?”

என்னைத் தொட்டு உலுக்கிக் கொண்டு நடுங்குகிற குரலில் யாரோ கூப்பிட்டார்கள். எனது முகத்தை மூடியிருந்த வேட்டியைச் சிறிது விலக்கினேன். தரையில் மறுபுறத்துக் கிடந்திருந்த வஸ்து தான் அது. மேகத்திரையை விலக்கிக் கொண்டு வெளிக்கிளம்பிய நிலவொளியில், அது ஒரு பெண் உருவம் என்பது மட்டும் தெரிந்தது. நான் எழுந்திருந்தேன். அவள் என்னைப் பார்த்துச் சொன்னாள்:

“பாபூ போலீஸ்காரன்....”

“அதற்கு நானென்ன செய்ய வேண்டும்?” குளிரில் விரைத்து நடுங்கும் எனக்கு அவளிடம் சிறிது கோபம் உண்டாகாமல் இல்லை.

“கொஞ்ச நேரத்திற்கு முன்னே அவன் இங்கே வந்திருந்தான். மறுபடியும் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனான்.... அவன் பழிவாங்கி விடுவான்.... பாபூ....”

அவள் மிகவும் படபடப்புடன் பேசினாள். குரல் பயத்தால் நடுங்கியது. அவளுடைய துடிக்கும் குரலிலே ஒரு அசாதாரணமான கவர்ச்சியும் இனிமையும் இருந்தன.

அவள் ஏன் ஒரு போலீஸ்காரனுக்குப் பயப்பட வேண்டும்? அந்தக் குளிர்ந்த தரையிலே படுத்தபடியே, பல பயங்கரமான காட்சிகளை சக்தியற்ற

படி நான் பார்த்துக்கொண்டு கிடந்ததுண்டு. அலைந்து திரியும் வேசைகளுடைய தொழிலுக்கு அதுதான் புகலிடமாக இருந்தது. நடுச்சாமம் வரை. அவர்கள் வலையிட்டுப் பிடித்த வாடிக்கைக்காரர்களுடன் ஊடுவதையும், பிணங்குவதையும் கேளிக்கை நடத்துவதையும் நான் அங்கே பார்த்திருக்கிறேன். போலீஸ்காரர்கள் அதிகார தோரணையில்–வெள்ளைக்காரத் துரை மோஸ்தரில் இருட்டில் அட்டகாசம் செய்வதையும், காரியம் சாதித்துக் கொள்வதையும் பார்த்திருக்கிறேன். அந்தப் போலீஸ்காரர்கள் வழுக்கி விழுந்த பெண்களின் பாதுகாவலர்களாகி யிருந்தார்

கள். அந்த ஸ்தூபியின் அடிவாரத்தை இரவில் வந்து சரணடையும் எந்த அபலையும் போலீஸ் காரர்களுக்கோ, ரௌடிகளுக்கோ பயப்பட்டதை நான் அதுவரை கண்டதில்லை. பின் இவள் ஏன் பயப்பட வேண்டும்?

"பாபூ....பாபூ...."

அவள் மீண்டும் என்னைக் கூப்பிட்டாள். கார்மேகங்கள் விலகி விட்டபடியால் நிலவொளியில் அவளை நன்றாகப் பார்க்க முடிந்தது. பதினைந்து பதினாறு வயதுடைய இளம் பெண் அவள். போர்த்துக் கொண்டிருந்த கிழிந்த கந்தையின் உள்ளிருந்து, எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் இளமை என்னைப் பிரமிக்க வைத்துவிட்டது.

"பாபூ...."

அவளுடைய அழைப்பில் ஒருவித அபயம் தொனித்துக் கொண்டிருந்தது.

"என்ன வேண்டும்?"

"அதோ அவன்..போலீஸ்காரன்."

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"என்னைக் காப்பாற்றுங்கள்."

இதைச் சொல்லிவிட்டு அவள் என் சமீபமாக நகர்ந்தாள். போலீஸ்காரனுடைய தடித்த—குள்ளமான—உருவம் பார்க்கின் முனையிலிருந்து புறப்பட்டு வருவதை நானும் அவளும் கண்டோம். நிராதரவாக இருக்கும் நான் உதவியற்ற அந்த அநாதையை எப்படிக் காப்பாற்றுவது? அவளையும் அழைத்துக் கொண்டு எங்காவது ஓடி மறைந்தால்? அதனால் ஆபத்து



தான் அதிகப்படும். நான் ஒரு கணம்யோசித்தேன்.

"பாபூ....பாபூ...."

எனக்குத் திடீரென்று ஒருவித தைரியம் உண்டானது. நான் கேட்டேன்,

"நீ ஒரு காரியம் செய்வாயா?"

"செய்கிறேன் பாபூ...."

"இன்றிரவு நீ என்னுடன் படுத்து உறங்குகிறாயா?"

பயமும் சந்தேகமும் அலைவிச என்னை உற்று நோக்கினாள். ஒருக்கால் அந்தப் போலீஸ் காரனைக் காட்டிலும் கொடூர மான சிந்தனை, என்னகத்திலும் தோன்றிவிட்டதோ என்று அவள் சந்தேகப்படலானாள். உண்மையைச் சொல்லப் போனால், நானும் அப்படி ஒன்றும் துறவியல்ல! போலீஸ் காரனிடம் காணப்படும் அதே மிருக வெறி, என்னிடமும் தலை தூக்குவதுண்டு. அவளுடைய பயம் நிறைந்த பார்வையிலும் சந்தேகத்திலும் அர்த்தமில்லாமலில்லை.

"பாபூ....நான் ஏழை...."

அதைச் சொல்லும் போது அவளுடைய உதடுகள் நடுங்கின. நான் அவளுடைய நடுங்கும் கரங்களைப்பற்றிக்கொண்டு கூறினேன். "பயப்பட வேண்டாம். நான் உன்னுடைய சகோதரன். நீ நிச்சயமாகநம்பலாம்"

இதைக் கேட்டதும் அவள் இன்னும் நன்றாக நெருங்கி உட்கார்ந்து கொண்டாள்.

போலீஸ்கார்னுடைய காக்கி புடையும் கம்பளத் தொப்பியும் கண்ணில் பட்டன.

நான் அவளிடம் மெதுவாகக் கேட்டேன்,

"உன்னுடைய பேரென்ன?"

"ரேஷ்மா."

"ரேஷ்மா, அப்படியானால் நீ ஒரு காரியம் செய். நீ என்னை நன்றாக ஒட்டி நெருக்கிக் கொண்டு படுத்துக் கொள். மற்ற விஷயங்களையெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்".

ரேஷ்மாவினுடைய மிருதுவான கரங்கள் தாமரை மலர்களைப்போல என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டன. நாங்கள் அப்படியே தூங்குவதைப் போல பாசாங்கு செய்து கொண்டு கிடந்தோம். போலீஸ் காரனின் லாடமடிக்கப்பட்ட பூட்ஸ்களின் சப்தம் நெருங்க நெருங்க, ரேஷ்மாவினுடைய இளம் இதயம், புருவின் இறக்கைகளைப்போல் வேகமாக படபடவென்று அடித்துக் கொண்டது.

போலீஸ்காரன் தரை முழுவதையும் பார்த்துவிட்டு நாங்கள் படுத்திருந்த இடத்தை நெருங்கினான்.

"அவள் எங்கே?"

தூங்கி விழித்தவனைப்போலக் கொட்டாவி விட்டேன். நெளித்து முறுக்கிக் கொண்டே உறக்கம் தெளியாதவனைப் போலே பேசினேன்.

"யாரை கேட்கிறீர்கள்?"

"அவளெங்கேயடா?" என்று அதட்டிக் கொண்டே போலீஸ்காரன் எங்கள் சமீபத்தில் வந்து கூர்ந்து பார்த்தான்.

"ஓ.......ஜமேதார் பாபூவா? பாபூ....... யாரைத் தேடுகிறீர்கள்?"

"அவள் தான். இங்கே பக்கத்தில் கிடந்தாளே ஒரு சிறுக்கி."

"ஓஹோ குட்டியா? அவளைச் சிறிது நேரத்திற்குமுன் ஒரு 'பட்டான்' வந்து கொண்டு போய்விட்டார்.

"என்ன?"

"ஆமாம் ஜமேதார் சாப். ஒரு சிவப்பு மீசைக்கார பட்டான் வந்து கொண்டு போய் விட்டார்."

"எங்கே கொண்டு போனார்?"

"அதோ அந்த புட்பால் மைதானத்துப் பக்கமாக."

"இவள் யாரடா?"

"இவளா? இவள் என்னுடைய பெண்டாட்டி பாபூ. உடம்புக்குச் சௌகரியமில்லை. சுய நினைவில்லாமல் கிடக்கிறாள்."

நான் சொன்ன யாவையும் அவனால் முழுக்க நம்ப முடியவில்லை. அவன் இன்னும் சற்று நெருங்கிவந்து ரேஷ்மாவை உற்று நோக்கினான். என்றாலும் முக்காடிட்டுக் கிடந்த அவளை அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ரேஷ்மாவின் முக்காட்டை நீக்கிப் பார்க்கும் தைரியமும் அவனுக்கு உண்டாகவில்லை.

முணு முணுத்துக் கொண்டே அவன ரேஷ்மாவைத் தேடிக் கொண்டு போய்விட்டான்.

அவன் சென்று மறைந்தபின் நான் அவளுடைய முக்காட்டை நீக்கினேன். பயத்தால் அவளுடைய சின்னஞ் சிறிய முகம் கூம்பிப் போயிருந்தது.

"அவன் போய்விட்டான். இனிப் பயப்பட வேண்டாம். நீ அங்கே போய்ப் படுத்துக் கொள்."

"வேண்டாம். நான் இங்கேயே படுத்துக் கொள்ளுகிறேன். அவன் மறுபடியும் வருவான்."

அவள் முகத்தை மூடிக் கொண்டு உறங்கிவிட்டாள். அவளுடைய சரீரத்திலிருந்து உண்டாகிய கதகதப்பு. என்னுடைய மயிர்க்காம்புகள் வழியாகப் புகுந்து என்னுடைய ஆத்மாவை புளகாங்கிதப் படுத்துவது போலிருந்தது. அவள் என்னை எவ்வளவு தூரம் நம்பியிருக்கிறாள் என்ற எண்ணம் என்னை மனிதனாக்கிக் கொண்டிருந்தது. வைகறையாவதற்கு இன்னும் எத்தனையோ நாழிகைகள் கழிய வேண்டும். அவ்வளவு நேரத்தையும், **அமுத கலசத்தை** அதரத்தின் அருகிலே வைத்துக் கொண்டு நிர்விகாரனாக—சலனமற்ற வைர மனத்துடன் கழிக்க வேண்டும்.

ரேஷ்மா இரவு முழுதும் என்னுடனே படுத்துறங்கப் போகிறாள். அவளுக்கு என்னிடம் பரிபூரணமான நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அவள் என்னிடம் வைத்துள்ள களங்கமற்ற நம்பிக்கையின் கழுத்தை நெறித்துக் கொன்று தகர்த்தெறிந்தால் அதைப் போல அபராதம் வேறென்ன இருக்க முடியும்! ரேஷ்மாவின் நனைந்த கண்ணிமைகள்; ஓராம்பல் பூவைப்போன்ற மென்மையான அவளுடைய முகம்; அவளுடைய இதயத்திலே துளிர்விட்டு நிராதரவாகத் துவண்டு கொண்டிருக்கும் ஆசைக் கனவுகள்!.... ஐயோ பாவம்! நான் அந்த மகாபாபத்தை— மிருகத்தனத்தைச் செய்யமாட்டேன். கணநேரத்தில் மறையக்கூடிய அந்த இன்பத்தைவிட, ஒரு ஏழைப் பெண்ணைக் காப்பாற்றினேம் என்பதிலுள்ள ஆத்ம திருப்தி எவ்வளவோ மகத்தானது!

எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. நான் ரேஷ்மாவைப் பற்றிய சிந்தனைகளிலே மூழ்கிக் கிடந்தேன். அவள் ஒரு விபசாரியல்ல என்பது உறுதி. ஆனால் அக்டர்லோனி ஸ்தூபியினடியில் இரவைக் கழிக்கும் பெண்களில் பெரும்பாலோரும் பத்தினிகளல்ல. அப்படியானால் ரேஷ்மா யாராக இருக்கலாம்?

"ரேஷ்மா தூங்கிவிட்டாயா?"

"இல்லை பாபூ".

"ரேஷ்மா, நீ யாரென்பதைச் சொல்லவில்லையே".

"நானா. நான் ஒரு கிழக்கு வங்காளப் பெண்".

"நீ ஏன் இங்கு வந்தாய்?"

"பாபூ உங்களுக்குத் தெரியவில்லையா? நான் ஒரு அகதி"

"என்ன அகதியா?"

"ஆமாம் பாபூ. இந்த உலகத்தில் சகலத்தையும் இழந்துவிட்ட ஒரு அகதி. வீட்டை எரித்துச் சாம்பலாக்கி விட்டார்கள். அப்பாவையும் அம்மாவையும் மற்றவர்களையும் பிடித்துக் கொலை செய்துவிட்டார்கள். ஆனால் நான் மட்டும் உயிர்தப்பினேன். ஆனால் உயிர்தப்பாமல் இருந்திருந்தால் அதுவே நல்லதென்று இப்போது தோணுகிறது.... நாங்கள் மானத்தோடு வாழ்ந்து வந்தோம். ஏதோ கொஞ்சம் நிலபுலம் இருந்தது. இரண்டு ஜோடி அருமையான காளைகள்........"

அந்த ஏழைக் குடியானப் பெண் தனது கடந்தகால வாழ்வை நினைத்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள். ரேஷ்மாவைப் போல் இன்னும் எத்தனையோ அகதிகளை நான் பார்த்திருக்கிறேன். அவர்களில் பல இளம் பெண்கள், சொந்தச் சதையை விற்று உயிர் வாழுகிறார்கள். காமக் கழுகுகள் வட்ட மிட்டுச் சுற்றும் இந்த நகரத்தில். ரேஷ்மா அவளுடைய புனிதத்தன்மை கெடாமல் எவ்வளவு காலம் வாழ முடியும்?

"ரேஷ்மா" என்று மெதுவாக அழைத்தேன்.

"உம்" என்னும் குரல், அவளுடைய சேலைத் தலைப்புக்குள்ளிருந்து மிருதுவாகக் கேட்டது.

"நீ எவ்வளவு நாள் இப்படி வாழ முடியும்?" சிறிது நேரம் வரை ஏதும் பதிலே வெளிவரவில்லை. சிறிது நேரம் கழித்து மௌனம் கலைந்தது.

"அமாரைக் கண்டு பிடிக்கும் வரை. நான் இங்கே எப்படியாவது வாழத்தானே வேண்டும்"

"அது யார் இந்த அமார்?"

"அவர் என்னுடைய......" ரேஷ்மா வாக்கியத்தை முடிக்காமல் அப்படியே நிறுத்திவிட்டாள்.

"அமார் உன்னுடைய அத்தானு?" என்று பட்டவர்த்தனமாகக் கேட்டேன். அமார், அவளுடைய காதலனுகத்தான் இருக்குமென்று எனக்குப் பட்டது. அமாரைப் பற்றி மேலும் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை தலை தூக்கியது.

"அமாரும் உங்கள் ஊர் தானு?"

"ஆமாம், எங்கள் அடுத்த வீட்டு அசுதோஷ் சட்டர்ஜியின் இளைய மகன் அவர். கொள்ளைக் கூட்டத்தார் அமாரின் அப்பாவைக் குத்திக் கொன்றுவிட்டார்கள். அமாரின் இளம் சகோதரியைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். அப்புறம் அமாரும் அவருடைய அம்மாவும் தப்பியோடி இந்தப் பக்கம் வந்துவிட்டார்கள்."

ரேஷ்மா மௌனமாகிவிட்டாள். ஒரு வேளை அவள் தனது காதலனைப் பற்றிய இன்பக் கனவுகளிலே ஆழ்ந்திருக்கலாம். இடிந்து தகர்ந்துவிட்ட எனது காதலைப்பற்றியும் நான் ஒரு நிமிஷம் நினைத்துப் பார்த்துக்கொண்டேன். ஆசை நிரம்பிய உள்ளத்தோடு நானும் ரேஷ்மாவைப் போலக் காத்துக் கிடந்ததுண்டு. அழகிய கனவுகள் கண்டதுண்டு. ஆனால் இன்று அவள் எந்தக் கணவனின் அணைப்பிலே வாழ்கிருள் என்பது கூட எனக்குத் தெரியாது. ஒரு வேளை என்னுடைய கனவுகளைப் போலவே ரேஷ்மாவின் கனவுகளும் தகர்ந்து போகுமோ?

இந்த ஆத்ம விசுவாசத்தின் பலமான வேலியினால் தான், ரேஷ்மா அவளுடைய பெண்மையை கொடுமைகளிலிருந்தும் காப்பாற்றிக் காத்திருக்கிருள். எல்லாம் அவளுடைய அமாருக்காக! இல்லாவிட்டால் அவளும் ஒரு வேசையாகி, சுகமாக வாழ்ந்திருக்க முடியும். அதற்கு ஏற்ற சூழ்நிலையையும், அழகையும், இயற்கை அவளுக்கு உண்டாக்கியிருந்தது.

* * *

"பாபூ, பாபூ" என்று ரேஷ்மா என்னை உலுக்கி எழுப்பிய பின்தான் நான் விழித்துக் கொண்டேன். நன்ருக விடிந்துவிட்டது.

"ரேஷ்மா, நீ இனி எங்கே போகப் போகிருய்?"

"ஜாதவப் பூருக்குப் போக வேண்டும். இதுவரை நான் அங்கே போகவில்லை. ஒரு வேளை அமார் அங்கே இருந்தாலும் இருக்கலாம்."

"சரி, நீ கொஞ்சம் நேரம் கழித்துப் போகலாம். நான் உனக்குக் காப்பி வாங்கித் தருகிறேன்."

ரேஷ்மா ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவளுடைய அதரங்களில் ஒரு துடிப்புமட்டும் தென்பட்டது.

நான் வழக்கமாக டீக் குடிக்கும் ஒரு சிறிய கடையுண்டு. அது ஒரு சின்னஞ்சிறிய சந்தில் இருந்தது. எல்லாச் சாமான்களும் மிகவும் மலிவான விலைக்குக் கிடைக்கும் என்ற காரணத்தால் தான் நான் அங்கு போவது: நானும் ரேஷ்மாவும் அந்தக் கடைக்குச் சென்ருேம் கடையில் காலை வைத்ததும் உடனே ரேஷ்மா "அமார்!" என்று உரக்கக் கூவினுள்.

நான் திரும்பிப் பார்த்தேன். கல்லாப்பெட்டிக்கு எதிரில் உட்கார்ந்திருந்த இளைஞனைக் கண்டுதான் ரேஷ்மா அப்படிக்

கூவினுள் என்பதை அறிந்து கொண்டேன். டீக்கடையின் சொந்தக்காரன்தான் அவளுடைய அமார்!

ரேஷ்மா அடக்க முடியாத ஆனந்தத்தோடு கல்லாப்பெட்டியை நோக்கிப் பாய்ந்தோடினுள். ஆனுல் அமார் மட்டும் யாதொருவித சலனமுமற்றபடி அவளேப் பார்த்துக் கொண்டிருந்தான். அமாரின் அந்த நிர்விகார நிலே ரேஷ்மாவை விம்மியழச் செய்தது. அப்படியிருந்தும் அவன் ஒன்றும் பேசவில்லே. இந்த நிலேயைக் கண்டு என்னுள்ளே கோபம் பொங்கி எழுந்தது. நானும் கல்லாவிடம் நெருங்கிச் சென்றேன்.

"உங்களுக்கு ரேஷ்மாவைத் தெரியவில்லேயா?"

"தெரியும். ஒரு காலத்தில் எங்கள் அடுத்த வீட்டுக்காரியாக இருந்தாள். அவ்வளவுதான். கல்கத்தாவிலே இந்த மாதிரி அகதி வேசைகள் எத்தனேயோ பேர்?"

அவனுடைய பதிலேக் கேட்டு நான் நடுங்கிப் போனேன். ரேஷ்மா மனம் உடைந்து நிலே குலேந்து போனுள்.

ரேஷ்மாவின் குற்றமற்ற தன்மையைப்பற்றியும் அவள் இந்த மூர்க்கனுக்காக வேண்டி பொறுத்துக்கொண்ட வேதனேகளேப் பற்றியும், செய்த தியாகங்களேப் பற்றியும் அவனிடம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று தோன்றியது. ஆனுல் அந்த மிருகத்திடம் சொல்லித்தான் என்ன பயன்? அவன் நெஞ்சு அவ்வளவு கல்லாக இருந்தது.

நான் ஒன்றுமே பேசவில்லே. அவள் கண்ணீர் வடித்தபடியே வெளியேறி எங்கோ வேகமாகச் சென்றுள். நான் அவளேக் கூப்பிட்டுப் பார்த்தேன். ஆனுல் அவள் நிற்கவில்லே. ஒரு டிராம் வண்டி வந்து கொண்டிருக்கையில் குறுக்கே ஓடிக் கடந்து ஜனக்கூட்டத்திற்குள் மறைந்து விட்டாள்.

* * *

மூன்று மாதங்கள் ஓடிமறைந்தன. என்னுடைய வாழ்க்கை பழைய நிலேயிலிருந்து ஒரு படி கூட உயரவில்லே. ஒரு நாள் இரவு வேசைகள் நிறைய வசிக்கும் ஒரு தெருவின் வழியே போகவேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. அச்சமயம் திடீரென்று யாரோ என்னேயழைத்தார்கள்.

"பாபூ! பாபூ!" என்ற குரல் என்னுடைய செவிகளிலே பாய்ந்தன.

நான் திரும்பிப் பார்த்தேன். ஒரு சிறிய வீட்டின் நிலேப்படியில் நின்று கொண்டு, ஒரு இளம்பெண் என்னேக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். முகத்தை நன்ருக உற்றுநோக்கினேன். என்னுடைய உள்ளத்திலே பேரிடியின் மின்னலொன்று பாய்ந்தது. ஆம், ரேஷ்மாதான்!

கண்ணேக்கவரும் பகட்டுப் பட்டை உடுத்து, லிப்ஸ்டிக்கும் பவுடரும் பூசி, ரேஷ்மா "அதிகாரபூர்வமான" வேசையாக மாறியிருந்தாள்.

"ரேஷ்மா! நீயா இப்படியாகிவிட்டாய்!" என்று கேட்கும் பொழுது என்னுடைய அடித் தொண்டையிலிருந்து வார்த்தைகள் சரிவர எழவில்லே.

அவள் கண்ணிமைகள், பனித்துளிபட்ட புல் நுனிகள் போல் நனேந்து நின்றன. கண்ணீரின் முத்துக்கள் இரவின் மங்கிய ஒளியில் மின்னின. என்னுடைய உள்ளத்திலே வெறுப்புணர்ச்சியைவிட அநுதாபந்தான் மேலோங்கி நின்றது. நான் எதுவுமே சொல்லாமல் தலேயைக் குனிந்தபடி திரும்பி நடந்தேன்.

சிந்தனைக்கு அப்பால்..

"புனர்வஸு"

பெரிய சாலையின் அருகாமையில் இருந்த பூங்காவில் ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்ந்திருந்தேன். வளைந்து செல்லும் அச்சாலை, பூங்காவிலிருந்து பார்த்தால் வெகு தூரம் வரை கண்ணுக்கு நன்றாகத் தெரியும். தொலைவிலிருந்து ஒரு 'கார்' புழுதியை வாரியிறைத்துக் கொண்டு கன வேகமாக வந்து கொண்டிருந்தது. இமை கொட்டாமல் கார்வரும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தேன். பாதையில் ஜனங்கள் குறுக்கும் நெடுக்குமாக சென்று கொண்டிருந்தார்கள். ஆனால் சற்றும் தணியாத வேகத்தில் கார் வந்து கொண்டிருந்தது.

கூப்பிடு தூரத்தில் ஒரு பெண் சாலையின் எதிர்ப்புறமிருந்து ஏதோ சைகை காட்டிக் கொண்டிருந்தாள். தன்னைக் கூப்பிடுகிறாள் என்று நினைத்தோ என்னவோ, நான்கு வயதிற்கும் குறைவாகயிருக்கும் ஒரு சிறுவன் சாலையில் இறங்கி விட்டான் எதிர்ப்புறம் செல்ல. இச்சமயம் சற்று பலமாகக் காற்று வீசவே மண்ணை வாரியிறைத்தது. நான் துணியினால் என் கண்ணைத் துடைத்துக் கொள்ளுவதற்குள் வேகமாக வந்து கொண்டிருந்த கார் 'சர்' என்று கோரமான சப்தத்துடன் நின்றது.

நான்கு பக்கத்திலிருந்தும் ஜனக்கூட்டம் ஓடி வந்தது. நானும் ஓடிச் சென்றேன். பாதையின் குறுக்கே இறங்கிய அச்சிறுவன்தான் காரில் அகப்பட்டுக் கொண்டான் என்று எண்ணினேன். ஆனால் அச்சிறுவனை வராமல் தடுக்க சைகை காட்டிய அப்பெண் காரின் முன் சக்கரத்தில் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தாள். என் மனம் துடிதுடித்தது. காரை ஓட்டி வந்த ஆசாமியைக் காண விரைந்தேன். அவரைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பல கச்சேரிகளுக்கும் பிரபல மனிதர்களின் விருந்துகளுக்கும் தலைமை தாங்கும் அப்பேர்வழியை நான் பல முறை பல இடங்களில் பார்த்திருக்கிறேன்.

நான் அவர் முன் சென்று, ''ஸார், போலீஸுக்குத் தகவல் கொடுத்து விட்டீர்களா?'' என்று கேட்டேன்.

என் கேள்வியினால் அதிர்ச்சியுற்ற அந்த கொலைப் பாதகன்,

என்னை மறைவாக இருக்கும் மரத்தடிக்கு அழைத்துச் சென்ருர். மணிபர்ஸிலிருந்து கையளவு ரூபாய் நோட்டுகளை எடுத்து என் கைகளில் திணித்தார். அவரது பாதகத்தை உணர்ந்த நான் ஆவேசங் கொண்டவனுக "என்ன ஸார், ஆளைப் பார்த்தால் பெரிய மனிதராய் இருக்கிறீர்கள். இந்த நீசமான வேலை செய்யத் துணிந்து விட்டீர்களே. உங்களுக்கு அவமானமாக இல்லை?" என்று கூறிவிட்டு என்னைப் பிடித்திருந்த அவர் கைகளை உதறித் தள்ளிவிட்டு கார் இருக்குமிடம் வந்தேன். ரூபாய் நோட்டுகளெல்லாம் கீழே சிதறின.

நான் நேராக எதிரேயிருந்த ஒரு ஓட்டலுக்குச் சென்று போலீஸ் கமிஷனர் ஆபீஸுக்குப் 'போன்' செய்தேன். அடுத்த சில நிமிஷ நேரத்தில் இரண்டு போலீஸ் லாரிகள் வந்து சேர்ந்தன.

"யார் காரை ஓட்டி வந்தது?' என்று போலீஸ் அதிகாரி கூட்டத்தை நான்கு பக்கங்களும் பார்த்தபடி கேட்டார்.

"நான் தான் ஓட்டி வந்தேன்" என்று ஒரு ஆசாமி முன் வந்து சொன்ஞன்.

அந்தப் புது ஆசாமியைப் பார்த்ததும் எனக்குப் பெரிதும் வியப்பாக இருந்தது. 'சரி, மேலே என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்று படபடத்த மனதுடன் அங்கு நின்றிருந்தேன்.

"உன் பெயரென்ன?" என்று போலீஸ் அதிகாரி அந்த ஆசாமியைக் கேட்டார்.

"ராகவ நாயுடு" என்று பதிலளித்தான்.

"நீ யாருடைய டிரைவர்?"

"ராவ் பகதூர் ஜகதீசனுடைய டிரைவர்"

"பூரா அட்ரஸையும் சொல்லையா" என்று இன்ஸ்பெக்டர் டிரைவரை அதட்டினுர். இன்ஸ்பெக்டர் ஊருக்குப் புதிது போலிருக்கிறது. இல்லாவிட்டால் ஊருக்குப் பெரும் புள்ளியான ஜகதீசனின் விலாசம் யாவருக்கும் தெரிந்திருக்கும் போது இவருக்குத் தெரிந்திருக்காமலிருக்க நியாயமில்லையே" என்று எண்ணினேன்.

"உங்க ஐயா வண்டியிலே வந்தாரா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"இல்லை" என்று பதிலளித்தான் டிரைவர்.

ஒரு விஞடி நான் திகைத்து விட்டேன். அந்த டிரைவரை ஒரே அறையாக அறைந்து விடலாமா என்று துடித்தேன். கூட்டத்தைச் சுற்றிலும் பார்த்தேன். ராவ் பகதூரை எங்கும் காணேம். டிரைவரைப் பழியை



ஏற்கச் செய்துவிட்டு அவர் ஓட்டம் பிடித்து விட்டார் என்பதை உணர்ந்து கொண்ட போது இந்த அப்பாவி டிரைவர் மீது எனக்கு இருந்த ஆத்திரம் தணிந்து, இப்போது அனுதாபந்தான் பிறந்தது. பிறகு சாலையைக் குறுக்கும் நெடுக்கும் அளந்தார் போலீஸ் அதிகாரி. இன்னும் என்னவெல்லாமோ செய்து விட்டு பிணத்தை எடுத்துக் கொண்டு போக ஆஸ்பத்திரிக்குப் 'போன்' செய்தார்.

மீண்டும் டிரைவரை இன்ஸ்பெக்டர் கேள்வி கேட்கவாரம்பித்தார்.

''நீ எத்தனை மைல் வேகத்தில் காரை ஓட்டிக் கொண்டு வந்தாய்?''

டிரைவர் ஊமைபோன்று சிறிது நேரம் விழித்தான். இன்ஸ்பெக்டர் எதிரே சென்ற நான், ''ஸார், இந்த டிரைவர் சொன்னதெல்லாம் பொய். உண்மை இதுதான். வேண்டுமானால் என் சாட்சியத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றேன். என் துணிச்சலைக் கண்டு இன்ஸ்பெக்டர் உட்பட யாவரும் வியந்தனர்.

''சரி, சொல்லுங்கள்'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். நானும் நிகழ்ந்த, என் கண்ணால் கண்ட விஷயங்களை ஒன்றுவிடாமல் விபரமாக எடுத்துக் கூறினேன்.

நான் சொன்ன எல்லா விவரத்தையும் குறித்துக் கொண்ட இன்ஸ்பெக்டர் என் வீட்டு விலாசத்தையும் குறித்துக் கொண்டார்.

நான் இன்ஸ்பெக்டரிடம், ''ஸார், ஒன்று மறந்துவிடாதீர்கள். ராவ்பகதூர் ஜகதீசன் மீது ஐந்து குற்றங்கள் இருக்கின்றன. மறந்துவிட வேண்டாம். என்னை என்று வேண்டுமானால் சொல்கிறேன்.'' என்றேன்.

''அவசியமில்லை, அது எங்களுடைய வேலை'' என்றார் இன்ஸ்பெக்டர் சற்று கடுகடுப்பாக.

மன நிம்மதியைத் தேட பார்க்கிற்குப் போவோம் என்றால் மனச் சஞ்சலத்துடன் திரும்ப நேர்ந்ததே என்று நினைத்துக்கொண்டே வீடு திரும்பினேன்.

வழியில் ஒரு சைகிளில் சிறு பையன் ஒருவன் சென்று கொண்டிருந்தான். பணக்காரப் பையன் போலிருக்கிறது. பாதையில் குறுக்கும் நெடுக்குமாக ஏதோ ஒரு பாட்டை முணு முணுத்தபடி அலட்சியமாக பாதையில் வருவோர் போவோரையும் சட்டை செய்யாது சவாரி செய்து கொண்டு சென்றான். எதிரே வந்த நாய்க் குட்டி ஒன்று அவன் சைகிளில் அகப்பட்டுக் கொண்டு 'வீல், வீல்' என்று கத்தியது. இன்னும் கொஞ்ச தூரத்தில் ஒரு ரிக்ஷாக்காரன் பளுவான சாமானை ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். குறுக்கும் நெடுக்குமாக சைகிளை விட்டுச் சென்ற பையனைத் தவிர்க்கப் பல முறை ரிக்ஷாக்காரன் மணி அடித்தான். ஆனால் அந்த பையன் ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளாது வேகத்தை இன்னும் அதிகரித்தான். ஓரமாகச் சென்ற ரிக்ஷாவின் மீது மோதினான். மறுகணமே சைகிள், ரிக்ஷா இரண்டும் அந்தப் பையன் மீது விழுந்துவிட்டன, கீழே அகப்பட்டுக் கொண்ட பையன் பெரிதாக சத்தம் போட்டான். அருகிலிருந்த பங்களாவிலிருந்து ஒரு வேலைக்காரன் ஓடி வந்தான், சற்று நேரத்தில் அந்த பையனின் தாயார் மற்றவர்களும் வந்து விட்டனர்.

பிறகு போலீஸுக்குத் தகவல் பறந்தது. ரிக்ஷாக்காரன்

மிகவும் அலக்ஷியமாக ஓட்டிச் சென்றதாக கேஸ் எழுத ஆரம் பித்தார் இன்ஸ்பெக்டர்.

குறுக்கிட்ட நான், "இன்ஸ் பெக்டர் ஸார், நான் சொல் வதையும் கொஞ்சம் எழுதிக் கொள்ளுங்கள். இந்த ரிக்ஷாக் காரன் நிரபராதி. இந்தப் பையன் மீதுதான் தவறு" என்று கூறினேன்.

நான் சொன்னதைத் தடுத்த அந்த சிறுவனின் தாயார், "இன்ஸ்பெக்டர், ரோட்டில் போகும் கண்டவர்களை சாட்சி யாகப் போடாதீர்கள்" என்று என்னைப் பார்த்தவாறே கூறி னாள்.

கீழே விழுந்த அந்தப் பைய னுக்கு தலையில் சரியானகாயம். அதன் காரணமாக ரிக்ஷாக் காரனை சாமானுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றுவிட்டார் இன்ஸ்பெக் டர். அவன் மீது ஏதோ கேஸ் ஜோடித்து 'லாக்கப்பில்வைத்து விட்டனர். என் வாக்கு மூலத் தையும் போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்துவிட்டு வீடு திரும்பி னேன்.

இரண்டு கேஸ்களுக்கு நான் சாட்சியை ஏற்று அதற்குத் தகுந்தாற்போல் ஐட்ஜ் தீர்ப் பளிக்க வேண்டும் என்று உறுதி கொண்டேன். எனக்குத்தெரிந்த அட்வகேட் கோபிநாத் அவர் களிடம் இரண்டு கேஸையும் விவரமாக எடுத்துரைத்தேன். அவரிடமிருந்து இந்த வழக்கு சம்பந்தமாக உபதேசத்தையும் பெற்றுக் கொண்டேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு என்னைத் தேடி ஒரு புதிய கார் வந்தது. காரிலிருந்த ஆசாமி என்னைப் பார்த்ததும் புன்முறு வலித்தபடியே கைஎய்க் கூப் பினார்.

"ஓஹோ, நீங்களா, வாருங் கள் ராவ்பகதூர்வாள்" என்று கூறி எதிர்கொண்டழைத்தேன்.

'அவர் வந்த தோரணையைப் பார்த்தால், "என்னை லகுவாக ஏமாற்றி அவருடைய கேஸை அவருக்குச் சாதகமாக செய்து விடுவேனென்று இருந்தது.

அவரே ஆரம்பித்தார் :

"அந்தப் பெண் மீது நான் வேண்டுமென்று காரை ஏற்றி னேன். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த உங் களுக்குப் புரிந்திருக்குமே எது உண்மையென்று. வீணுக இன்ஸ் பெக்டரிடம் உங்கள் சாட்சியத் தைக் கூறி இருக்கிறீர்களே இது உசிதமா?" என்று கைகளைப் பிடித்தவாறு கெஞ் சிக் கேட்டார்.

"இப்பொழுது நான் ஒன்றும் செய்வதற்கில்லை ஸார், நான் ஏற்கனவே என் வாக்கு மூலத்தை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்துவிட்டேன்" என்று கண்டிப்பான தொனியில் பேசி னேன்.

"அதனுல் பரவாயில்லை......." என்று கூறிக் கொண்டே சிரித் தார் ராவ்பகதூர்.

சரிதான், இவருக்கு உடந் தையாக போலீஸ் காரர்களும் இருக்கிறுர்கள் போலிருக் கிறது. அதனுல்தான் கேஸை அடியோடு அழுக்கப் பார்க் கிறுர்கள், என்று தீர்மானம் கொண்டதும் என் மனம் கொதித்தெழுந்தது.

"ஸார், நீங்கள் நினைப்பது போல் ஒன்றும் நடக்காது. உண்மை என்றும் மறையாது, என் மனச்சாட்சிக்கு விரோத மாக நான் நடக்க மாட்டேன்" என்று கூறிவிட்டு 'விர்,' ரென உள்ளே வந்தேன். நான் வந்த வேகத்தில் ராவ்பகதூர் கையிலி ருந்த கனத்த மணிபர்ஸ் 'பொத்' தென கீழே விழுந்தது.

ராவ்பகதூர் காரும் மறு கணமே 'விர்' ரெனப் பறந்தது.

எனக்கு ஒரு யோசனை தோன் றிற்று. ராவ்பகதூர் டிரைவரைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஜாமீன் பேரில் ராகவ நாயுடு விடுபட்டிருக்க வேண்டும் என்று உறுதி கொண்டு அவனது வீட்டு விலாசத்தை அறிந்து அங்கு சென்றேன். அப்பொழுது நாயுடு வீட்டிலில்லை. அவனுடைய மனைவி மாத்திரம் தான் இருந்தாள். 'சரி, இது நல்ல சமயம்' என்று அவன் மனைவியை சற்று கூப்பிட்டேன்.

"உங்களுக்கு விஷயம் தெரியுமா?" என்று பூடகமாகவே பேசினேன்,

"அது சரி, நீங்கள் யார் என்று முதலில் சொல்லுங்கள்" என்று வினவினுள் அந்த பெண்.

"வாஸ்தவம் தான். என்னைப் பற்றி அறிமுகம் செய்து கொள்ளாதது என் குற்றமல்லவா?" என்று நினைத்தேன். என்னைப் பற்றி ஒரு அபாண்டப் புளுகைக் கூற முற்பட்டேன். அப்பொழுதுதான் என் காரியம் கைகூடும் என்று நம்பிக்கை இருந்தது.

"நான் ஒரு ஸி. ஐ. டி. போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வருகிறேன். உங்கள் வீட்டுக்காரர் மீது ஒரு பெண்ணை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது" என்று நான் பேச்சை முடிப்பதற்குள் அவள் துடிதுடித்துப் போய் விட்டாள்.

"என்ன கொலைக் குற்றமா?" என்று அவள் அலறினுள்.

"உங்களிடம் ஒரு சமாச்சாரமும் அவர் சொல்லவில்லையா?" என்று கேட்டேன்,

"ஐயய்யோ, என்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே அவர்" என்று குய்யோ முறையோ என்று கூப்பாடு போட ஆரம்பித்தாள் அவள். என் காரியம் பாதி கைகூடிவிட்டது என்று மீண்டும் சமாச்சாரத்தைக் கூறலானேன்.

"இதோ பாரம்மா, நீ இப்பொழுது அழுவதில் ஒரு பிரயோசனமுமில்லை. உன் வீட்டுக்காரர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதன்படி ஏழு வருஷமோ எட்டு வருஷமோ ஜெயிலுக்குப் போகத்தான் வேண்டும். அதை ஒருவரும் தவிர்க்க முடியாது. ஆனல் அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் நினைத்தால் நடக்கும். அதற்கு உன் உதவி வேண்டும்......." என்று பேச்சை 'சட்' டென்று அந்த இடத்தில் நிறுத்தினேன். சுற்று முற்றும் பார்த்தேன் நாயுடு வருகிருனுவென்று.

"நீங்க என்னய்யா சொல்றீங்க; அதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களேன். என் வீட்டுக்காரர் ஜெயிலுக்குப் போகாமலிருக்க நீங்க என்னை என்ன செய்யச் சொன்னுலும் செய்கிறேன்" என்று கண்ணீர் விட்டபடியே சற்று நகர்ந்து வந்தாள்.

"அப்படி வா வழிக்கு" என்று நான் மனத்திலே நினைத்துக் கொண்டேன்.

பிறகு, "இதோ பார். உங்க வீட்டுக்காரர் நிஜமா கொலையிலே ஒண்ணும் பண்ணலை. ஆனல் அவங்க எஜமான் இருக்காரே ராவ்பகதூர் ஜகதீசன், அவர்தான் உங்க வீட்டுக்காரர் மேலே பழியை சாத்தியிருக்கார். ஆகையினுலே உங்க வீட்டுக்காரனை நாளைக்குக் கோர்ட்டிலே நிறுத்தறப்போ, உண்மையைப் பூராவும் சொல்லிடச் சொல்லு. ஏதாவது மறைத்து குறைத்துப் பேசினுனே அவ்வளவுதான். உன் புருஷனை நீ கண்ணுலே பார்க்க முடியாது. இன்னும் ஒண்ணு மனசிலே வைச்சுக்க: நான் உங்கிட்டே இந்த சமாச்சாரம் எல்லாம்

பேசினது உன் புருஷனுக்குக் கூடத் தெரியக் கூடாது. என்ன தெரிஞ்சுதா?'' என்று கூறி விட்டு நடந்தேன்.

அங்கிருந்து நேராக 'லாக்கப்'பில் இருக்கும் ரிக்ஷாக்காரனிடம் வந்தேன். என்னைக் கண்டதும் அந்த ரிக்ஷாக்கார முனியன் 'ஹோ'வெனக் கதறிவிட்டான். அவனைத் தேற்றி சமாதானம் செய்வதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. அவன் விசித்தபடியே என்னை வேண்டிக் கொண்டான்.

''சாமி, இந்த சமாச்சாரத்தை என் பெண்ஜாதி கிட்டே சொல்லிவிட்டு வாங்களேன். பாவம், நான் வராதது பத்தி அவள் துடியாய் துடிச்சிகிட்டு இருப்பாளுங்க. கொஞ்சம் போய் அவகிட்ட சொல்லிட்டுவாங்க'' என்றான். அவன் கொடுத்த விலாசத்தை வாங்கிக் கொண்டு சென்றேன். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது, அந்த விலாசத்திலிருக்கும் பெண், ராவ்பகதூரின் காரில் அகப்பட்டு மாண்டு போனவளென்று அறிந்ததும் எப்படி முனியனிடம் சென்று கூறுவேன்? ஏற்கனவே நொந்து போயிருக்கும் முனியன் இந்தப் பேரிடியால் எந்த நிலைக்கு வருவானோ என்று என்னால் சிந்திக்க முடியவில்லை. அந்த சமயம் என் கண்களிலிருந்து பெருகிய கண்ணீரை நான் துடைக்கவில்லை. துக்கம், வருத்தம் யாதாயினும் ஏழைகள், பணக்காரர்கள் யாவருக்கும் ஒன்றேயல்லவா?

என் மனதைக் கல்லாக்கிக் கொண்டு முனியனிடம் சமாச்சாரத்தைச் சொல்லிவிட்டேன். ஐயோ! அந்த சமயத்தில் அவன் துடித்த துடிப்பை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கதறினான், ஓலமிட்டான், இன்னும் என்னவெல்லாமோ செய்தான் துக்க மேலீட்டால்.

''ஐயோ. நீ குளி குளிக்காமே வேற இருந்தியே'' என்று அவன் புலம்பும் சமயம் என் உடல் சிலிர்த்துவிட்டது. கூச்சல் கேட்டு ஓடிவந்த ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர், ''ஏண்டா, அயோக்ய ராஸ்கல், வீணுக்

''சீக்கிரம் புறப்படச் சொல்லி அவசரப்படுத்துகிறீர்களே, உடுத்திக்க ஒரு நல்ல புடவை இருக்கா....''

''கொஞ்சம் இருங்கோ வந்துட்டேன். எந்தப் புடவையை உடுத்திக்கறதுன்னு ஒண்ணுமே புரியலே....''

கெல்லாம் ஏண்டா அழுவறே, பாசாங்கு பண்றயா? நீ ரிக்ஷா ஏத்தினியே அந்த பையன் செத்துப் போயிட்டானுமேடா. பெரிய வீட்டுக் கேஸு சும்மா விடப் போவதா உன்னை'' என்று ஏதோ கருவிக் கொண்டிருந்தார்.

என்னையறியாது என் வாய், ''என்ன அந்த பையன் இறந்து விட்டானு?'' என்று கூறியது.

தன் இளம் மனைவி அல்பாயுசாக இறந்தாளே, அதற்காக அழுவதா, அல்லது தனக்குக் கிடைக்கப் போகும் தண்டனைக் காக அழுவதா என்று தோன்ருமல் முனியன், எல்லாவற்றிற்கும் சேர்த்து அழுதுகொண்டிருந்தான். சற்று நேரத்திற்குப் பிறகு முனியனைச் சமாதானம் செய்துவிட்டு நான் வீடு திரும்பினேன். பாவம்! என்ன சோதனைக் காலம் முனியனுக்கு என்று எண்ணினேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ராவ்பகதூர் கார் விபத்து சம்பந்தமாக எனக்கு சம்மன் வந்தது. கோர்ட்டில் அன்று கூட்டம் வழிந்து ஓடியது. பிராஸிகூஷன் தரப்பில் பிரபல பப்ளிக் பிராஸிக்யூட்டரான கருணுகரன் கம்பீரமாக வாதாட நின்று கொண்டிருந்தார். கைதிக் கூண்டில் ராகவ நாயுடு நின்றுகொண்டிருந்தான். கேஸ் முன்னேறிய ஜோரைப் பார்த்தால் நான் எதிர்பார்த்தபடியே கேஸ் முடியும் தறுவாயிலிருந்தது. என்னை விசாரிக்க ஆரம்பித்தார்கள். நான் நடந்த உண்மைகள் யாவற்றையும் கூறி ராவ்பகதூரின் மேல் இருந்த ஆறு குற்றங்களையும் கூறினேன்.

''முதலாவதாக அறுபது மைல் வேகத்தில் காரை ஓட்டியது; இரண்டாவதாக 'ஹாரன்' கொடுக்காமல் காரை ஓட்டிக் கொண்டு வந்தது; மூன்ருவதாக எனக்கு லஞ்சம் கொடுத்து கேஸை மறைக்கப் பார்த்தது; நான்காவதாக விபத்தை போலிஸாருக்குத் தெரிவிக்காமலிருந்தது; ஐந்தாவதாக தன் டிரைவர் மீது பழியை ஏற்றினது; கடைசியாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று முழு கேஸையும் அமுக்கப் பார்த்தது, என்ற இந்த ஆறு குற்றத்திற்கும் காரண பூதராயிருக்கிருர் ராவ்பகதூர்'' என்றேன் மிகவும் தைரியமாக.

என் வாக்குமூலத்தைக் கேட்டு கோர்ட்டு அச்சமயம் மௌனத்தால் குடிகொண்டது.

ஜட்ஜ் என்னை நோக்கிக் கேட்டார்: ''நீங்கள் கூறும் அவ்வளவும் உண்மை என்று நிரூபிக்க உங்கள் பக்கம் யார் சாட்சி இருக்கிருர்கள்'' என்று கேட்டார்.

நான் அதற்கு என்ன பதில் கூறுவதென்று திகைத்த சமயம் குற்றவாளிக் கூண்டிலிருக்கும் நாயுடு ''இதோ நான்தான் சாட்சி'' என்று கம்பீரமாகக் கூறினுன்.

நாயுடு ஒன்றையும் ஒளிவு மறைவு இல்லாமல் நடந்த அவ்வளவையும் கூறிவிட்டான் கோர்ட்டார் முன்னிலையில். இதைச் சற்றும் எதிர்பார்க்காத ராவ்பகதூர் ஜகதீசன் மூர்ச்சையாகி கீழே விழுந்து விட்டார். அவர் மூர்ச்சை தெளிந்து பார்க்கையில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தார். பிறகு கேஸ் 'மடமட'வென்று நடந்தது. கருணுகரன் வாயடைத்து நின்று கொண்டிருந்தார்.

ஜூரர்கள் உள்ளே சென்று திரும்பும் வரையில் அந்த கோர்ட்டில் மயான அமைதி நிலவியிருந்தது. அவர்களின் ஏகமனதான தீர்ப்பை ஏற்றுக் கொண்டு ஜட்ஜ் தொண்டையைக் கனைத்துக்கொண்டு தீர்ப்பளித்தார்.

''ராவ்பகதூர் ஜகதீசனுக்கு மூன்று வருடக் கடுங்காவல்,

இறந்த அப்பெண் குடும்பத்திற்காக ரூபாய் ஐயாயிரம் கொடுக்க வேண்டியது'' என்று கூறிவிட்டு எழுந்து சென்று விட்டார். நானும் ஒரு பெரிய காரியத்தை சாதித்து விட்டதின் மகிழ்ச்சியிலே வீடு திரும்பினேன்.

ஒரு பக்கம் மகிழ்ச்சி எனினும் மறு பக்கம் முனியனை நினைத்ததும் என் மகிழ்ச்சி நீராவியாக மாறியது.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு முனியன் கேஸ் விஷயமாக எனக்கு சம்மன் வந்தது. எப்படியாவது முனியனை விடுதலை செய்ய வேண்டுமென்று தீர்மானத்துடன் சாட்சிக் கூண்டில் ஏறி நின்றேன். ஆனால் போலீஸ் அவன் மீது ஜோடித்த கேஸில் அவனைக் கொலைக் குற்றவாளி என்னும் ருசுவாக்க முயன்று கொண்டிருந்தது. அந்த சமயம் இறந்து போன பையனைக் குறித்து ஆஸ்பத்திரியிலிருந்து முழு விவரங்களையும் அனுப்பியிருந்தார்கள். அதில் குறிப்பாக ஒரு இடத்தில் இருந்த செய்தி எனக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதாவது. ''ஏற்கனவே அடிபட்ட இடத்திலேயே ரிக்ஷா விழுந்ததன் காரணமாக இலேசாக மண்டையில் அடிபட்டது என்றும் அந்த ரணமும் குணமாகும் தறுவாயில் எதிர்பாராத விதமாக கட்டிலிலிருந்து புரண்டுவிழுந்த அந்தப் பையன் அதிர்ச்சியின் காரணமாக இறந்துவிட்டான்'' என்று இருந்தது.

அந்த ஒரு செய்தியே முனியன் கொலைக் குற்றவாளி அல்ல என்று தீர்மானம் செய்திருக்க வேண்டும்.

ஜட்ஜ் தீர்ப்பில் கூறியதாவது:

''பளுவான சாமானை ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டு அஜாக்கிரதையாக இழுத்துச் சென்ற காரணத்தினால் முனியனுக்கு ஐநூறு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அவனுடைய ரிக்ஷா லைஸன்ஸும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.''

தீர்ப்பின் சாராம்சத்தைக் கேட்டதும் என் மனம் மகிழ்ச்சியில் நிரம்பியது. ஐநூறு என்ன ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டுமென்றாலும் முனியனுக்குப் பணமா இல்லை. அவன் மனைவி இறந்ததற்காக நஷ்டத்தை ஈடு செய்ய ராவ பகதூர் கொடுக்கப் போகும் ஐயாயிரம் ரூபாய்தான் இருக்கிறதே. ஆனால் கொலைகாரன் என்ற பெயருடன் சிறையில் வாடாமல் அவன் தப்பித்ததே போதும்; என என் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியது.

Manufactured by:

THE OSLER ELECTRIC-LAMP MFG. CO. LTD.

BOMBAY-10.

Sole Distributors:

F. & C. OSLER (India) LTD.

Bombay, Calcutta, Madras, Delhi, Kanpur, Gauhati

தோல்வி

மே.சு.பரதன்

சாதி, மதம், சம்பிரதாயம் என்ற கட்டுப்பாடுகள்........ இன்னும் என்னென்னவோ — தொலைய வேண்டும், ஒழிய வேண்டும் என தணிகாசல முதலியார் எதிர்வீட்டு பலவேசம் பிள்ளையுடன் சண்டப் பிரசண்டமடித்துக் கொண்டிருந்தார். அவர் எதிரிலே எல்லாம் புரிந்துகொண்டது போல கண்ணைப் பாதி திறந்தும், பாதி மூடியதுமான யோக சாதனையில் ஆழ்ந்திருந்தது அவருடைய அருமை டைகர். அதாவது நாய்.

முதலில் முதலியாரைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். முதலியார் அட்டைப் பிடியாக ஒட்டிக் கொண்டிருந்த சர்க்கார் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர். தலையுச்சியில் விழுந்திருந்த வழுக்கையும், மண்டையோரத்தில் ஒட்டிக் கொண்டிருந்த ஒன்றிரண்டு வெள்ளை மயிரும்தான் முதலியாரின் உண்மை வயதைப் பறை சாற்றின. அரசாங்க உத்தியோகங்களின் சின்னமான அலட்சிய மனப்பான்மையும், வரட்டு கெடி பிடியும் முதலியாருக்கு இன்னும் போகவில்லை. சள சள வென ஓயாது பேசிக் கொண்டிருப்பதே அவரின் சுபாவம். யாராவது தப்பித் தவறி அவரிடம் சிக்கிக் கொண்டார்களானால் அவர்கள் பாடு திண்டாட்டம் தான். இந்தியாவின் அயல் நாட்டுக்கொள்கையில் பேச்சை ஆரம்பித்து, இடையிலே தம் சுய புராணத்தையும் படித்து கடைசியாக தன் அருமை டைகர் தினம் என்ன சாப்பிடுகிறது; அதன் பாரம்பரியம் என்ன என்பது வரை பேசி முடிப்பார்.

முதலியார் முறையாகவோ—முறை தவறியோ தாம் உத்தியோகத்தில் இருந்த போது சேர்த்த பணத்தை, தன் பூர்வீகச் சொத்து என்று டம்பம் அடித்துக் கொள்ளும் அரை ஏக்ரா வரட்டு நிலத்தோடு முப்பது ஏக்கர் நிலமாகவும், நீராகவும் மாற்றிவிட்டார். கிராம வாழ்க்கை அவருக்கு அவ்வளவாக ஒத்துவரவில்லை. ஆகவே பட்டணக் கரை வந்து சேர்ந்து விட்டார். மகன் வேறு காலேஜில் படிக்கிறான். பையன் பி. ஏ. முடித்ததும் ஒரு நல்ல சர்கார் உத்தியோகமாகப் பார்த்து போட்டுவிட்டால் அவரது இகலோக வாழ்க்கையிலே எல்லா ஆசைகளும், பந்த பாசங்களும் விட்டமாதிரி: "தன் மகன் கோழி மேய்த்தாலும் கும்பினியான் கோழி மேய்க்க வேண்டும்" என்பதே அவரின் ஒரே லட்சியம், கனவு எல்லாம்.

கதவோரம் படுத்துக் கொண்டிருந்த டைகர் மெதுவாக தலையை தூக்கிப் பார்த்தது. இன்னும் முதலியாரின் பேச்சும், எதிர் வீட்டுப் பிள்ளைவாளின் சளசளப்பும் ஓய்ந்தபாடில்லை. பலவேசம் பிள்ளை, முதலியாரைவிட பேச்சிலும், அந்தஸ்திலும் இளைத்தவரோ, சளைத்தவரோ இல்லை.

பலவேசம் பிள்ளை திருநெல்வேலியில் மளிகைக் கடை வைத்து சுட்டிச்சுரண்டி சேர்ந்த பணம் போதாதென்று இங்கேயும் பலவித வியாபாரங்களை ஆரம்பித்து வைத்த பணத்தை லக்ஷமாகவும், அதை ஒன்று இரண்டாக மாற்றி தற்போது மூன்றுக்கும் பணியிலே இறங்கி இருப்பவர். பணத்தைப் போலவே பலவேசம் பிள்ளை பிரஜா உற்பத்தியிலும் குறைச்சல் வைக்கவில்லை. ஐந்தும், மூன்றும் அடுக்காகப் பிறந்தன. அதாவது ஐந்து பெண்ணும், மூன்று ஆண்களும்.

அவரும் ஆசைக்கு ஒரு நாய் வளர்த்தார். ஜிம்மி; அதுவும் பெட்டை. நாட்டு ரகத்திற்கும், மேனாட்டு ரகத்திற்கும் பிறந்தகலப்படரகம். கொஞ்சம் கௌரவமாகச் சொல்ல வேண்டுமானால் ஆங்கிலோ—இந்திய நாய். குள்ளமாயும், உடம்பெல்லாம் கற்றை கற்றையாக மயிருடனும், சிறிய கண்களோடும் அழகாயிருக்கும்.

முதலியாரின் டைகருக்கும், பிள்ளையின் ஜிம்மிக்கும் கொஞ்ச நாட்களாகவே ஒட்டும் உறவும் அதிகமாயிற்று. டைகர் மெதுவாக ஓரக் கண்ணால் எதிர் வீட்டைப் பார்க்கும். ஜிம்மி கண்ணிலே பட்டுவிட்டால் போதும், அதன் நடையிலே ஒரு மிடுக்கு, காம்பீர்யம் ஏற்பட்டுவிடும். அந்த நேரத்திலே தெருவில் ஏழை பாழைகளோ, தெரு சொரி நாய்களோ கண்ணில் பட்டுவிட்டால் போதும். எதிர் வீட்டு ஜிம்மி பார்க்கட்டுமென்று காலை தரையில் பிராண்டி, கோபாவேசத்தோடு குறைத்துக் கொண்டு தெரு முனை வரை துரத்திச் செல்லும். எதிர் வீட்டு ஜிம்மி, டைகரின் வீர தீரப் பராக்கிரமத்தைக் கேட்டுக்கு வெளியே வராமலேயே உள்ளிருந்து கொண்டே பார்த்து ரசிக்கும். டைகரை முதலியார் கட்டிப் போடுவதில்லை. ஆனால் பிள்ளைவாளோ ஜிம்மியை மெல்லிய சங்கிலியால் பிணைத்து வைப்பார். ஜிம்மியோ கலப்பு ரகம். இது வேறு தெருநாய்களோடு சேர்ந்து மட்டரக பிரஜா உற்பத்தி செய்து விடப் போகிறதென்ற பயம். ஆகவே தான் பிணைத்து வைத்திருந்தார்.

பஞ்சாங்கக் கணக்குப்படி நாளும் கிழமையும் தவராது வந்து கொண்டும் போய்க் கொண்டுமிருந்தன. டைகருக்கு ஜிம்மியின் மேல் ஒரு பாசம் வளர்ந்தது. மனித இலக்கணப்படி காதல். டைகர் ஜிம்மியைப் பார்த்து முனகும். அந்த பரிபாஷையை புரிந்து கொண்டது போல் ஜிம்மியும் பதிலுக்கு முனகும். திரும்ப ஒன்றை ஒன்று கனிவோடு பார்த்துக் கொள்ளும்.

டைகர் பிள்ளைவாளின் வீட்டுப் பக்கமே போகாது. தப்பித் தவறி போனாலும் பிள்ளையின் கைத்தடிக்கு இலக்காக வேண்டியிருக்கும். முதலியாரை அவருக்குப் பிடித்திருந்தாலும், டைகரை அவ்வளவாகப் பிடிக்காது. ஏனெனில் டைகர் உள்நாட்டு ரகம். தம் ஜிம்மி உயர் ரக மேனாட்டு ரகம் என்பது அவரது நினைப்பு.

ஓர் நாள் இரவு பிள்ளைவாள் சாப்பிட்டு காற்றோட்டமாக வெளிவராந்தாவில் வந்து உட்கார்ந்தார். முதலியாரும் வெற்றிலைப் பெட்டியுடன் வந்து உட்கார்ந்தார். வழக்கப்படி கவைக்குதவாதவைகளைப் பற்றியெல்லாம் பேசினார்கள்.

இடையிலே ஜிம்மி பிள்ளைவாளின் காலடியிலே சோர்ந்து வந்து சுருட்டிப் படுத்துக் கொண்டது. அதைக் கண்ட முதலியார் ''என்ன பிள்ளைவாள் உங்க ஜிம்மி ஒரே இளைப்பாய் இளைச்சிருக்கு'' என்றார்.

''என்னமோ ஒண்ணும் தெரியல்லே. பத்து நாளாக

சோர்ந்துபோய் தான் கிடக்கு. நான் போன வாரம் ஊருக்குப் போன போது கிராமத்து சொரி முத்தையன் கோயில் உண்டியிலேயும் ஜிம்மியின் பேரைச் சொல்லி ஒரு ரூபாய் உண்டிப் பணம்செலுத்தி விட்டு வந்தேன்.''

''அதெல்லாம்ஒண்ணுமில்லே பிள்ளைவாள். அதற்குநெனப்பு'' என்று சூசகமாகச் சொல்லி விளங்க வைத்தார் முதலியார். ''அதற்கு ஒரு வழியும் சொல்றேன். நம்ம டைகரையும், ஜிம்மியையும் ஒன்று சேர்த்து விட்டா என்ன! உமக்குச் சம்மதமாண்ணு சொல்லும்'' என்று படபடத்தார்.

வாயில் குதப்பிய வெற்றிலை எச்சிலை வெளியே சென்று துப்பிவிட்டு மறுபடியும் வந்து உட்கார்ந்த பலவேசம் பிள்ளை அதெல்லாம்வாணும். என் நாய் உசத்திரகமல்லவா? உம்ம டைகர் இங்கத்தியரகம் தானே. இரண்டும் சேர்ந்தால் நம்ம தெரு சொரி நாய்களைப் போலத்தான் குட்டிகள் கிடைக்கும்'' என்று இனம் பிரித்துப் பேசினர். மற்றும் தம் மருமகப் பிள்ளை பெங்களூரிலிருந்து ஒரு வாரத்தில் வரப்போவதாகவும், அவனிடம் உயர்த்தர ஆண் நாய் இருப்பதாகவும், அதையும், ஜிம்மியையும் தான் ஜதை சேர்க்கப் போவதாகவும், தன் அபிலாக்ஷையை முதலியாரிடம் சொல்லி விட்டார். மேலும் குட்டி போட்டால் முதலியாருக்கும் ஒன்று தருவதாய் வாக்களித்தார்.

முதலியாருக்கு தம் டைகரை இனக்குறைவாகப் பேசியதில் சற்று மனத் தாங்கல் தான். எனினும் டைகர் நாட்டு ரகம்தானே. பிள்ளைவாளும் நல்லரகக் குட்டி தருவதாக வாக்களித்ததிலே ஒரு திருப்தி.

முதலியார், பிள்ளைவாளை நாய் விஷயமாகக் கேட்டதிலிருந்து பிள்ளைவாள் சற்று உஷாராக நடக்க ஆரம்பித்தார். இப்போது ஜிம்மியை உள் தாழ்வாரத்திலேயே கட்டிப் போட்டு வைத்தார். வெளி வராந்தாவிற்கே கொண்டு வருவதில்லை.

ஒருவார காலம் ஓடியது. ஜிம்மி மனது சோர்ந்துபோய் கிடந்தது. ஜிம்மியைக் காணுது டைகர் வெறி கொண்டது போல வீட்டின் உள்ளும், புறமும் போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருந்தது. பலத்த குரலில் குறைத்தும் பார்த்தது. எனினும் ஜிம்மியைப் பார்க்க முடியவில்லை. டைகருக்கு ஏமாற்றமாய் இருந்தாலும், தம்மைக் காணுமல் ஜிம்மியால் இருக்க முடியாது என்ற தன்னம்பிக்கை. ஆகவே மனதைச் சோரவிடாமல் இருந்தது.

ஒரு நாள் பலவேசம் பிள்ளையின் மருமகன் பெங்களூரிலிருந்து குடும்ப சமேதனுய் (தன் ஆண் நாய் உட்பட) வந்து சேர்ந்தான். பிள்ளைவாளின் வீடே ஏக களேபரமாய் இருந்தது. பெங்களூர் நாய் மிகவும் குட்டையாக இருந்தது. குட்டை குட்டையான. சின்னஞ் சிறு கால்கள். காதுகள் நீளமாக வளர்ந்து கண்களை

மறைத்தபடி தொங்கிக் கொண்டு கிடந்தன. ஆண் நாய் தான், எனினும் ஆண் தன்மைக் குண்டான அழகும் காம்பீர்ய மும் அதற்கில்லை.

முதலிரண்டு நாட்கள் ஜிம்மி பெங்களூர் நாயுடன் ஒட்டிப் பழகவில்லை. இரண்டையும் ஒன்ருகவே கட்டிப் போட்டு வைத்திருந்தனர். ஜிம்மிக்குப் பிடிக்கவில்லை. எனினும் என்ன செய்வது? பலவந்த திருமணம். பெங்களூர் நாய் ஜிம்மியை மெதுவாக நக்கிக் கொடுக்க வரும். ஜிம்மி எரிச்சலுடன் சற்று விலகி நின்று உம்மென்று பார்க்கும். நாட்கள் சென்றன. வேறு வழியில்லாது போகவே பெங்களூர் நாயுடன் சற்று நிதானமாகப் பழக ஆரம்பித்தது.

ஒரு நாள் மாலை பெங்களூரார் தம் நாயுடன் ஜிம்மியையும் அழைத்துக் கொண்டு பீச்சுக் குச் சென்ருர். இவர்கள் வீட்டை விட்டு இறங்கியதைப் பார்த்துக் கொண்டிருந்த டைகருக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ''தன் ஜிம்மி வேறு நாயுடனு?'' டைகரால் இதைப் பொறுக்கவே முடியவில்லை. தரையைப் பிராண்டிக்கொண்டு ஆக்ரோஷத்துடன் குறைத்தது. அதற்குள் தெருக் நோடியை கடந்துவிட்டதால் தன் ஆத்திரத்தைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டது.

ஜிம்மியும், பெங்களூர் நாயும் கடற் கரையை அடைந்தன. மணலைக் கண்டதும் ஜிம்மிக்கு எப்படி இருந்ததோ? மணலில் ஓடி ஆடிப் புரண்டு விளையாடியது. இதுதான் சமயமெனக் காத்திருந்த பெங்களூர் நாயும் அதனுடன் சேர்ந்து கொண்டு ஆடிற்று. நேரமாகவே அவரும் தம் நாய்களுடன் வீடு திரும்பினர்.

எப்போது திரும்புவார்கள் என்று தம் வீட்டின் வராந்தாவில் காத்திருந்த டைகர் திரும்பவும் ரோஷத்தோடு உறுமிற்று. சற்றும் இங்கிதமில்லாது டைகர் ஏன் இப்படிக் குரைக்கிறது என்ற கோபமோ என்னவோ, ஜிம்மி திரும்பியும் பார்க்காது நேரே வீட்டிற்குள் சென்றுவிட்டது. ஜிம்மி தன்னை திரும்பியும் பார்க்காது போனதைக் கண்ட டைகருக்கு பெங்களூர் நாயின் மேல் குரோதம் பொங்கிக் கொண்டு வந்தது. அந்த நேரத்திலே பெங்களூர் நாய் வெளியே வந்திருந்தால் அதன் குரல்வளையைக் கடித்துக் குதறி கொன்றே போட்டிருக்கும். அதன் கண்களிலே கொடூரம் பொங்கி வழிந்தது.

உள்ளே சென்ற ஜிம்மிக்கு டைகர் போட்ட கூப்பாடு கேட்டுக் கொண்டு தானிருந்தது. டைகரின் மேல் ஜிம்மிக்கு அசாத்திய கோபமேற்பட்டது. அப்போதிருந்தே ஜிம்மி பெங்களூர் நாயுடன் சுமுகமாகப் பழக ஆரம்பித்தது. இரண்டும் ஒரே தட்டில் சாப்பிட்டன. இதுவரை பெங்களூர் நாயுடன் சேர்ந்து படுக்காத ஜிம்மி இன்று ஏதோ பந்தபாசத்தால்

கட்டுண்டது போல சேர்ந்தே படுத்தது. அதன் முகத்தை நக்கிக் கொடுத்தது. பதிலுக்கு ஜிம்மியையும் பெங்களூர் நாய் நக்கிக் கொடுத்தது. நேரம் ஆக ஆக இரண்டும் இயற்கைக்குக் கட்டுப்பட்டன ; கலந்தன.

மறு நாள் ஜிம்மி மிகவும் சுறுசுறுப்பாய் இருந்தது. பெங்களூர் நாயை வளைய வளைய வட்டமிட்டது. இரண்டும் சகஜமாய் இருந்ததைக் கண்ட பலவேசம் பிள்ளை, ஜிம்மி போடும் குட்டி எப்படி இருக்கும் என்ற கற்பனையுடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டே அசை போட்டுக் கொண்டிருந்தார்.

அன்று மாலை பெங்களூர் நாய் ஜிம்மியுடன் வெளியே நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. வீட்டிற்குள் இருந்த டைகர் இதை எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்டு கம்பீர நடை போட்டுக் கொண்டு வெளியே வந்து நின்றது. டைகரைக் கண்டதும் ஜிம்மி வேறு பக்கம் திரும்பிக் கொண்டது. டைகருக்கு ரோஷம் தாங்கவில்லை. பெங்களூர் நாயைப் பார்த்து உர்ரென்றது. பதிலுக்கு அதுவும் உர்ரென நீட்டி முழங்கியது. டைகருக்கு 'இந்தச் சோணிப் பயல் நம்மைக் கண்டு கொக்கரிக்கிறானே' என்ற ஆத்திரம் பீரிட "உர்....உர்....உர். வொள்....லொள்" என்று சவால் விடுத்து போர் பிரகடனப் படுத்தியது.

ஓரே எட்டில் நடுத் தெருவில் வந்து குதித்தது. பெங்களூர் நாயுக்கும் ஜிம்மியின் எதிரில் தன் வீரத்தைக் காட்ட வேண்டுமென்ற எண்ணமோ என்னவோ! பாய்ந்து வந்து டைகரின் மேல் விழுந்தது. அவ்வளவு தான் தாமதம். டைகர் பெங்களூர் நாயைக் கடித்துக் குதறி, பிராண்டி, ரத்தக் களரி, ரணக் களரியாக்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட ஜிம்மி உள்ளேயும் வெளியேயும் ஓடியோடி குய்யோ முறையோ வெனப் பரிதாபமாகக் குரைத்தது. பெங்களூர் நாய்க்கு பாதி உயிர் போய் விட்டதென்றே சொல்லலாம். தெருவில் ஏக ஜனங்கள் சேர்ந்தும் அவைகளை யாரும் விலக்க முன் வரவில்லை. வேடிக்கைத்தான் பார்த்துக் கொண்டிருந்தனர். டைகர் தன் ஆத்திரம் தீரக் கடித்து, குரல் வளையைப் பிடுங்கி மண்ணிலே உருட்டி அதைச் சித்திர வதை செய்து கொண்டிருந்தது. தன் எதிரியை ஒழித்துக் கட்டி விட வேண்டுமென்பது தான் அதன் எண்ணம்.

இந்தச் சப்தத்தைக் கேட்ட முதலியார் வெளியே ஓடிவந்து டைகரை அடக்கி உள்ளே இழுத்துச் சென்றார். பிள்ளைவாள் ஓடிவந்து பெங்களூர் நாயைப் பார்த்தார். உயிர் பிரியும் தருணம். ஏதோ தீனக் குரலில் முக்கி முனகியது. தலையை தூக்கி, கண்ணைச்

சுழலவிட்டு ஜிம்மியைப் பரிதாபமாக பார்த்துவிட்டு தலையை தரையிலே போட்டுவிட்டது. அவ்வளவுதான் மீளாத்தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. பிள்ளைவாள் அதை தன் தோட்டத்திலேயே குழிதோண்டிப் புதைத்துவிட்டார்.

எல்லாம் ஆனதும் பிள்ளைவாள் வெளியே வந்து முதலியாரை ஆத்திரம் தீர திட்டினார். தம் மருமகப்பிள்ளையின் இருநூறு ரூபாய் மதிப்புள்ள நாய் இறந்த நஷ்டம் அவருக்கல்லவா தெரியும்.

'சரி கவனிக்கிறேன்' என்று உள்ளே சென்ற முதலியார் 'டைகர்' என்று உரத்துக் கூவினார். பௌயத்துடன் எதிரே வந்து நின்ற டைகரை தன் கைத்தடியால் ஓங்கி ஒருபோடு போட்டார். அவ்வளவு தான் 'வீல்' என்று வேதனை தாங்காது கத்திக் கொண்டு வெளியே ஓடிய நாய் மீண்டும் விடே திரும்பவில்லை.

டைகர் தெருத் தெருவாய் அலைந்தது. இரண்டு நாட்களாக ஒன்றுமே தின்னவில்லை. தம் ஜிம்மியை இழந்துவிட்ட ஏக்கத்திலே அதற்கு ஒன்றுமே நிலை கொள்ளவில்லை. அதற்கு வீடு திரும்ப வேண்டுமென்ற எண்ணமே அற்றுப் போய் விட்டது.

தெரு ஓரத்தில் கிடந்த எச்சில் இலைக்கு தெரு நாய்களும், மனிதர்களும் போட்டி யிட்டனர். உயர்ந்த சாப்பாட்டையே சாப்பிட்டுக் கொண்டிருந்த டைகருக்கு இதெல்லாம் அதிசயமாகவும் ஆச்சரியமாகவுமிருந்தது. எப்படியோ தின்றதும், தின்னாததுமாக இரண்டு மூன்று நாட்களைக் கழித்து விட்டது.

டைகருக்கு இந்த இரண்டு மூன்று நாட்களிலேயே உடல் மெலிந்து விட்டது. அதன் உள்ளம் வேறு ஜிம்மியை நினைத்து ஏங்கித் தவித்தது. ஜிம்மி அப்படி மோசம் செய்யும் என டைகர் நினைக்கவே இல்லை.

நான்காம் நாள் காலை டைகர் ஒரு குப்பைத் தொட்டியின் ஓரம் படுத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையுடன் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தது. திடீரென்று தெரு சொரி நாய்களெல்லாம் விழுந்தடித்துக் கொண்டு ஓடின. சிறிது தூரத்திலே கார்ப்பரேஷனின் நாய் பிடிக்கும் லாரி பையன்கள் புடை சூழ வந்து கொண்டிருந்தது.

டைகருக்கு எழுந்து ஓட வேண்டுமென்ற எண்ணமே எழவில்லை. எப்படியும் நம்மைப் பிடித்து விடுவார்கள். நாமும் தான் இருந்து என்னச் செய்யப் போகிறோம். ஜிம்மி இல்லாது வாழ்ந்து என்ன பயன் என்று எண்ணிற்றோ என்னவோ! எழுந்து நின்று தன்னையும் பிடித்துக் கொள்ளட்டுமென்று தயாராக நின்றது.

திடீரென டைகரின் கழுத்திலே 'கால தேவனின் பாசக் கயிறு' போன்று ஒரு கயிறு விழுந்து சுறுக்கிக் கொண்டது. எல்லா உயிர்களுக்கும் கடைசி 'உயிராசை' அதற்கும் அந்த விநாடியிலே வந்தது போல 'ஓ'வென ஊளையிட்டது. அதற்குள் லாரியில் இருந்த மற்றொரு ஆள், "அண்ணே உட்டுடு. அதன் கழுத்திலே பட்டை யிருக்கே" என்றான். அவனும் கயிற்றை லாவகமாகக் கழற்றிக் கொண்டான்.

முதலியார் வாங்கி கட்டியிருந்த லைசென்ஸ் அதன் கழுத்திலே இருந்ததால் தான் இன்று டைகர் உயிர் பிழைத்தது. ஆனால் தன் தற்கொலை முயற்சி பலிக்காமல் போனதற்காக டைகர் மிகவும் வருந்தியது.

மனித அனுமானக் கணக்குப்படி நாட்கள் மாதங்களாகின.

டைகர் இப்போது தெரு சொறி நாய்களுடன் இரண்டறக் கலந்து ஐக்கியமாகிவிட்டது. உடல் மிக மெலிந்துவிட்டது. பக்க எலும்புகள் வரிவரியாய்த் தெரிந்தன. உடலெல்லாம் சிரங்கும், சொரியும். தெரு பையன்களிடம் கல்லடிபட்டு ஒரு கண் பொட்டையாகி அதிலே நீர் வடிந்து கொண்டிருந்தது. இந்தத் திருக் கோலத்துடன் தினசரி தவறாது ஒரு பத்து தெருக்களாவது பவனி வரும்.

இதற்கிடையிலே ஜிம்மி கருவுற்று தன்னைப் போலவே மூன்று குட்டிகள் போட்டுவிட்டது. தாய் பாசத்தோடு குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்த்தது. இப்போது பலவேசம் பிள்ளை தன் நாய் பரிவாரங்களோடுதான் மாலையில் பீச்சுக்குச் செல்வார்.

ஒரு நாள் வழக்கம் போல் டைகர் நகர்வலம் புறப்பட்டது. பகலெல்லாம் பட்டினி. களைப்பு. நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டே குனிந்த தலை நிமிராது பீச் பக்கம் ஓடிக்கொண்டிருந்தது.

எதிரே பலவேசம் பிள்ளை தம் ஜிம்மியும், அதன் மூன்று குட்டிகளுடனும் வந்து கொண்டிருந்தார். எதிரே வரும் நாய் பரிவாரத்தை தலை தூக்கிப் பார்த்த டைகர் ஜிம்மியை அடையாளம் கண்டு கொண்டது. அதற்கு பழைய நினைவுகள் ஒவ்வொன்ருய் வந்தன. தன் காதலை திரஸ்கரித்து வேறு நாயுடன் சேர்ந்து குட்டிப் போட்டுக் கொண்ட ஜிம்மியைக் கண்டதும் அதற்கு வெறியே கண்டுவிட்டது. பழி வாங்க வேண்டும், இதுதான் தருணம் என நினைத்த டைகர் அந்த பரிவாரத்தின் மீது தாவி குட்டிகளைக் கடித்து உதறி சின்னுபின்னப்படுத்தியது. பலவேசம் பிள்ளை கைத் தடியை ஆட்டிக் கொண்டு 'ஆ—ஊ' வென அலறினர்.

டைகருக்கு வெறியே பிடித்து விட்டது. கூட்டத்தில் புகுந்து நாலைந்து பேரை பிராண்டி கடித்து ஏகக் கலாட்டா செய்து விட்டது. பின்னர் ஜனங்கள் டைகரை துரத்தித் துரத்தி அடித்தனர். உடம்பெல்லாம் கல்லடியால் ஒரே ரத்தம். சோர்ந்து போய் நின்றது. ஒரு கல் விண்ணென்று பறந்து வந்து அதன் மண்டையிலே பட்டது. அவ்வளவுதான் அதோடு டைகரின் இகலோக வாழ்வு முடிந்து விட்டது. சுழன்று கீழே விழுந்து கால்களை உதைத்துக் கொண்டு இறந்தது.

ஜிம்மியின் குட்டிகளில் இரண்டு அங்கேயே இறந்தன. பலவேசம்பிள்ளை ஜிம்மியின் துரதிர்டஷத்தை நினைத்தவாறே ஒரு குட்டியுடனும் ஜிம்மியுடனும் வீடு போய் சேர்ந்தார்.

சுருண்டு விழுந்து இறந்து கிடந்த டைகரை சில பையன்கள் சேர்ந்து அதன் காலிலே கயிற்றைக் கட்டி தர தரவென மணலிலே இழுத்துக் கொண்டுப் போனர்கள். கடலோரம் போனதும் அதில் ஒருவன் கயிற்றின் ஒரு முனையைப் பிடித்து 'தண்டா மாலை' சுற்றுவது போலச் சுற்றி டைகரை பொங்கி வரும் கடலிலே தூக்கியெறிந்தான்.

அந்த உயிரற்ற சடலம் கொஞ்சம் கொஞ்சமாய் மூழ்கிக் கொண்டிருந்தது. வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பையன்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர். அவர்களுக்கு என்ன தெரியும் டைகரின் சோக வாழ்க்கை.

கடற்கரை ரேடியோவில் அப்போது கவி பாரதியின் ''காதல் செய்வீர் உலகத்தீரே'' என்ற பாட்டை யாரோ ஒரு பாடகி ராக் தாளத்தோடு உருக்கமாய் பாடிக் கொண்டிருந்தாள்.

சங்கரன் சொல்கிறான்

கமலா ஜஸ்டிஸ் சுந்தர ராஜனின் தவப்புதல்வி, நான் நிதி திரட்ட போனபோது அவள் தான் என்னிடம் முதலில் பேசினாள். கமலா அழகி: உருண்டையான முகம், குறுகுறுத்த வட்ட வடிவமான கண்கள், சுருண்டு நீண்ட கேசம், எப்போதுமே சிரிப்பால் முல்லை பல் வரிசை தெரியும் பவளச்செவ்வாய், கலகலவென்று கடல் அலைபோல் பொங்கிவரும் சிரிப்பொலி இடையிலே கருப்பு கரையிட்ட, சிகப்பு மைசூர் ஸில்க் புடவை. கையிலே சிகப்பு வெல்வெட்டம் பப் பை; இவள்தான் நான் அன்றைக்கு கண்ட கமலா.

கமலா என்னிடம் சிரிக்க, சிரிக்கப் பேசினாள். பேச்சிலே சிறிது கர்வமும், தற்பெருமையும் கலந்திருந்தது. ஆனாலும் அவள் சிரிப்பொலி என்னை கவரத்தான் செய்தது.

விமலா பிரபல ரண சிகிச்சை நிபுணர் டாக்டர் 'ராஜாராமனின்' சீமந்த புத்திரி. நீண்ட முகம், நீண்ட ரப்பைகளோடு காதளவோடிய கண்கள். அவை எப்போதுமே பாதி மூடியிருந்தன. நெற்றியிலே புரளும் நெளி நெளியான ஜடை, மின்னலைப்போல் பளிச்சிட்டு மறையும் புன்சிரிப்பு, சிவந்த ரோஜா நிறம், வானவில்லின் வர்ண ஜால நிற 'ஜார்ஜட்' புடவை. கையிலே பாதி திறந்திருந்த ஒரு புத்தகம். நான் கண்ட 'விமலா' ஒரு அஜந்தா சித்திரத்தைப் போலிருந்தாள்.

விமலா வார்த்தைகளை அளந்து பேசினாள். தான் அழகி என்பதை நன்றாக உணர்ந்திருந்தாள். பிறருக்கும் அதை உணர்த்தினாள். அவளுடைய மனமோகன அழகு என்னை வசிகரித்தது.

சந்தியா தாய் தந்தையற்றவள். மாமனின் ஆதரவிலே காலேஜில் படிப்பவள். சிறிது கருத்த நிறம், பயத்தால் மிரண்ட பார்வை, அழகிய வளைந்த புருவங்கள், எடுப்பான நாசி, குவிந்த உதடுகள், பரிதாபம் தோய்ந்த முகம், வெள்ளை வாயில் புடவை, சிரிக்கக்கூட பயந்த சுபாவம். இவள்தான் நான் சந்தித்த 'சந்தியா' அவளுடைய சாந்தம் என்னைக் கவர்ந்தது.

இவர்கள் மூவரும் ஒன்றுபட்டிருப்பதே எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நிதி திரட்டப் போன என்னிடமே அவர்கள். காலேஜ் நாடகத்திற்கு நிதி திரட்டிவிட்டார்கள்! நான் அதற்குப் பிறகு அங்கு அடிக்கடி போய்வர ஆரம்பித்தேன். அந்த மூவருமே எனக்கு பிடித்திருந்தார்கள். அவர்கள் நடத்தையிலிருந்து அவர்களுக்கும் என்னை பிடித்துத்தானிருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். இவர்கள் மூவரில் ஒருவரைத் தான் நான் என்னுடைய 'சிறந்த பாதியாக' தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் ஒவ்வொருவரும், ஒவ்வொரு விதத்

தில் சிறந்தவர்களாயிருந்தார்கள்.

கமலா சொல்கிருள்

சங்கரை முதல்முதலில் பார்த்ததுமே எனக்கு அவரை பிடித்து விட்டது. கடைகளிலே சில புடவைகளை பார்க்கிருேம். பார்த்த உடனேயே பிடித்து விடுவதில்லையா? அதைப்போலதான். நம் செல்வ நிலை தெரியட்டுமென்று தான் அலட்சியமாக ஒரு பத்து ரூபாய் நோட்டை போட்டேன்.

இந்த 'விமலா' இருக்கிருளே 'விமலா' அவளை அன்று வரை எவ்வளவோ நல்லவள் என்று நினைத்திருந்தேன். ஆனுலும் அவளுக்கு எப்போதுமே, தான் ஒரு அஜந்தா சித்திரம் என்ற நினைப்பில்கர்வமுண்டு. அப்பா! அன்றைக்கு அவள் பண்ணின அழுத்தலும் திருப்பலும், எனக்கு சற்று கூட பிடிக்கவில்லை. என்ன இருந்தாலும் கர்வத்திற்கும் ஒரு அளவு உண்டு. புதுச்சேரி பொம்மை கூடத்தான் அழகாயிருக்கிறது!

நான் பத்து ரூபாய் போட்டால், என்னைவிட ஒரு படி மேலிருக்க வேண்டுமாம்; அதற்காக தன் பொன்மோதிரத்தை கழற்றிப் போட்டாளே! அவள் அப்பன் ஆளை அறுத்து சேர்க்கும் பணமல்லவா! அவளுக்கேன் அதன் மதிப்புத் தெரிய போகிறது? அவள் இப்படி இருப்பாள் என்று தெரிந்திருந்தால் அவளிடம் சிநேகம் செய்தே இருக்கமாட்டேன்.

'சந்தியா' இருக்கிருளே 'சந்தியா' அவள் பலே அழுத்தக்காரி. உள்ளத்திலிருப்பதை வெளியே விடவேமாட்டாள். அவளும் சங்கரை விரும்புகிருள் என்று எனக்கா தெரியாது! என்னதானிருந்தாலும், அவரவர்களுக்கு தங்கள் நிலை தெரிய வேண்டும். "யாரோ ஒரு மாமனின் ஆதரவிலே படிக்கிருேமே, ஒரு வாயில் புடவைக்கு மறு புடவை வழியில்லாமல் இருக்கிருேமே, நாம் போய் அவ்வளவு பெரிய இஞ்சினீயரின் பிள்ளையை காதலிக்கலாமா? தனக்கு அது கட்டித்தான் வருமா?'' என்று தெரிய வேண்டாம்? சுத்த மண்டு. அவருடைய பொன்னிறமெங்கே? இவளுடைய மேக வர்ணமெங்கே? இதுகளையெல்லாம் சமமாக சேர்த்துக் கொண்டது தப்பு.

விமலா சொல்கிருள்

சங்கர் என்னை பார்த்ததுமே என்னை அவருக்கு பிடித்துவிட்டிருக்கவேண்டும், இல்லையென்

ருல் என்னை ஏன் அப்படி கண் கொட்டாமல் பார்த்தார். சங்கருடைய பேச்சிலிருந்து அவர் அழகை ரஸிப்பவர் என்பதை கண்டு கொண்டேன். நான் எப்போதுமே அதிகம் பேசமாட்டேன், அதிகம் சிரிக்கமாட்டேன். எந்த பொருளும் அதிகமாகக் கிடைத்தால் மதிப்பு குறைவுதானே !

அப்பா ! கமலா இருக்கிருளே, என் அருமை 'ரூம் மெட்'. கமலா ! அவள் பேச ஆரம்பித்தால் ஓயமாட்டாள். சில ஜன்மங்களுக்கு அதன் குரலேயே சள சளவென்று காதால் கேட்பதில் ஒரு ஆனந்தம் இருக்கும் போலிருக்கிறது. எனக்கு உரக்க பாடினுல் கூட 'டான்ஸில்ஸ்' வளர்ந்து விடும். அவள் அப்பன் வக்கிலாயிருந்தவனல்லவா ? பெண்ணிற்கு வாய்க்கு குறைச்சலில்லை.

அன்றைக்கு அவரெதிரில் சற்றும் வெட்க மில்லாமல் அவள் பண்ணின அட்டகாசமும், சிரித்த சிரிப்பும். சே ! சே ! பெண்களுக்கு சற்று அடக்கமிருக்க வேண்டும். இவள், இப்படிப் பட்டவள் என்று தெரிந்திருந்தால், அப்போதே வெட்டியிருப்பேன்.

சந்தியாவும் அவரை விரும்புகிருள் என்று தெரிந்த போது எனக்கு சிரிப்புத்தான் வந்தது. பூசனிக்காயின் மேல், சாம்பல் படர்ந்திருப்பதைப் போல் அவள் பவுடர் பூசிக் கொள்வதும், அவள் அம்மா காலத்து பேஷன் பட்டுப் புடவையை கட்டிக் கொள்வதும் வேடிக்கையாயிருக்கிறது. என்னதான் ஆசையிருந்தாலும், மனிதர்களுக்கு நிதானம் வேண்டும். அவர் ஏதோ அவள் மனதை உறுத்தக் கூடாதே என்று. சற்று பேசினுல் அதை காதல் என்று எண்ணி விடுவதா ? உலகமே தலை கீழாக இருக்கிறது. இதுகளை யெல்லாம் வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும்....

சந்தியா சொல்கிருள்

'ஆசை வெட்கம் அறியாது !' என்று சொல்வது எவ்வளவு உண்மை தெரியுமா ? காதல் என்பது, ஏழைக்கு ஒரு விதம், பணக்காரனுக்கு ஒரு விதம், கருப்புக்கு ஒரு விதம்; சிகப்புக்கு ஒருவிதமென்று வந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும் ? வாழ்க்கையில் இந்த சிக்கலெல்லாம் இருக்காதல்லவா ? நான் உண்மையை சொல்கிறேன், பிறர் தயவை நாடி உயிர் வளர்க்கும் ஏழையான நான், பெரிய செல்வந்தரின் ஒரே பிள்ளையான சங்கரை காதலிக்கிறேன். என்னுடைய கருப்பு உடலிலே, இருக்கும் வெள்ளை உள்ளம் அவரை நாடி செல்கிறது. அதுவும், உதய சூரியனைப் போன்ற அழகி 'கமலாவுக்கும்' பூரண சந்திரனை போன்ற அழகி 'கிலியோ பாத்ரா விமலாவுக்கும்', போட்டியாக, சாயாதேவியாகிய நான் சங்கரை காதலிக்கிறேன். "பொருந்துமா ?" என்று கேட்கிறீர்களா ? பொருந்தாதுதான். எனக்கு அவரை காதலிக்க உரிமை இல்லைதான். அந்தஸ்து கிடையாது தான். இருந்தாலும் என் அறிவுக்குத் தெரிவது, என் உள்ளத்துக்கு தெரியவில்லையே......

ஆனுல் என் காதலை என் உள்ளத்திலேயே புதைத்து விட எனக்குத் தெரியும். இது வெளியே தெரிந்தால் அவமானமென்று எனக்குத் தெரியாதா ? கமலாவோ, விமலாவோ தான் அவருக்கு தகுந்த ஜோடி, சந்தியாவல்ல என்று எனக்குத் தெரியும். அவர்களும் என் சினேகிதிகள் தானே ! அவர்களுக்கு கிடைப்பதில் எனக்கு சந்தோஷம் தானே ? என்னை தப்பாக புரிந்து கொண்டு கமலாவும், விமலாவும் என்னை கேவலப்படுத்து

வது தான் என் உள்ளத்தை உடைக்கிறது.

சினிமாவிலே தோன்றும், அற்புதமான, அழகான காட்சிகளை யெல்லாம் நேரிலே அனுபவிக்க முடிகிறதா? தொலைவிலிருந்து திரையில் ஓடுவதைத் தானே பார்க்க முடிகிறது. நான் வாழ்க்கையிலே எல்லா இன்பங்களையும் எட்ட இருந்து பார்த்துக் களிக்க முடியுமே தவிர பங்கெடுத்துக் கொள்ள முடியாத அநாதை தானே! இதை ஏன் கமலாவும், விமலாவும் புரிந்துக் கொள்ளக் கூடாது? நான் இனிமேல் என்னை அதிகம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவன் சொல்கிறான்

'கமலா', 'விமலா', 'சந்தியா' இந்த மூன்று பெயர்களும் என் மனதிலே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. யார் உயர்ந்தவள்? யார் தாழ்ந்தவள்? என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை. கமலாவின் வெள்ளி மணி சிரிப்பொலி என்னை இன்பத்தின் சிகரத்திற்கு அழைத்துச் சென்றால், விமலாவின் முல்லை புன்சிரிப்பு என்னை இன்பச் சுழலில் ஆழ்த்தியது. ஆனால் சந்தியாவின் அந்த விவரிக்க முடியாத, அமைதி தோய்ந்த குறுநகை என்னை இந்த உலகுக்கு மீண்டும் கொண்டு வந்தது. யாரை தேர்ந்தெடுப்பது எப்படித் தேர்ந்தெடுப்பது? இதே கேள்வி தான்....

கமலா சொல்கிறாள்

அவர் என்னைத்தான் அன்று 'பிக்னி'க்கிற்கு' அழைத்தார். அவர்களை மரியாதைக்காக ஒரு வார்த்தை கேட்டிருக்கிறார். சரியானவர்களாக இருந்தால் இங்கிதம் தெரிந்து ஒதுங்கிக் கொண்டிருக்க வேண்டும். கூப்பிட்டதை சாக்காக வைத்துக் கொண்டு உடன் கிளம்பி விட்டார்கள் விமலாவும், சந்தியாவும். முதலில் கோணல் முற்றும் கோணல் என் பதைபோல் தானிருந்தது அன்று நடந்த நிகழ்ச்சிகளெல்லாம்.

அவருடைய காரிலேதான் 'பிக்னிக்' கிளம்பினோம். எனக்குத்தான் அவர் பக்கத்திலிருந்த கதவை திறந்துவிட்டார். அதிலிருந்தே மற்றவர்கள் அவர் எண்ணத்தை புரிந்து கொண்டிருக்கலாம். அதுதானே அவர்களிடம் கிடையாது. நாங்கள் 'தடா'விற்கு பிக்னிக் போவதாக தீர்மானித்திருந்தோம். பாதி தூரம் கூட போயிருக்க மாட்டோம். வானம் இருண்டு பயங்கர மழைபிடித்துக்கொண்டது. "திரும்பிவிடுவோம்" என்றாள் சந்தியா. நான் வேண்டுமென்றே "தடாவிற்கு போவதற்குள் மழை நின்றுவிடும் வேகமாய் போங்கள்" என்றேன். அவரும் அந்த மழையில் கடுவேகத்தில் காரைவிட ஆரம்பித்தார். நான் பயந்துவிடுவேன் என்று நினைத்தார் போலும். காரிலே பிறந்து, காரிலே வளர்ந்த எனக்கா வேகத்தை கண்டு பயம்? சந்தியா பயந்தாள். நியாயம் தான். ஆனால் வந்திருக்கக் கூடாது. நான் அவரை வேண்டுமென்றே என் அப்பாவின் சாரத்திய திறமை வருமா? என்று பரிகசித்தேன். இது அவருடைய பெருமையை மட்டம் தட்டியிருக்க வேண்டும். கார் பறந்தது. என் உள்ளமும் அதனுடன் இன்ப சிட்டாய் பறந்தது.

அவருக்கு டிரைவிங் அவ்வளவு பத்தாது என்பதை முன்னேயே நான் உணர்ந்திருக்க வேண்டும். எதிரிலே மரத்திலே மோதப்போய், பக்கத்திலிருந்த ஒற்றையடிப் பாதையில் காரை திருப்பி சேற்றுக் குழியில் எங்களை இறக்கினார். எங்கள் உடம்பெல்லாம் சேறு. அருமையான

'டிஷ்யூ' புடவை அநியாயமாக வீணாயிற்று. என் உடம்பெல்லாம் வலி பிடுங்கித்தின்றது. நான் எப்போதுமே சுகமாக வளர்ந்தவள். தடுக்கி விழுந்தால் கூட 'எக்ஸ்ரே' எடுத்து விடுவார்கள். என் உடம்பு அப்படிப்பட்டது. என்னால் வலியைத் தாங்க முடியவில்லை. அவரை கேட்டுவிட்டேன். "கார் ஓட்டத் தெரியா விட்டால், ஏன் வேகமாக விடவேண்டும்?" என்று. அவர் முகம் சிறுத்தது. அவர் ஆண்பிள்ளை. எவ்வளவு நோயை வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்ள முடியும். என்னால் அது சாத்தியமாகுமா? மழை இன்னும் அதிகரித்துக் கொண்டே போயிற்று, அந்த சேற்றுக் குழியில்தான் பசியோடு வாடினேம். "பெண்களை பத்திரமாக காப்பாற்ற முடியாதவர்களெல்லாம் ஏன் பெண்களை அழைத்து வரவேண்டும்" என்று அவரையே கேட்டு விட்டேன். அவரால் வந்தது தானே இதெல்லாம். அன்று பிடித்துக் கொண்ட ஜலதோஷம் இன்னும் விட்டபாடில்லை. சி! இவர்களும் மனிதர்கள் மாதிரி.

விமலா சொல்கிருள்

அவர் பிக்னிக்கிற்கு கமலாவைக் கூப்பிட்டதில் எவ்வளவு திருப்தி தெரியுமா அவளுக்கு. என்னமோ அவளுக்காகத்தான் பிக்னிக்கே ஏற்படுத்திய மாதிரி. சே! ஒரு பெண்ணிற்கு வெட்கம் வேண்டும். காரே ஏருதவள் மாதிரி அவர் பக்கத்து சீட்டிற்கு போட்டியிட்டு உட்கார்ந்துக் கொண்டாள். நானும் ஓடுவேன் என்று நினைத்திருந்தாள் போலும். சந்தியா, சாதுவாகப் பின் தொடர்ந்தாள்.

திடீரென்று எங்கிருந்தோ அந்த பாழும் மழை வந்து சேர்ந்தது. அவரும் அவ்வளவு வேகமாக காரை விட்டிருக்க வேண்டாம். கமலாவும் அவர் வெறிக்கு அவ்வளவு தூபமிட்டிருக்கவும் வேண்டாம். அவள் அப்பன் கார்விடும் பெருமை அவருக்குத் தெரிய வேண்டுமாம். எங்கள் வீட்டில் 'ஸ்டீரிங்கை' கையால் கூடத்தொட மாட்டோம். டிரைவர் காரைவிட, நாங்கள் சவுகரியமாக உட்கார்ந்து கொண்டு போகத்தான்

தெரியும். இதைச் சொன்னால் நான் பெருமைக்காரி என்று சொல்லுவார்கள்.

அந்த நல்ல மழையிலே, சேற்றிலே, எங்களை அழுத்திவிட்டார், 'பிக்னிக்' இட்டுச்சென்ற மகானுபாவர். நான் எப்போதுமே நாசூக்காக வளர்ந்தவள். சிறு வாடை காற்று அடித்தால் கூட என் 'டான்ஸில்ஸ்' பெரிதாகி விடும். மழை வரும் என்று தெரிந்திருந்தாலாவது 'மப்ளரை' கொண்டு வந்திருப்பேன். அப்படி பட்டவள் துணியெல்லாம் நனைந்து, சேருகி, அந்த கொட்டுகிற மழையில் ஒதுங்கக் கூட இடமில்லாமல் தவித்தால் எப்படியிருக்கும்? என் அம்மாவுக்கு இது தெரிந்தால் உயிரையே விட்டு விட்டிருப்பாள். அந்த குளிரிலே என் உடல் உதர ஆரம்பித்தது, ஜலதோஷம் கூட பிடித்துக் கொண்டது. சூடாக ஒரு கப் 'காப்பி' இருந்தாலாவது தேவலை போலிருந்தது. இப்படிப்பட்ட நிலையிலே தவித்துக்கொண்டிருந்த என்னை விட்டு விட்டு, மண்டையிலே ஏதோ சற்று சிராய்ந்ததற்காக, அவருக்கு சந்தியா, சினிமா கதாநாயகியைப் போல், புடவையைக் கிழித்து கட்டு கட்ட (சாதாரண பழைய வாயில் புடவை சட்டென்று கிழித்து விட்டாள். உயர்ந்த பட்டாயிருந்தால் கிழித்திருப்பாளா?) முனைந்தாள். ஆர்பாட்டம் செய்து கொண்டிருந்த அவளைக்கண்டு எனக்கு கோபம் வந்தது தவரு? "தலைவலி மண்டையைப் பிளக்கிறது. எங்கேயாவது போய் ஒரு கப் காப்பிக்காவது வழிபண்ணுங்களேன்" என்று சொன்னேன். நான் சொன்னதில் ஏதாவது தவரு? சந்தியாவின் இரும்பு சரீரத்துக்கு எதையும் தாங்கிக் கொள்ளும் சக்தி உண்டு. பூப் போன்ற என் உடலுக்கு அது சாத்தியப் படுமா? சே! சே! மனிதர்கள் இப்படி சுயநலப் புலிகளாயிருப்பார்கள் என்று தெரிந்திருந்தால் நான் வந்தே இருக்க மாட்டேன்.

சந்தியா சொல்கிருள்

நான் முதலில் 'பிக்னிக்' கிற்கு வரவேண்டாமென்று தான் நினைத்தேன். ஆனால் வற்புறுத்தி அழைத்த அவர் வார்த்தையை தட்ட முடியவில்லை. சமயமறிந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டுமென்று எண்ணிக் கொண்டுதான் சென்றேன். எனக்கு அதிகம் காரில் சவாரி செய்து வழக்கமில்லை. ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டேன்.

மழை பிடித்தவுடன் 'திரும்பி விடலாம்' என்று சொன்னேன். ஆனல் என் வார்த்தைக்கு மதிப்பேது. கமலாவின் வார்த்தைகள் அவருக்கு தார் குச்சியாகக்குத்தியது என்பதை உணர்ந்தேன். கொட்டும் மழையில் கார் பறந்தது. ஒன்றும் நேரக் கூடாதே என்று நான் அம்பிகையை வேண்டிக்கொண்டேன். கார் மரத்தில் மோதாது களிமண் குழியோடு தப்பியது. நாங்களெல்லாம் மண்ணில் புரண்டு எழுந்துவிட்டோம். என் இடது கையில் மட்டும் அசாத்தியவலியிருந்தது. பிறகு தான் எனக்கு, கை பிசகிய விஷயம் தெரியும். பாவம்! அவருடைய மண்டையை கண்ணாடி கிழித்துவிட்டது. ரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது.

எனக்கு சிறு வயதிலிருந்தே வலியையும், கஷ்டங்களையும் தாங்கிப் பழக்கம். செல்வ மகனை அவருக்கு வலி தாங்க முடியவில்லை. வலியால் துடித்தார். இதை அறியாமல் கமலாவும், விமலாவும், சிறு குழந்தைகளைப்போல் உபத்திரவப்படுத்தினர்கள். நான் சட்டென்று என் புடவையைக்கிழித்து கட்டு கட்டினேன். பாவம்! கமலாவும், விமலாவும்! அவர்கள் மென்மையாக வளர்ந்தவர்கள். அவர்களால் குளிரைத் தாங்க முடியவில்லை. அவர்களையும்

காரில் ஒரு மூலையில் உட்கார வைத்தேன். பிறகு உதவியை நாடிச் சென்றேன். அம்பிகை என்னை கைவிடவில்லை. அவளுக்கு பணக்காரன், ஏழை, கருப்பு, வெளுப்பு என்னும் வித்தியாசமெல்லாம் கிடையாதல்லவா?

சங்கரன் சொல்கிறன்

இக்கட்டான சந்தர்ப்பத்தில் தான் மனிதனுடைய உண்மையான சொரூபம் வெளி வருகிறது. கடவுள், எனக்கு அந்த சேற்றுக் குழியிலே, செந்தாமரையைக்காட்டினர். பணமும், அழகும், உதவியற்ற அந்த நிலையிலே, குணத்தின் உயர் நிலையை எனக்கு உணர்த்திக் காட்டினர். சேவையிலே இன்பம் கண்ட 'என் சந்தியா'வின் தளிர்க் கரம் பிசகிய விஷயம் மறு நாள்தான் எனக்குத் தெரிந்தது.

ஒரு வேளை அதிக அழகிருந்திருந்தால் சந்தியாவும், விமலாவைப்போல கர்வக்காரியாக இருந்திருப்பாள். அதிகப் பணமிருந்திருந்தால் சந்தியாவும் கமலாவைப்போல் டம்பக்காரியாக இருந்திருப்பாள். நான் செய்த பாக்கியத்தால் இவ்விரண்டுமே இல்லாத சந்தியா எனக்குக் கிடைத்தாள்.

கமலா—விமலா

குருட்டு அதிர்ஷ்டம் சந்தியாவுக்கு சரியாக அடித்தது. ஒண்ணுமற்றதுக்கெல்லாம், திடீரென்று வாழ்வு வந்து விடுகிறது. எங்களுக்கு அப்போதே தெரியும் அவன் ஒரு மாதிரி.... என்று....!

தமிழர் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்

எழுதிய

தமிழகத்தில் தமிழ் ஆட்சி

இன்றைய தமிழகத்தின் அரசியல் நிலையை அலசி ஆராய்ந்து, எதிர் காலத் தமிழகத்திற்கு வழி வகுத்துக் காட்டும் அதி உன்னத அரசியல் நூல்.

80 பக்கங்கள் விலை 8 அணு.

கூடிய விரைவில் வெளியாகிறது

விபரங்களுக்கு:

'உமா' தபால் பெட்டி நெ. 1377, சென்னை-1.

ஓய்வு நேரம்

'தெய்வம்'

வேலை செய்து, பின் வேலை செய்யாதிருப்பதை ஓய்வு எனக் கூறுகிறோம். ஆனால் செய்யும் வேலை, உடலையும், உள்ளத்தையும், பாதித்துவிட்ட பிறகு ஓய்வை அனுபவிக்க முடியாது.

வேலை கிடைக்காததால் சும்மா இருப்பவருக்கு பயமும், திகைப்புமே இருக்கும். வேலையை செய்யாமல் சும்மா இருப்பவருக்கு சோம்பல் இருக்கும், பணமிருந்தவர்கள் காலத்தைப் போக்குவது ஒய்யாரமாய் இருக்கும். ஆதலால் சும்மா இருப்பவர்களை ஓய்வாக இருக்கின்றனர் என்று கூற முடியாது.

ஓய்வு நமக்கு அறிவையும், ஆற்றலையும் அளிக்கிறது. ஊக்கமும் முயற்சியும் ஊட்டுகிறது. மொத்தத்தில் புதியதோர் திறமையை அளிக்கிறது.

பள்ளி மாணவர்கள் படித்தான பிறகு விளையாடுவதை ஓய்வாகக் கொள்கிறார்கள். அதனால்தான் நம் தேசியக் கவி பாரதியார், "காலை எழுந்த உடன் படிப்பு, பின் கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு என்று பழக்கப் படுத்திக் கொள்" எனக் கேட்டுக்கொள்கிறார். காரணம், செய்யும் வேலை தொடர்ந்து மிக்க கஷ்டம் தோன்றாமலிருக்க இடையிடையே மாற்றம் வேண்டுமென்பதே யாகும்.

உழவன் காலைக்கதிரவன் தன் பொற் கிரணங்களை கிழக்கே பரப்பி வருவதற்குமுன்; சேவல் கூவும் நேரத்தில் எழுந்து, நேரே கழனிக்குச் செல்கிறான். அங்கு நெற்றிநீர் நிலத்தில் விழ, கடும் வெயில் முதுகுத் தோலை உரிக்க, மிகவும் பாடுபட்டு நிலத்தில் வேலை செய்த பிறகு வெள்ளித் தடாகத்தில் நீந்தும் உதயம் மாலையில் பொற்குளத்தில்போய் மறைந்தான பிறகு, இருள் அன்னை தன் கரிய போர்வையால் அனைத்தையும் போர்த்திடக் காண்கிறான். பின் இல்லம் சேர்ந்து அங்கு இருப்பதை உண்ட திருப்தியோடு, வாய் நிறைய தாம்பூலத்தையும் அறைத்துக் கொண்டு, அருகே நடக்கும் தெருக்கூத்தை இரவு முழுவதும் கண்டு ரசிப்பதை ஓய்வாகக் கொள்கிறான். இவ் உழவர்களுக்கு, உழவு வேலை முடிந்தான பிறகு, தனக்குள்ள ஓய்வு நாட்களில் பாய் முடைதல், கயிறு திரித்தல், முதலான குடிசைத் தொழில்களை செய்யும் வண்ணம் பல அறிஞர்கள் அவர்களுக்கு அறிவித்துள்ளனர். இது வரவேற்கத் தக்கதே. ஆனால் இதில் கிடைக்கும் ஊதியமும் இவர்களுக்கு தன் விருப்பம்போல் செலவிடும் நிலைமையும் வரவேண்டும். இல்லையேல் இந்த ஓய்வு நேரத்தில் செய்யும் வேலை இவர்களுக்கு ரசிக்காது, வேதனைத்தான் தரும்.

நம் வாழ்க்கை சுகமுற, குறிப்பிட்ட ஓர் தொழிலை செய்கிறோம். அதுவும் 6 மணி நேரமோ, 8 மணி நேரமோ நம் கடமையை ஒழுங்காகச் செய்கிறோம். வேலை செய்தான பிறகு நமக்கே ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பு உதிக்கிறது. உதித்ததும் நாம் விரும்பிய வகையில் ஓய்வை அனுபவிக்க எலலா உயர்தர கம்பெனியிலும், அலுவலகத்திலும் நூல் நிலையம், விளையாட்டு கருவிகள் முதலியன இருக்கின்றன. அங்கு வேலை செய்வோர் அனைவரும் ஒன்றுகூடி பேசிக் களிப்பார்கள். சிலர் கேரம் ஆடுவர், சிலர் சீட்டாடுவர், சிலர் பந்

நாட்டங்கள் நடத்துவர், மேலும் பலவிதமான விளையாட்டுகளை நடத்தி தம் ஓய்வை ரசிக்கின்றனர். வேறு சிலர் பல புத்தகங்களைப் படித்தும், செய்தித்தாளை புரட்டிக்கொண்டும் எங்கெங்கு என்னென்ன அற்புதங்கள் நேர்ந்துள்ளன என்பதையும், எந்தெந்த தலைவர்கள் என்னென்ன சொல்லியுள்ளனர் என்றும் அத்தலைவர்களைப் பற்றித் தம் கருத்தையும் அளவளாவிப் பேசி மகிழ்வர்.

ஓய்வு நாட்களில் உல்லாச பிரயாணமெனச் சென்று பல இடங்களிலுள்ள பசும் புல் தரைகளையும், பச்சைப் பசேலென படர்ந்திருக்கும் செடி, கொடிகளையும், அவற்றினின்று நம்மைக் கண்டு சிரிக்கும் அழகிய மலர்களையும், அடர்ந்த மரங்களையும் கண்டு, அங்குள்ள இயற்கையான காற்றை உட்கொண்டு மிக்க களிப்போடு காலத்தைரசிக்கிறோம். மேலும் நீர்வீழ்ச்சிகளையும், மலைத் தொடர்களையும், அதியற்புத அதிசயமான தாஜ்மஹால் போன்றவை முதற்கொண்டு, கைவன்மையைக் காட்டும் மஹாபலிபுரக் கற்கோயில் போன்றவைகளையும், மிருக கண்காட்சிச் சாலை, புஷ்பக் கண்காட்சிச் சாலை, பொருட் காட்சிச் சாலை முதலியவைகளையும், குத்துச்சண்டை, குஸ்தி, கிரிக்கெட்போன்ற மற்றுமுள்ள பந்தயங்களையும் கண்டு இன்புறுகிறோம்.

ஓய்வு நேரத்தில் கரையேயில்லாத, ஆழங்காணமுடியாத, எப்பொழுதும் அலைமோதிக் கொண்டிருக்கும் ஆழாழியினருகே சென்று அங்குள்ள ஆரோக்கியமான உப்புக் காற்றை உட்கொண்டு வெண்மையான மணலில், மனவேதனையை மறந்து மிக்க மகிழ்ச்சிக் கொள்கிறோம். படக்காட்சிக்குச் சென்று பரவசமடைகிறோம். மேலும் நடனத்திலும், நாடகத்திலும், பாட்டிலும், விருந்திலும் பூரிப்பு அடைகிறோம்.

ஓய்வு நேரத்திலே தனக்கும் தன் குடும்பத்திற்கும் முக்கியமான வேலையை களிப்போடு செய்கிறோம். அதாவது தனக்கு வேண்டிய பொருளை வகையாய் வாங்கி ஒழுங்குபடுத்தி வைப்பதும், தம் உடைகளை சுத்தப்படுத்துவதுமான செயல்களைச் செய்து வீட்டை ஒழுங்காகவும், அழகாகவும் வைத்திருக்கிறோம்.

இந்நேரத்தில் தான் நாம் பொதுக்காரியங்களுக்கும் தலையிடுகிறோம். சங்கத்தில் சேர்ந்து சொற்பொழிவு நடத்தியும், அந்தந்த சமுதாயத்திற்கு வேண்டிய பொது ஏற்பாடுகளை செய்வதோடு நம்மால் இயன்ற உதவி உடலினாலும், மனத்தாலும், பேச்சாலும் செய்கிறோம்.

ஓய்வு நேரத்தில் குழந்தைகளோடு கொஞ்சி விளையாடி, தானும் குழந்தையாக நடித்து, தன் கவலையை மறப்பர். எல்லாம் வல்ல இறையை நினைந்து மனம் ஒருமிக்கும் வகையில் தேவார, திருப்புகழ் முதற்கொண்டு, பிரபந்தம், திருமந்திரம், சித்தர் பாடல்கள்வரை படிப்பவருமுண்டு. படித்து மனதை சஞ்சலமற்ற நிலையில் ஒருமித்து இருப்பவர்களும் இருக்கின்றனர்.

முடிவாக மேற் கூறியபடி ஓய்வை ரசிக்க தம் வாழ்க்கையின் சூழ்நிலை — பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்க வேண்டும். ஆனால் தம் லட்சியம் கைக் கூடாமல் வருந்துவோர்க்குள்ள ஓய்வு, சவத்தின் மீதுள்ள நறுமலர்போல பயனற்றதாகும். ஆதலால் ஒவ்வொருவருடைய லட்சியமும் ஈடேறும் வகையில் நம் சமுதாயம் அமையப் பாடுபட வேண்டும்.

அன்பு வென்றது

"ஜயலக்ஷ்மி"

கார் டிரைவர் ரத்தினத்தை அழைத்து 'பீச்சுக்குப் போக வேண்டும். வண்டியை தயார் செய்' என்று உத்தரவிட்டேன். அப்பொழுது மாலை மணி ஐந்து.

ஐந்து நிமிஷத்தில் கார் வந்து காம்பவுண்டுக்கருகில் நின்றது. நான் ஏறி அமர்ந்ததும் கார் நகர்ந்தது. ரத்தினம் தான் ஓட்டி வந்தான். கார் தெருவின் திருப்பத்தை அடைந்து திரும்பியதுதான் தாமதம். அவ்வழியே நடந்து வந்துகொண்டிருந்த ஒரு மாது, கார் ஹாரனுக்கும் செவி சாய்க்காமல் அப்படியே மயங்கிக் கீழே விழுந்துவிட்டாள். நட்ட நடு ரோடு. காருக்கும் அவளுக்கும் மத்தியில் ஒரு அடி தான் இடைவெளி யிருந்தது.

உடனே காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான் ரத்தினம். நானும் இறங்கினேன். கும்பல் கூடுவதற்குள் இருவருமாக அந்த பெண் பிள்ளையைத் தூக்கிக் காரில் கிடத்தினோம். திரும்பவும் டிஸ்பென்ஸரிக்கே காரை ஓட்டச் சொன்னேன்.

டிஸ்பென்ஸரியை அடைந்ததும் கம்பவுண்டரும் ரத்தினமுமாகச் சேர்ந்து அந்த மாதை வார்டிற்கு எடுத்துச் சென்றார்கள்.

நான் சென்று அவளைப் பார்த்தேன். பரட்டைத் தலையும், இடுங்கின கண்களும், குழி விழுந்திருந்த கன்னங்களும், கன்னங்கரேல் என்ற அவளுடைய தோற்றமும் பார்க்க மிகவும் அனுதாபத்தை அளித்தது. ஆனால் அதனூடே அவளுடலில் பின்னிக் கிடந்த இளமை மட்டும் தெரிந்தும் தெரியாமலும் காணப்பட்டது. கழுத்தில் எண்ணைச் சிக்குக்கூட இல்லாது வரண்டு முரடாயிருந்த மஞ்சள் கயிறு அவளை மணமானவள் என்று தோற்றுவித்துக் கொண்டிருந்தது. அவளை பரிசோதித்ததில் அவளுடலில் பசியும், சோர்வும்தான் இருந்ததாகத் தெரிந்ததே தவிர வேறெந்தக் கோளாறும் இருக்கவில்லை.

மூர்ச்சையை தெளிவித்தபின் கொஞ்சம் ''க்ளுகோஸ்'' கொடுக்கச் செய்தேன். அவள் கொஞ்சம் களைப்பு நீங்கப் பெற்றவளாய் ''நான் எங்கே இருக்கேன் ?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்திருக்கத் தலைப்பட்டாள்.

அவளைத் தடுத்து மறுபடியும் படுக்கவைத்த நான், ''நீ இருப்பது ஆஸ்பத்திரி. நீ ரோட்டில் மயங்கி விழுந்து விட்டாய். உன்னை இங்கே எடுத்து வந்தேன். நீ யார்? உனக்கு எந்த ஊர்?'' என்று கேட்டேன். அவள் எதுவும் கூற மறுத்து

விட்டாள். நான் மிகவும் வற்புறுத்தினேன்.

"என்னைப் பற்றி சொன்னு நீங்க எனக்கு என்ன செய்யப் போறீங்க?" என்று கேட்டாளவள் நிராசை மிகுந்த குரலில்.

"உனக்கு என்ன வேண்டும்? பிழைக்க வழி வேண்டும்; அவ்வளவுதானே? உனக்கு என் வீட்டிலேயே ஏதாவது வேலை தருகிறேன்" என்று உறுதியாக மொழிந்தேன்.

அதற்குப் பிறகு அவள் கூறச் சம்மதித்தாள். மறைவாக நின்று கொண்டிருந்த கம்பவுண்டரும் ரத்தினமும் கூட அவள் கூறும் கதையைக் கேட்கத் தயாராக இருந்தார்கள்.

"என் பெயர் பொன்னி!" என்று ஆரம்பித்தாள் அவள்!! "எனக்கு ஊரு பூமங்கலம். நான் பிறந்ததுலேயிருந்து சொல்றதைக் காட்டிலும் நான் வளர்ந்து கலியாணம் கட்டிக்கிட்டதிலேயிருந்து சொல்றது தான் சரி" என்று கூறிவிட்டு சற்று நேரம் சும்மாயிருந்தாள்.

"சரி, சொல்லு பார்க்கலாம்" என்று துரிதப்படுத்தினேன் நான், அவள் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொல்லத் தொடங்கினுள்.

"நாலு வயசாயிருக்கிற போதே அம்மாவையும் அப்பாவையும் தொலைச்சுப்புட்டேன். அப்புறம் அத்தை வீட்டிலே தான் வளர்ந்தேன். அத்தை என்னமோ என் மேலே பிரியமாதான் இருந்திச்சு. அதுக்கு புருஷன் சின்ன வயசுலேயே இறந்துட்டுது. ஆனு அவரு கொஞ்சம் ரொக்கப் பணம் சேர்த்து வச்சிருந்தாரு. அதைக் கொண்டு ஒரு மாதிரியா காலத்தை தள்ளுக்கினு வந்தோம்.

அத்தை இரண்டு கறவை மாடுகளை வாங்கி பால் வியாபாரம் செய்ய ஆரம்பிச்சுது: அதுக்குப் பொறகு நாங்க கொஞ்சம் சௌகர்ய்மாத்தான் இருந்து வந்தோம்.

இப்படியே வீட்டிலே இருக்கிறவங்க எல்லாரும் உண்மையாவும் பொறுப்பாவும் இருந்துகிட்டே வந்திருந்தா இபபோ நல்ல நிலைமையிலே இருந்துவிடலாம். எதுக்கும் குடுத்து வைக்க வேண்டாமா?

நானும் அத்தையும் எவ்வளவோ கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டு தானிருந்தோம். நாங்கள் கஷ்டப்பட்டு சேர்க்கிற பொருளையெல்லாம் நாசம் பண்ணுகிறதுக்கினு என் அத்தைக்கு ஒரு மகன் இருந்துச்சு. ஒரே மகன் ஆனதுனுலே அது கிட்டே அத்தைக்கு கொஞ்சம் அருமை. ரொம்பச் செல்லம் குடுத்து வளத்துட்டது. கண்டிக்கிறவங்க இல்லாமே தத்தாரியா வளர்ந்த பிள்ளை உருப்பிடுமா? துர்சவகாசம் கொண்டது. ஊர்ச்சண்டையெல்லாம் விலைக்கு வாங்கி வருவான். இன்னும் பல தீயவழக்கங்களும் கொஞ்சம் கொஞ்சமா கத்துக்கிட்டான். தன் மகனின் நடத்தையைப்பத்தி ஊராருங்க யாராச்சும் வந்து முறையிட்டா அவைகளை நம்பாது என் அத்தை பிள்ளைக்குப் பரிந்து தான் பேசும். ஆனுல் போகப்போக அதுக்கும் உண்மை தெரிஞ்சுப் போயிடுச்சு. அதுவே கவலையா போயிட்டுது அத்தைக்கு. மகனை நல்லபடியா திருத்த அரும்பாடு பட்டுது. ஒண்ணும் பிரயோசனம் இல்லை. அதே ஏக்கமா படுக்கையிலே விழுந்துட்டுது.

அத்தைக்கு இனிமே தான் பொழைச்சு எழுந்திருக்கமாட்டோம்னு தோணிடுச்சு. ஒரு நாளு மகனைக் கூப்பிட்டு நல்ல புத்தி சொல்லி பாத்தது. ஒண்ணுக்கும் பதிலே பேசலை மகன். அதுதான் சமயம்னு ஆரம்பிச்சுது "உனக்கு கலியாண வயசு

"ஹி.... ஹி.... இன்னேலேயிருந்து சமையல் வேலேலேருந்து நின்னுக்கறேன்....! புதுசா ஒரு சினிமா கம்பெனி ஆரம்பிக்கிறதா திட்டம் போட்டிருக்கேன்.... நீங்க பெரியமனசு வச்சி முதல் படத்திலே ஹீரோயினு நடிச்சி.... என்னே கடைத்தேற்றி விடனும்.... ஹி.... ஹி...."

வந்துட்டுது. நம்ம பொன்னிக்கும் வயசு ஆகிக்கிட்டே வருது. நான் செத்துட்டா நீங்க ரெண்டு பேருமே அனுதைகளா போயிடுவீங்க அதனுலே நான் இருக்கிறப்பவே நீ பொன்னி கழுத்திலே மூணு முடிச்சு போட்டுடு. பிறகு நான் நிம்மதியா கண்ணே மூடுவேன்'' என்று கண்ணுலே தண்ணி தாரை தாரையா விட்டுக்கினே சொல்லிச்சு அத்தை.

தாயி கண்ணுலே வழிகிற கண்ணீரைப் பார்த்ததும் மகனுக்கு என்ன தோணிச்சோ தெரியலே. ஒரு நாளும் இல்லாமே அம்மா சொல்றதுக்கு "சரியம்மா" இன்னுட்டது.

என் கிட்டேயும் விஷயத்தைச் சொல்லிச்சு அத்தை.

"என்ன அத்தை. நீ இருக்கிறபோதே அத்தான் இப்படி துஷ்டத்தனமா இருக்குதே! நீ போயிட்டா அது என்னே கடைசி வரைக்கும் வச்சுக் காப்பாத்துமா?'' என்று கேட்டு அழுதுபிட்டேன் நான்.

"எனக்கும் அதுவேதான் பெரிய கவலேயாயிருக்கு பொன்னி! ஆனு அவனுக்கு வெளியேயிருந்து யாரும் பொண்ணேக் கொடுக்க பயப்படுவாங்களே. நீதான் அவனேக் கட்டிக்கிட்டு உன் குணத்தாலே அவனே வழிக்கு கொண்டாரணும். வேறு வழியில்லே கண்ணு! நான் சொல்றதைக் கொஞ்சம் கேளும்மா! முறைப் பெண் நீ இருக்கிறப்போ வேறு பொண்ணுதான் தேட முடியுமா? அப்படித் தேடினுக் கூட எல்லாரும் உன் கையிலே இருக்கிறப்போ எங்க பொண்ணே ஏன் கேக்குறேன்னு சொல்லி பரியாசம் பண்ணுவாங்களே! என்ன தங்கச்சி செய்யுறது?'' என்று ரொம்ப விசனமாகக் கேட்டுது அத்தை.

நானும் யோசிச்சுப் பார்த்தேன். அறியாத வயசுலேயிருந்து நம்மை எடுத்துவளத்து ஆளாக்கிய அத்தைக்கு நாம் இது கூட செய்யாட்டி பாவம்னு தோணிச்சு எனக்கு. தவுர நாம் தான் பார்க்கறதுக்கு அட்டக் கரியா இருக்கோம். யாரு நம்மை வந்து கட்டிக்கப்

போருங்க வலுவுலே! என்னமோ நமக்கு நல்ல அதிருஷ்டம் இருந்தா அத்தான் மனசு மாறி நல்ல குணமா ஆகக் கூடாதா, என்று நினைச்சேன், தவுர அத்தானும் வாட்ட சாட்டமா கண்ணுக்கு அழகா இருக்கும். அத்தைகிட்டே அத்தானை கட்டிக்க சம்மதம்னு சொல்லிப்புட்டேன்.

அப்புறமா எங்க கலியாணமும் முடிஞ்சுது. மறு மாசமே அத்தையும் கண்ணை மூடிடிச்சு. அதுக்கப்புறம்தான் எனக்கு பெரியசனியன் புடிச்சுடுத்து. அத்தை செத்ததுக்கப்புறம் அத்தானின் அட்டகாசம் அதிகமாயிட்டுது. எடுத்ததுக்கெல்லாம் அடி, உதை, திட்டு, வீட்டுலே கொஞ்ச நேரம் கூடத்தங்குவது கிடையாது.

நான் எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடி நயமாகவும், பயமாகவும் புத்தி சொல்லிப் பார்த்தேன். ஒண்ணுக்கும் மசியலை. இரவுலே வீட்டுலே ஒரு நாள் கூட படுத்தது இல்லை. ஏன்னு கேட்டா ''ஓங்கரிக்கட்டை மூஞ்சியை பார்க்க எனக்கு பிடிக்கலை'' என்று கத்திப்புட்டு வெளியே ஓடிடும். என்னைக் கரிக்கட்டையின்னும் தான் கூப்பிடும். நான் என்ன செய்யறது? அது என் பாவம்.

இப்படியே இருந்திருந்தா கூடப் பரவாயில்லையே. கொஞ்சமா வீட்டுலே இருக்கிற சாமான், சட்டு, பணம், காசு எல்லாம் ஒண்ணு ஒண்ணு போகத் தொடங்கிடுச்சு. நாலு பேரே விசாரிச்சுதிலே அதுக்கு பக்கத்துத்தெரு பங்கஜத்துக் கிட்டே சிநேகம்னு தெரிஞ்சுது.

வீட்டுவாசலே கவனிக்கிறது இல்லை. ஒரு வேலை செய்யறதில்ல. எப்படிக் குடித்தனம் நடக்கும்? மூதேவி வந்துட்டா வீட்டுக்கு. வீட்டிலே ஒண்ணுலே ஒண்ணு கிடையாது. கறவை மாட்டைக்கூட இட்டுக்கினு போய் பங்கஜத்து வீட்டுலே கட்டிப்பிடிச்சு அத்தான். நான் அன்னைக்கு அத்தான் கிட்டே காலைப் பிடிச்சிக் கிட்டு கத்தினேன். இந்த மாடுங்களாச்சும் இருக்கட்டும். இதைக் கொண்டு வயிறு கழுவலாம்னு எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன். அந்த மாடு கட்டுற தும்பாலேயே என்னை அடிச்சுத் தள்ளிப்பிட்டு மாட்டை ஓட்டிக்கினு போயிட்டது.

வீட்டுலே ஒண்ணும் பாக்கியில்லாமே காலியாயிட்டது. என்ன செய்யறது? நான் வயிறு வளக்கணுமே. வேறே வழியில்லாமே ஒரு முதலியார் வீட்டுலேபோய் வேலைக்கு அமந்தேன். அங்கே கிடைக்கிறதுட்டு இரண்டு வவுத்துக்கு காணலை. இருக்கிறதை ஆக்கி படைச்சு அத்தானுக்குப் போட்டுட்டு நான் சும்மாயிருந்தது எத்தினி நாளோ! இதுனாலே நான் பட்டக் கஷ்டம் கணக்கேயில்லை. எனக்கும் மனசு ரொம்ப வெறுத்துக் கிட்டே வந்தது.

நான் வேலே செய்யற வீட்டுக்கு அத்தான் அடிக்கடி வருவதுண்டு. அவங்க வீட்டுலே ஏதாச்சும் தின்பண்டம் கொடுத்தா வாங்கித் தின்னுட்டு என்கையிலே இருக்கிற கால், அரையையும் பிடுங்கிக்கிட்டுப் போகலாம்னு தான் வரும். நானும் ஏதாச்சும் கிடைச்சதை அதுகிட்டே கொடுத்துடுவேன். என்னதான் அது என்னை பாடாய் படுத்தி வச்சாலும், அது கூட சின்ன வயசுலேயிருந்து பழகின தோஷத்தினுலும், எல்லாத்துக்கும் முக்யமா அது என்னுேட தாலி கட்டின புருஷன் ஆச்சே! அந்த ஆசை சும்மா விடுமா! அது நல்லா இருந்தாத்தானே நான் மஞ்சளும் கழுத்துமா கூசாமே தெருவிலே வரமுடியுது. இப்படி நெனேச்சே நான் மனசை தேத்திக்கிட்டே வந்தேன். இப்படியே எங்க காலமும் இரண்டு வருஷங்களே கடத்திட்டுது.

ஒரு நாளு நான் வேலே செய்யற வீட்டுலே ஏதோ களவு போயிடுச்சுன்னு சொன்னுங்க. அவங்க வீட்டு ஐந்து வயசுக் குழந்தையின் ஒடம்பிலே இருந்த சங்கலி, வளேகள், எல்லாத்தையும் காணவில்லேயாம். போலீஸுக்கும் தகவல் போச்சுதுங்க.

நான் வேலே முடிஞ்சு வீட்டுக்குத் திரும்பினேன். அங்கே அத்தான் கையிலே எங்க எஜமானருடைய வீட்டுலே களவு போன நகைகளே வச்சுக் கிட்டிருந்தது. அதை மறைச்சு வைக்க இடம் தேடிகிட்டிருந்தது போலேயிருக்கு.

அதைப் பார்த்ததும் அப்படியே இடிஞ்சு போயிட்டேன். அத்தான் திருடவும் ஆரம்பிச்சிடுச்சுங்கறதை நெனச்சதும் என் மனசு அப்போ எப்படித்தான் இருந்தது? அதை என் எஜமானரிடமே திரும்பக் கொண்டு கொடுத்துவிட்டு அவரு காலுலே விளுந்து மன்னிப்புக் கேட்டுக்கும்படிச் சொன்னேன். வேண்டிக்கிட்டேன். அத்தானின் காலேப்பிடிச்சிக்கிட்டு கெஞ்சினேன். ஆனுல் அது மனசு மாறலே. தன் காலாலேயே என்னேப் பலமாக உதைச்சுத் தள்ளிச்சு என் மனசு பொறுக்கலே. அது என்னே உதைச்சுத் தள்ளியது கூட எனக்கு குத்தமா தோணலே. ஆனுல் இரண்டு வருஷமா யாராலே அரை வயித்தையாச்சும் களுவினுேமோ அவங்களுக்கே துரோகம் செய்யத்தான் என் மனசு ஒப்பலே. உண்ட வீட்டுக்கு ரெண்டகமா? கூடாது. இதை எப்படி

யாவது தடுத்துப்பிடணும்னு நெனேச்சுப்புட்டேன்.

எழுந்திருச்சு அத்தானை கோவமா முழிச்சுப் பார்த்தேன் ''நீ திருடியதை இதோ போலீஸுலே போய் நானே சொல்லிப்புடறேன்''னு கத்திக்கிட்டே புறப்பட்டேன். ''அதுவரைக்கும் நீ உயிரோடு இருந்தாத்தானே?'' என்று சீறிய வண்ணம் புலிமாதிரி என் மீது பாய்ஞ்சுது அத்தான். அதே சமயம் வாசலிலே 'டக் டக்' இன்னு சத்தம் கேட்டுது. அதோடே நான்கு ஐஞ்சு போலீஸுக்காரங்க உள்ளே நுழைஞ்சிட்டாங்க. கையிலே இருந்த நகையை மறைக்கறதுக்குள்ளே அத்தானை பிடிச்சிக்குட்டாங்க.

அதைப் பார்த்ததும் எனக்கு ஒரு நிமிஷம் ஒண்ணுமே புரியலை; அப்படியே சிலையா நின்னுட்டேன். செத்த முன்னே அத்தான் எனக்கு செஞ்ச தீங்கையெல்லாம் மறந்தேன். கட்டின புருஷன் கைதியா ஜயிலுக்குப் போவதை என் மனசு நினைச்சுக் கூட பார்க்க பயந்தது. ஆசையும் பாசமும் என்னை புடிச்சு முன்னே தள்ளிச்சு. மறு நிமிஷமே போலீசார் கிட்டே போய், ''ஐயா நகைகளை திருடியது அவரு இல்லை. அவருக்கு அந்த வீடு இருக்கிற எடங் கூடத் தெரியாது. நான் தான் திருடினேன். அந்த விட்டுலே வேலை செஞ்சிக்கிட்டு இருந்தபடியாலே மனசுக் கொழம்பிட்டுதுங்க'' என்று கூறினேன். அந்த சமயத்துலே எனக்கு அம்மாத்தம் துணிச்சல் எங்கிருந்துதான் வந்துதோ தெரியாது. கொஞ்சம்கூட வாய் நெறடலை, கண்ணு கலங்கலே. என் முகத்தைப் பார்த்ததும் போலீசுக்காரங்களுக்கு என்ன பட்டுதோ தெரியலை. நகைகளையும் எடுத்துக்கிட்டு என்னையும் அழைச்சிக்கிட்டுப் போனாங்க. நான் அத்தானை திரும்பி திரும்பி பார்த்துக்கிட்டே போனேன். அது பேசாமே மரம் மாதிரி நின்னுகிட்டிருந்தது.

அப்புறம் எனக்கு இரண்டு வருஷம் தண்டனைக் கொடுத்துட்டாங்க. நான் ஜெயில்லே இருந்தபோது இப்பவாச்சும் அத்தான் மனசு திருந்தி நல்லபடியா நடந்துகிட்டு வருதோ என்னவோன்னு நெனச்சிக்கிட்டே தான் இருந்தேன்.

தண்டனை முடியறதுக்கு நாலு மாசத்துக்கு முன்னமேயே என்னை வெளியிலே விட்டுட்டாங்க. நேரே வீட்டுக்குத்தான் போனேன். ஆனல் அங்கு அத்தானைக் காணலே. அந்த ஊர் பூராவும் தேடிப் பாத்தேன். எங்கும் அகப்படலை. அந்த ஊரிலே வேறே எல்லாரும் என்னைத் திருடி.... திருடின்னு பரியாசம் பண்ணினங்க. அது எனக்குப் பொறுக்கலிங்க. இனிமே அந்த ஊருலே இருந்து பொழைக்க முடியாதுன்னு தீர்மானிச்சிட்டு அந்த ஊரைவிட்டும் கிளம்பிட்டேன். ஒவ்வொரு ஊரா அலைந்து அத்தானை தேடிகிட்டே வந்தேன். அது எங்கேயும் கண்ணுக்கு தட்டுப்படலை.

இந்த ஊருக்கு வந்து சேந்தேனுங்க. பசி வவுத்தை புடுங்கியெடுத்துப் புட்டுதுங்க. கண்ணு இருட்டிக்கினே வந்துதுங்க. தலையை சுத்திக்கினே வரவே நான் நடந்து வந்தபடியே கிழே விழுந்துட்டேனுங்க. அப்புறம் நடந்தது தான் உங்களுக்குத் தெரியுமே?'' என்று முடித்தாள் பொன்னி. அவளுடைய கண்களிலிருந்து வழிந்திருந்த கண்ணீர் கன்னத்தில் வரியிட்டிருந்தது.

அப்போது ''பொன்னி!'' என்று விறிட்டலறிக் கொண்டு ஓடிவந்தான் ரத்தினம் பொன்னியிடம். நான் கொஞ்சமும் எதிர் பாராத விதத்தில் நீர்த்திரை

யினிடையே நிமிர்ந்து பார்த்தாள் பொன்னி, மறு கணமே ''அத்தான்'' என்று கதறிக்கொண்டு ரத்தினத்தின் கால்களில் விழுந்தாள். ரத்தினம் அவளை ஆதுரத்துடன் தூக்கியெடுத்து அணைத்துக் கொண்டான்.

நான் எழுந்திருந்து என்னறைக்குச் சென்றுவிட்டேன். பக்கத்து அறையில் அவர்களிருவரும் பேசிக்கொண்டது என் செவியில் விழுந்தது.

''அத்தான்! ஒங்க மனசு எப்படி மாறிச்சு! நீங்க எப்படி இங்கே வந்தீங்க?'' என்று ஆவலுடன் கேட்டாள் பொன்னி.

''பொன்னி! அன்னைக்கு நான் திருடிய குற்றத்துக்காக நீ ஜெயிலுக்குப் போனாய் அல்லவா? அந்த மறு நிமிஷமே எனக்குப் புத்தி வந்துட்டுது. ஒரு பாவமும் அறியாத நீ எனக்காக ஜெயிலுக்குப் போனதை நினைச்சு நான் செய்த கொடுமையெல்லாம் எண்ணி எண்ணி மனசு கலங்கினேன்.

இனியாச்சும் நீ ஜெயிலிலேயிருந்து வந்தப் பொறகாச்சும் இரண்டு பேரும் சேர்ந்து ஒத்துமையா வாழணும் என்று உறுதி கொண்டுகிட்டேன். நீ ஜெயிலிலேயிருந்து வருகிறதுக்குள்ளே நாம் ஏதாவது ஒரு தொழிலிலே சேர்ந்துக்கணும். நீ விடுதலையாகி வந்தப் பொறகு உன்னை நல்லபடியா நடத்தி வைச்சுக்கணும்னு நெனைச்சிக்கிட்டு வேலை தேடி அலைந்துக் கொண்டே வந்தேன் இந்த ஊருக்கு.

அப்போதான் இந்த டாக்டர் அய்யாவை சந்திச்சேன். என் நிலமையைச் சொல்லி ஏதாச்சும் வேலை தேடிக் கொடுக்கணும்னு வேண்டினேன். ஆனா ஏதாச்சும் கத்துக்குடுத்தீங்கன்னா கத்துக்கறேன்னு சொன்னேன். கையை எடுத்துக்கும் பிடணும். இந்த மகராஜன் என்னை வேண்டாம்னு சொல்லாமே அழைச்சிக்கிட்டு வந்து கார் ஓட்டக் கத்துக்குடுத்தாரு. நானும் வெசையா கத்துக்கிடவே நல்லா ஓட்டத் தெரிஞ்சிடுத்து.

இப்போ எனக்கு மாசம் முப்பது ரூபாய் சம்பளம் கொடுக்கிறாரு. என் செலவுபோக நூறு ரூபாய் சேர்த்து வச்சிருக்கேன். உனக்குத் தண்டனை முடிய இன்னும் இரண்டு மாசம் இருக்கு. தண்டனை முடியற தினத்துக்கு ஜெயிலண்டை வந்து உன்னை கூட்டியாரலாமின்னு நெனைச்சிக்கிட்டிருந்தேன். அதுக்குள்ளாறே எப்படி உனக்கு விடுதலைக் கிடைச்சுது?'' என்று கேட்டான் ரத்தினம்.

''அதுவா? நான் ஜெயிலிலே நல்லபடியா நடந்துக்கிட்டேன்னு நாலு மாசத்துக்கு முன்னமேயே வெளியே விட்டுட்டாங்க. நான் அலைஞ்சு திரிஞ்சு இங்கே வருகிறதுக்கு இரண்டு மாசத்துக்கு மேலே ஆயிட்டுது.''

''நல்ல காலமாப் போச்சு. எங்க டாக்டர் அய்யா காருக்கு எதிரே நீ மயக்கமா விழுந்தே. இல்லாதபோன உன்னை எப்படி நான் பார்க்க முடியும்?'' என்று உணர்ச்சி மிகுந்த குரலில் மொழிந்தான்.

'போவுது! இனிமேயாச்சும் நாம் நல்லபடியா குடுத்தனம் பண்ணினா சரிதான'' என்றாள் பொன்னி.

''இனிமே எனக்கு நல்ல புத்தி வந்துட்டுது பொன்னி. நான் பழைய ரத்தினம் இல்லை. புது ரத்தினம். உன்னை என் கண்ணுமாதிரி வெச்சுக் காப்பாத்துவேன் தெரியுமா?'' என்றான் ரத்தினம் அன்பு ததும்பும் குரலில்.

அருட்கவி பாரதி!

(பாரதி மோகன்)

★

சென்னைக் கடற் கரையில், நிலவினிலே
சிந்தை நடனங் கண்டு வசமிழந்தேன்,
அன்னை "தமிழரசி" ஆர்பரித் திட்டாள்!
அருட் கவி பாரதிபா ரதி யென்றாள்!
மன்னர், புலவர்களைப் பெற்றிருப்பினும்
மாகவி, பாரதிக்கு நிகரு முண்டோ?
கன்னித் தமிழ் மொழியில் கவிதை கொட்டி
கடலின் அலையெனவே முழக்க மிட்டான்!

அடிமை விலங் கொடிக்க ஆர்த் தெழுந்திட்டான்!
அச்சமில்லை என்று தேச பக்தி பாடினான்!
குடிமை உயர்க வெனச் சங்க மூதினான்
குலம், இனம், ஒனறெனவே நீதி சமைத்தான்
படி மிசை சுதந்திரம் வந்ததே யென்று
பாடியே ஆனந்தக் கூத்து மாடினான்!
மிடிமை தொலைக வென முர சொலித்தான்
மேதினி மக்கள் சமம் வாழ்க வென்றான்!

சாதி, மதச், சமய, பேத மொழிக
சமரச, சன்மார்க்கம், வருக வென்றான்
நீதி நெறி யுடனே வாழ்ந்திடுக
நிச்சயம் வெற்றி யெனப் பள்ளுப் பாடினான்.
ஓதிய தமிழ் மறை வள்ளுவனும், பிறந்த
உயந்த தமிழ் நாடு, ஓங்குக வென்றான்
வீதி பெருக் கிடவும் ஞானம் விளைக
விஞ்ஞானம் தமிழினில் மலர்க வென்றான்!

எத்தனை யோ இன்னும் கவியாரம்,
எனக்குப் புனைந் தளித்து உளமகிழ்ந்தான்
அத்தனையும், வாடா மலர்க் கவிகள்
அமர கவி பாரதி வாழ்க வென்றாள்
முத்தமிழ் பொழிந்தமா கவியின் பெயர்
முழங்குக வையக மெங்கணுமே
நித்தமும் பாரதி பணி புரிந்து
நீடுழி வாழ்கவென வணங்குவமே!

யாரும் பயப்பட வேண்டாம். இங்கே கண்ணீரைக் காட்டி கட்டுரையாளர் உங்களைச் சிரிக்கத்தான் வைக்கிறார்........!

★

ஆர். பி. மல்லாரி எழுதிய

கண்ணீர்!

"வாழ்க்கையின் ஹாஸ்யமே கண்ணீரில் மிதக்கிறது!" என்று சொன்னார் ஒரு பேரறிஞர். இந்தப் பேரறிஞர் யாரென்று என்னிடம் கேட்டு விடாதீர்கள். யாராவது அவசியம் சொல்லி இருக்கலாம்! இருக்கவேண்டும்!!

இந்தக் கண்ணீரில்தான் எத்தனை எத்தனை வகை! நீலிக்கண்ணீரில் ஆரம்பித்து, முதலைக் கண்ணீருக்குத் தாவி, ஆனந்தக் கண்ணீராகப் பெருக்கெடுத்து ஓடுவதற்குமுன், எத்தனை நீர் வீழ்ச்சிகள், எத்தனை கட்டாந் தரைகள்....!

கண்ணீர் துக்கத்தின் சின்னம்; அதோடு ஆனந்தத்தின் அறிகுறி. மழையாகப் பொழியும்; அருவியாக ஓடும். கடலாகக் கொந்தளிக்கும்; குளமாக அடங்கி நிற்கும். ஆனால், இதற்கு அடிப்படையான ஒரு விதி உண்டு. அதாவது, இந்தக் கண்ணீர் ஆண்களின் பலவீனம்; பெண்களின் அணுகுண்டு!

வேண்டுமானால் ஒரு மாதர் மகாநாட்டை எடுத்துக் கொள்ளுங்கள்.... இதோ ஒலிக்கிறதே பிரசங்கமாரி!

* * *

"கண்ணீர் இல்லையென்றால் உலகமேது, சரித்திரமேது. அன்று சாவித்திரியின் கண்ணீர் யமனையே வென்றது. திரௌபதியின் கண்ணீரில் துரோகிகள் கரைந்தார்கள். சீதை, மண்டோதரி, சகுந்தலை இவர்கள் வடித்த கண்ணீர் என்ன லேசுப்பட்ட கண்ணீரா?.... அந்தக் கண்ணீரின் வலிமையை, நாம் இழந்துவருகிறோம். 'ஐலாஷ்' கலந்துவிடுமோ என்று கண்ணீர்விட கலங்குகிறோம்.... இனி எல்லா வீராங்கனைகளும் உறுதி செய்து கொள்ளுங்கள்! சாதிக்கவேண்டிய எந்தக் காரியத்துக்கும் விடாது கண்ணீர் சிந்துவோம்....!"

பிரசங்கமாரியைக் கேட்டு அழுத கண்ணீர், வாய்க்கால் வழியோடி, தடுக்க முடியாத பெரும் வெள்ளமாகிக் காவிரியுடன் கலந்து, சமுத்திரத்தில் ஐக்யமாயிற்று. இந்த நாரீமணிகள் இப்படி வீரக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்க, வீட்டில் குழந்தைகளின் ஆலாபனையை அழாக்குறையாக சமாளித்துக் கொண்டிருக்கும் வீரர்கள் என்ன செய்கிறார்கள்—

* * *

"ஏதோ லேடீஸ் கிளப்பாம்!.. போயிட்டா!.... இதுக இங்கே செய்ற 'அல்சாட்டியம்' பொறுக்க முடியலையே!"

இன்னொரு நபர், தானே வாங்கிவந்த ஈர விறகை ஊதி ஊதி மூக்கைச் சிந்திக் கொண்டிருக்கிறார்.... அதாவது கண்ணீர் வடிக்கிறார்.

பெண்கள் கண்ணீர் பெருக்குவது இன்றைய நேற்றைய சம்பவமல்ல. புராண இதிகாச காலத்திலேயே அவர்கள் பெயர் கண்ணீரால் பொறிக்கப்பட்டிருக்கிறது. பிரசித்தி பெற்ற காவியமெல்லாம், பெயர் போன ஹாஸ்ய இலக்கியமெல்லாம், கண்ணீரில் துவைத்தே எழுதப்பட்டிருக்கின்றன. வேண்டுமானால் சில

சாட்சிகளை மானசிகமாக பேட்டி காணுவோம்.

1

அநுதாபி : நீயாரம்மா?

ரதி: நான்தான் ரதி!

அநு : ரதியென்ருல்?....

ரதி : மன்மதனேட ரதி!

அநு: ஓ! ஒரிஜினல்ரதியா?.. உன் கண்கள் ஏன் சிவப்பாக இருக்கின்றன?

ரதி : ஒன்றுமில்லே; அழுது கொண்டிருந்தேன்!

அநு : உனக்கு என்ன கஷ்டம்?

ரதி : அவரை....

அநு : யாரை மன்மதனைத் தானே?

ரதி : (பெரிதாக அழுது) ஆமாம். அவரை ருத்திரன் ..

அநு: போதும்....போதும்.... அழுதுவிடாதே.... அது சரி உன் கன்னங்கள் எங்கே?

ரதி : அழுதே கரைந்து விட்டன! .. யுகயுகாந்திரமாய் மனங் கரைந்து விம்மி அழுது கண்ணீர் வடித்து....

அநு: சரி....என்முன் அழாதே என் சொந்த வாழ்க்கைக்கவலே களுக்கே அழ, என்னிடம் கண்ணீரில்லே!

[ரதி அழுது கொண்டே போகிருள்.... இன்னெருத்தி வருகிருள்]

2

அநு : நீயாரம்மா சுந்தரி?

திரெளபதி : நான் சுந்தரி யல்ல; திரெளபதி! பஞ்சவர் பத்தினி... பாஞ்சாலன் மகள்....

அநு : இதென்ன ஒரே அலங்கோலமாக இருக்கிருயே!

திரெள : என் மனப்புண் ஆறுமா?

அநு : இன்னும் ஆறவில்லேயா? ஏன்?

திரெள : சூதர் மனையிலே, துரியோதனன் சபையிலே இழந்த மானத்துக்காக "தாதியடிதாதி!" என்று துச்சாதன மகன் சொன்ன சொல்லுக்காக....

அநு : இத்தனே காலமாகவா அழுது கொண்டிருக்கிருய்? அடேயப்பா!

திரெள : என் துக்கத்தைக் கண்ணீரால் கரைக்கப் பார்க்கிறேன். ஒன்றும் முடியவில்லேயே!

அநு : பெண்களின் கண்ணீர் வற்ருத ஊற்ரு?

திரெள : அது தேவர்களுக்கும் தெரியவில்லேயே!

அநு: அந்தோ தேவர்களே!

[அவள் ஏக்கமும் விமலு பக்கபலமாக நிற்க, போகிருள் பின்னலேயே சந்திரமதி வந்து நிற்கிருள்.]

3

அநு : வசந்த கால மாந்தளிரைப்போல தளதளவென்றிருக்கும் கட்டழகியே!

சந் : (அழுகிருள்)

அநு : பூர்ண சந்திரனைப் போல பிரகாசிக்கும் வனப்புடைய பொட்டு அழகியே! நீயாரம்மா?

சந் : என் பொட்டு உனக்குத் தெரிகிறதா? நான் சந்திரமதி.

அநு : ஏன் இப்படிக் கண்ணீரும் கம்பலேயுமாக அலேகிருய்?

சந் : என் துக்கம் என்னுடனேயே இருக்கட்டும் யாரும் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

அநு: லோகிதாஸன் எங்கே!

சங்: அவனுல்தான் இந்தக் கஷ்டமெல்லாம்! கண்ணீரெல்லாம்!

* * *

இப்படி எவ்வளவோ காட்சிகளைக் கண்முன் கொண்டுவந்து நேயர்கள் கண்களையும் கலங்கச் செய்யலாம். ஆனைப்பட்ட ஹிட்லர்கூட தன் வாழ்க்கையில் இரண்டே இரண்டு தடவை கண்ணீர் விட்டிருக்கிருராம். இந்த விஷயத்தில், சிக்கனத்தில் இவரை மிஞ்சியவர் இல்லையென்றும் சொல்லலாம்.

உலகமே ஒரு சோக சமுத்திரம் என்றிருக்கும்போது கண்ணீர் கதாநாய(கன்)கி வேஷத்தில் உலாவுவதில் வியப்பில்லை. நம் கதாநாயகிமார்களும் இதனுல்தான் படம் முழுதும் அழுகிருர்கள்—அழுது வடிகிருர்கள் போலும்! தமிழ்ப் படங்களைத் 'கண்ணீர்த் தெப்பம்', 'துக்கப் பாசறை' என்றும் சொல்லலாம்!

சீதை, சாவித்திரி, கண்ணகி சோகரஸத்தின் சிகரத்தில் அமர்ந்திருந்தவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோர் பகவானைக் கண்ணீரில் கண்டவர்கள். பத்ரகிரியார், அழுகணிச்சித்தர் போன்றவர்கள் கண்ணீர்க் கடலிலே வாழ்க்கைப் படகை ஓட்டியவர்கள். சலக புவனங்களையும் கண்ணீர் விடச் செய்யும் ஆசிரியர்கள் சொந்த வாழ்க்கையில் கண்ணீர்விடுகிருர்கள். கற்பனையற்றவர்கள் கையில், கண்ணீர், கண்ணீர் விடுகிறது. உணர்ச்சியினுல் தான் கண்ணீர் வெளிப்படும் என்ற நியதியைக் கண்ணீர்ப் புகை உடைத்தெறிந்துவிட்டது. சோகரஸந்தான் வாழ்க்கையின் விசேஷ குணம் என்றறிந்தே போலீஸார், சமயம் கிடைக்கும் போதெல்லாம் கண்ணீர் புகையை உபயோகிக்கிருர்கள்.

ஒரு சமயத்தில் 'நவரத்ன ஒப்பாரி'க்கு என்ன டிமாண்டு இருந்தது தெரியுமா? இது இப்போது எங்கும் போய் ஒளிந்து கொள்ளவில்லை. தென்னுட்டு சினிமாக் கொட்டகைகளில் அடைக்கலம் புகுந்திருக்கிறது. சினிமா பார்க்கப்போய், க்யூவில் நின்று, பாதி படத்தின் போதே கைக் குட்டைகளை நனைத்து நல்லபடியாக துக்கத்தைத் துடைத்து, தூக்கத்தைப் போக்கிக் கொண்டு, நம் பெண்கள் வீடு திரும்புகிருர்கள்!

நம் பாடகர்களும் தங்களால் இயன்ற கைங்கர்யம் செய்தே வைக்கிருர்கள். அப்பேர்ப்பட்ட முகாரி ராகமே அவர்கள் கையில் மாட்டிப் பிழியப்பட்டு கண்ணீர்விட ஆரம்பித்துவிட்டதே!

"ஏழைகள் அழுத கண்ணீர் கூறிய வாள் ஒக்கும்...." என்று கண்ணீரைக் காட்டி ஒரு பழங்காலக் கவிஞர் அரசாங்கத்தை மிரட்டியிருக்கிருர்.

அன்ருட வாழ்க்கையில் எங்கும் கண்ணீர்! எதிலும் கண்ணீர்! பாலில் தண்ணீர் இருப்பது மாதிரி, விலைவாசியோடு கண்ணீரும் சேர்ந்தே வருகிறது. கண்ணீர் இன்றேல் உலகமில்லை! உலகம் கண்ணீரால் வளர முயற்சிக்கும் கருகிய பயிர்! கண்ணீர் உயர மானிட ஜாதி உயரும்!

கண்ணீர் இரக்கத்தின் சின்னம். அஹிம்சையின் அறிகுறி. பெண்களின் சொத்து. இதை ஒருவராலும் கவரமுடியாது.

நம்முடைய அன்ருட வாழ்க்கையில் கண்ணீர் தினமும் வேண்டி இருக்கிறது. கடன் வாங்கக் கண்ணீர் விடுகிருேம்; கடன் கொடுக்க ஒப்பாரியே வைத்து விடுகிருேம். இதனுல் இந்த டைட் மார்க்கெட்டில், பொருளாதார நிலையும் கொஞ்சம் இளகிக் கொடுக்கிறது.

வாழ்க கண்ணீர்!

வீழ்க சிரிப்பு!!

உங்களுக்குத் தாழ்வு

நம்மைப் பற்றி மற்றவர்கள் என்ன எண்ணுகிறுர்கள் என்பதை அறிய நமக்கு மிகுந்த ஆவல் இருக்கிறது. ஆனுல் நம்மனம் நம்மைப் பற்றி என்ன எண்ணுகிறது என்பதைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை. மற்றவர்களைப் போலவே, நாம் அறியாவண்ணம் நம் மனமும் நம்மைப் பற்றி தாழ்வாகவோ, உயர்வாகவோ எண்ணுகிறது. மற்றவர்கள் எண்ணுவதை தெரிந்து கொள்வதைவிட, நம் மனம் நினைப்பதைத் தெரிந்து கொள்வது நமது முன்னேற்றத்துக்கு மிகவும் முக்கியமானது.

எல்லோரும் நம்மை மதிக்க வேண்டுமென்பதற்காக, பொருள் சேர்க்கவோ, அறிவாளியாகவோ முயல்கிறோம். நம்மைப் பற்றி நாமே பெருமைப் பட்டுக் கொள்கிறோம். மற்றவர்கள் ஏதாவது சொன்னுல் தவறென்று அடித்துப் பேசுகிறோம். இந்த எண்ணங்களையும், செயல்களையும் உருவாக்குவது நம் அகத்தே உள்ள தன்னுணர்வு (Ego complex) நாம் வாழ வேண்டும்; ஆபத்துக்களினின்றும் நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பங்களுக்கு இவ்வுணர்வே மூல காரணம்.

ஆணுக்குப் பெண்ணிடத்தும், பெண்ணுக்கு, ஆணிடத்தும் கவர்ச்சி உண்டாகிறது. இவ்வுணர்ச்சியை பாலியல் உணர்வு (Sex complex) என்று பொதுவாகக் குறிப்பிடலாம். காதல், காமம், குடும்பப்பற்று, அன்ருட வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு உணர்ச்சிகள் ஆகியவை இவ்வுணர்வினுல் உருவாக்கப்படுகின்றன.

குழு உணர்வு (Hard complex), நாம் மற்றவர்களை நாடும்படி தூண்டுகிறது. நண்பர்கள் மேலுள்ள பற்று, அவர்களில்லாவிட்டால் தோன்றுகிற தனிமை, மற்றவர்களிடம் நமக்கு ஏற்படும் அனுதாபம், அல்லது எரிச்சல் ஆகியவற்றை இவ்வுணர்வு தோற்றுவிக்கிறது.

இம்மூன்று உணர்வுகளும் நம்மால் அறிய முடியாத அக மனத்தில் (un conscious) குடிகொண்டுள்ளன. இவ்வுணர்வுகள் சமஅளவில்இருந்தால் நாம் மகிழ்ச்சியாக வாழ்கிறோம். பொருத்தமற்ற பாதையில் இவ்வுணர்வுகள் செல்லும் போது துன்பத்தையும் அசாதாரண மனப்பான்மைகளையும் அவை சிருஷ்டி செய்து விடுகின்றன.

பலரிடம் இடம் பெற்றுள்ள தாழ்வு மனப்பான்மை இவற்லுள் ஒன்று. பத்தில், ஒன்பது பேர் தங்களைப் பற்றி தாழ்வான அபிப்பிராயம் உடையவர்கள் என்று மனேதத்துவ வாதிகள் குறிப்பிடுகின்றனர். நம் வாழ்க்கையில் ஏற்படுகிற துன்பங்களுக்கும், தோல்விகளுக்கும் இத்தாழ்வு மனப்பான்மை ஒரு முக்கியமான காரணம்.

தாழ்வு மனப்பான்மை கொண்ட எல்லோரையும் சுலபமாகக் கண்டுபிடித்துவிட முடியாது. தாழ்வு மனப்பான்மை கொண்ட சிலர், தங்களை அறியாமலே, உயர்வு மனப்பான்மை கொண்டவர்கள் போன்று நடிப்பார்கள். உறக்க-ஓயாது பேசி, மற்றவர்கள்

எழுதியது: **ஜி. சுவாமிநாதன்**

மனப்பான்மை இருக்கிறதா?

கூறுவதை, செய்வதையெல்லாம் கண்டனம் செய்வார்கள்.

மிகப் பலரிடம் தாழ்வு மனப்பான்மையை சுலபமாகக்கண்டு பிடித்துவிடலாம். இவர்கள் வெட்கப்பட்டுக் கொண்டு ஒதுங்கியிருந்து, மற்றவர்கள் எது கூறினாலும், எதிர்த்து வாதாடாமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள். 'அஞ்சி, அஞ்சிச் சாவார்; இவர் அஞ்சாத பொருளே இல்லை' என்ற பாரதியின் இலக்கணத்துக்கு, இலக்கியம் போன்று, வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயத்திற்கும் தங்களுக்குள்ளாக அஞ்சுவார்கள்.

இந்திய பல்கலைக் கழகமொன்றில் சின்னாட்கட்கு முன்பு நடத்தப்பெற்ற ஆராய்ச்சியில், பல்கலைக்கழக மாணவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள், தாங்கள் முட்டாள்கள் என்று 'ரகசியமாக' எண்ணிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. தங்களை 'முட்டாள்கள்' என்று கருதிக் கொண்டிருந்தவர்கள் பிறகு பரிசோதிக்கப்பட்ட போது, அவர்களில் பலர் சராசரிக்கு மேற்பட்ட புத்திசாலிகளாக இருந்தார்கள்.

நல்ல திறமைகளைப் பெற்றிருந்தும் பலர் தங்களைப்பற்றி தாழ்வான அபிப்பிராயம் கொண்டிருப்பதை அப் பரிசோதனை தெளிவாக்கியது. தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள் மற்றவர்கள் உதவியின்றி தாங்களாகவே அக்குறையைப் போக்கிக்கொள்ளலாம். தனியாக ஓரிடத்தில் அமர்ந்து தங்களது குணங்களையும், குற்றங்களையும் எண்ணிப் பார்த்து அவற்றை ஒரு தாளில் இரண்டு பிரிவாக வரிசைப்படுத்தி எழுத வேண்டும். எழுதி முடித்தபிறகு குறைகளைவிட, தாங்கள் அதிக குணங்கள் பெற்றிருப்பதை அவர்கள் அறிவார்கள். மனோ கற்பிதமான பல குறைகள் தங்களிட முள்ளதாக பலர் எண்ணிக் கொண்டிருக்கலாம். உண்மையான குறைகளையன்றி, போலிக் கற்பனைகளை எழுத முடியாது. எனவே, தங்கள் குணங்களையும், குற்றங்களையும் எண்ணிப் பார்ப்பதைவிட, எழுதிப் பார்ப்பது சிறந்தது.

ஒவ்வொருவரிடமும் குறைகள் இருப்பது இயற்கை. ஆனால் நமது வாழ்க்கையின் முனனேற்றத்தைத் தடை செய்யும் குறைகளை கவனியாமல் இருப்பது கேடு பயப்பதாகும். சிலர், தங்களது குறைகளை, மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முயல்கிறார்கள். நமது குறைகள், நம்மையன்றி மற்றவர்களைக் கெடுக்கப் போவதில்லை. எனவே நம்மிடமுள்ள குறைகளைக் கண்டு பிடித்து போராடி, அவற்றைத் தொலைக்க வேண்டும். போராடாமலே, தோல்வியை ஒப்புக் கொள்வது கோழைத்தனமாகும்.

சென்னைக் கல்லூரி ஒன்றில் தற்பொழுதுள்ள கணிதப்பேராசிரியர் ஒருவர் சிறு வயதில் பள்ளிக் கணக்கில் மிக மோசமாக இருந்ததாகக் கூறக் கேட்டிருக்கிறேன். கணக்கில் மிக பிற்போக்காக இருப்பதைக் கண்டு வருந்தி 'எப்படியாவது பெரிய கணித நிபுணராக வர வேண்டும்' என்று சபதம் செய்து கொண்டாராம். அதிலிருந்து முழு முயற்சியுடன் உழைக்க ஆரம்பித்த அவர்

இன்று கல்லூரிக் கணிதத் துறைத் தலைவராக மட்டுமின்றி இந்தியாவிலேயே ஒரு சிறந்த கணிதப் பேராசிரியராகவும் விளங்குகிறார்.

'யூஜியன் சாண்டோ' என்ற பெயர் பெற்ற உடற் பலநிபுணர் சிறு வயதில் நோய்வாய்ப் பட்ட நோஞ்சானாக இருந்தவர். தன்னைக் கண்டு மற்றவர்கள் செய்த கேலியைப் பொறுக்க முடியாமல் அவர்களை விட மேலான உடல்வலிமை பெற வேண்டுமென எண்ணி முயன்றார்.

ஒவ்வொரு துறையிலும் தலை சிறந்தவர்கள் பலர் அவ்வத் துறைகளில் குறையும் இருந்து அதைப் போக்கிக் கொண்டவர்களே! நமக்குக் குறையுள்ள விஷயத்தில், மற்றவர்கள் அளவு மட்டுமன்றி, அவர்களை விட, நிறைய அடைய சந்தர்ப்பம் அதிகமுள்ளது.

சில சமயங்களில் நமதுகுறைபாடுகளில் திருத்த முடியாதனவாகவும் இருக்கலாம், பிறக்கும் போதே ஊனக்காலோடு பிறந்த சிறுவன் எவ்வளவுதான் முயன்றாலும் ஓட்டப் பந்தய நிபுணனாக மாற முடியாது. இது போன்ற குறைகளைப் போக்க முயலுவதைவிட, ஏதாவது ஒரு திறமையை வளர்த்து இக்குறைகளை ஈடு செய்ய முயல வேண்டும்.

சென்னைக் கல்லூரி ஒன்றில், ஒல்லியும் கீச்சுக் குரலும் படைத்த மாணவி ஒருத்திவந்து சேர்ந்தாள். பல அழகான மாணவிகள் படித்த அக்கல்லூரியில், இம் மாணவி அழகு ராணியாக ஆவதோ, ஆக முயல்வதோ இயலாத காரியம்.

இப்பெண் சிறிது பேச்சுத் திறமையும், சில விளையாட்டுகளில் பயிற்சியும் பெற்றிருந்தாள். நாளடைவில் இவள் தன் திறமைகளை வளர்த்துக் கொண்டு, கல்லூரி மேடைகளில் பேசவும், கல்லூரிக்காக, 'டேபிள் டென்னிஸ்' போன்ற விளையாட்டுகளை ஆடவும் ஆரம்பித்தாள். ஆரம்பத்தில் அவளை கேலி செய்து கொண்டிருந்த மாணவ—மாணவிகள், அவள் வந்த ஓரிரண்டு ஆண்டுகளில் அவளது குறைபாடுகளை மறந்தது மட்டுமின்றி அவளது திறமைகளுக்காக பாராட்டவும் தலைப்பட்டனர். படிப்பு முடிந்தவுடன், அக் கல்லூரி, மாணவ மன்றத் தலைவரை அவள் மணஞ் செய்து கொண்டாள். மணஞ் செய்து கொண்ட மாணவர் தலைவர் அவளைவிட அழகான ஒருத்தியை தான் கண்டதேயில்லை என்று பின்னால் குறிப்பிட்டார்.

குறைகள் நம்மிடம் இருப்பதால் நம்மைப்பற்றி தாழ்வாக எண்ணிக் கொள்ளத் தேவையில்லை. நம்மிடம் உள்ளதாக நாம் எண்ணும் பல குறைகள் வெறும் கற்பனைகள், உண்மையாக உள்ள குறைபாடுகளைக் கண்டுபிடித்து அவற்றோடு போராடி, வெல்ல முயல வேண்டும். திருத்த முடியாத குறைபாடுகள் நம்மிடம் இருக்குமானால் அவற்றை மறைக்கும் படியான திறமைகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்மைப்பற்றி நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுவது எல்லாவற்றையும் விட, மிகவும் அவசியம்.

உங்களது மன நிலை

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு எதிராக "ஆம்" அல்லது "இல்லை" என்ற வார்த்தையைக் குறிப்பிடுங்கள்.

1. முக்கியஸ்தர் ஒருவரிடம் அறிமுகப்படுத்தப்பட்டால் உங்களுக்கு 'தன்னினைவு' (Salf eonsciousness) எழுகிறதா?

2. நடந்து கொண்டிருக்கும் பொதுக் கூட்டத்தினிடையே முன்னேறிச் செல்ல அஞ்சுகிறீர்களா ?

3. பொதுக் கூட்ட மேடையின் முன் அமர்ந்தால் தன்னினைவு ஏற்படுகிறதா ?

4. பஸ்ஸில்; அல்லது சினிமாக் கொட்டகையில் யாராவது உங்கள் மேல் தவருக இடித்து விட்டால் கோபங் கொண்டது போல் நடிக்கிறீர்களா ?

5. எதிர்பாராத ஒருவரை திடீரென்று சந்தித்தால் பரபரப்பு அடைகிறீர்களா ?

6. உங்களுக்குப் பிடிக்காத ஒருவரை சந்தித்தால் குழப்பம் ஏற்படுகிறதா ?

7. போட்டியில் தோற்கடிக்கப்பட்டால், மனத் தளர்ச்சியோ, கோபமோ அடைகிறீர்களா ?

8. ஒரு முக்கிய தேர்தலில் நீங்கள் வெற்றியடைந்த செய்தி கூறப்பட்டால் உடனே தன்னினைவு ஏற்படுகிறதா ?

9. பாதையோரத்தில், மக்கள் நடமாட்டத்துக்கிடையே தள்ளிக் கொண்டு முன்னேறுகிறீர்களா ?

10. பொருள்களெல்லாம் வீட்டில் தாறுமாருகக் கிடக்கும் போது எதிர்பாராத விருந்தினர்கள் வந்துவிட்டால் தடுமாற்றம் அடைகிறீர்களா ?

11. மன்னிப்புக் கேட்பதன் மூலம், மற்றவர்கள் கவனத்தை உங்களது குறைகள் மேல் திருப்புகிறீர்களா ?

12. உங்களை, யாராவது பாராட்டினல் அதை மறுத்துரைக்கிறீர்களா ?

13. ஏழை யொருவர் தன் தகுதிக்கதிகமான பரிசை உங்களுக்கு அளித்தால் தவறென்று கூறுகிறீர்களா ?

14. உங்களது நிலைக்குத் தாழ்ந்த ஒருவரோடு நீங்கள் பேசிக் கொண்டிருப்பதை, உங்களைப் பற்றி மதிப்பாக எண்ண வேண்டும் என்று நீங்கள் விரும்புகிற ஒருவர் பார்த்து விட்டால், உங்களுக்கு ஒரு மாதிரியாக இருக்கிறதா ?

15. மனத்திடத்துக்காக, புதிய ஆடைகளையும், அணிகளையும், அணிய விரும்புகிறீர்களா ?

16. மிகக் குறைந்த கட்டணத்தில் சினிமாவுக்குச் சென்ருல் அது சினிமா பார்த்த மகிழ்ச்சியையே கெடுத்து விடுகிறதா ?

17. விலை குறைந்த துணி அல்லது பொருள்களை நீங்கள் வாங்குவது யாருக்காவது தெரிந்து விட்டால் கவலைப்படுகிறீர்களா ?

18. உங்களது தோற்றத்தைப்பற்றி எப்பொழுதும் மற்றவர்களது அபிப்பிராயத்தைக் கேட்கிறீர்களா ?

19. நீங்கள் தைரியமாயிருக்க, கைக்குட்டை, சிகரெட் போன்ற ஏதாவதொரு பொருள் தேவைப்படுகிறதா ?

20. உங்களது குறைகளை, மற்றவர்கள், உங்களிடம் கூறினல் எரிச்சல் படுகிறீர்களா ?

14 லிருந்து 18 இல்லைக் குறிகள் நீங்கள் நடுநிலை மனப்பண்பு பெற்றிருப்பதையும், 19 லிருந்து, 20 இல்லைக் குறிகள் உணர்ச்சியற்ற உள்ளத்தையும் தெரிவிக்கின்றன. 14 க்குக் குறைவான இல்லை எண்கள் சந்தர்ப்பங்களுக்கு தகுந்தவாறு நடந்து கொள்ளும் திறமைக் குறைவையும், 11 க்குக் கீழ்ப்பட்ட 'இல்லைகள்' தாழ்வு மனப்பான்மையையும் காட்டுகின்றன.

மூலைக்கு மூலை நாட்டியச் சதங்கையொலி கேட்கும் இந்தக் காலத்தில் ஆடுபவர்களும், ஆட்டுவிப்பவர்களும் கவனிக்க வேண்டிய சில அருமையான வழிகள் இங்கே கூறப்படுகின்றன......................

நாட்டிய நிலை

பரத நாட்டிய வித்வான்
கே. என். தண்டாயுதபாணி

உலகத்தில் இன்றும், உன்னத நிலை பெற்று வருவது நாட்டியக்கலை ஒன்றேயாகும். அதில் தோய்ந்து நிற்கும், பாவ, ராக, தாளங்களின் முதலெழுத்துக்களை ஒன்று சேர்க்கவே, அது **பரதம்** எனப் பெயர் பெறலாயிற்று.

பாவ ராக தாளம் இம்மூன்று எழுத்துக்களும் பிரணவ விவாரமெனவும் இவற்றிற்குப் பிரமன் முதலிய மும்மூர்த்திகளும் அதிதேவதைகள் எனவுங் கூறுவர். கலைஞர்களால் காப்பாற்றப் பட்டுவரும் கலைகள் யாவும் கடவுள் தன்மை வாய்ந்தன என்பதை இங்கு உணர வேண்டியிருக்கிறது. ஆடுங்கலை எப்படி உண்டாயிற்று? அதற்குக் காரண கர்த்தர்களாயிருந்தவர்கள் யார்? என்று எண்ணும் போது, அசையும் பொருள்களால் கண்டுபிடிக்கப் பட்டதென்றும் பரத முனியால் வகுக்கப்பட்டதென்றும், பரத சேனுபதியார், நூல்கள் மூலம் உலகுக்கு அர்ப்பணித்தாரென்றும் படித்த மேதாவிகளும் நாட்டிய ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர். பரத நூல் எனப் பெயரிட்டுக் கொடுத்த முனிவர்களும், புலவர்களும் அந்நூலைப் பல ரூபத்தில் அமைத்திருக்கின்றார்களே தவிர, ஒவ்வொருவரின் நோக்கமும் தீர்க்கமும் ஒன்றையொன்று அனுசரித்து ஒரே முடிவுக்குத்தான் வருகிறது.

பரத முனிவர் செய்த நாட்டிய வகைகளில் அபிநய ஹஸ்தம் நூற்றெட்டும், நாட்டிய நிலை நூற்றெட்டும், தானவகை நூற்றெட்டும் விவரமாயும், தெளிவாயும் அறிய ஆவல் கொண்டு, சேரன், சோழன், பாண்டியன் இம் மூவேந்தர்களும் முறையே நாட்டியத்தையும் அதன் நிலையையும், தாள வகையையும் பயின்றார்களாம். இவ்வாறு காவியம், ஓவியம், சிற்பம் இம் மூன்று கலைகளையும் கற்றுணர்ந்து, நாடெங்கும் பரப்ப வேண்டி அரும்பாடுபட்டு, அதிசயிக்கத்தக்க பல அற்புதங்களையும் செய்தனர் நம் முன்னோர் என்று, பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. அக்காலத்தில் நமது நாட்டினர் திகைக்குமாறு, கலையின் கற்பு வழுவாமலும், அதன் சகல உண்மைகளையும் அறிந்து ஆடியவர்களில் மாதவி என்னும் பெண்ணரசிதான் மிகச் சிறந்தவள் என்று கருதி பெரும் பாலோர் போற்றி வந்தார்களாம். அரசசபைகளில் ஆடி விருதுகள் பெற்றும், அறிஞர்களால் வணங்கப்பட்டும், பெருமையோடு வாழ்ந்ததைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? அன்று முதற் கொண்டே உயர்குலப் பெண்கள் ஒவ்வொருவரும் நாட்டியக் கலையை உணர்ந்து பரதம் பயில்வது உத்தமப் பெண்களுக்கழகு என்பதை நிலை நாட்டவே, பரதம் பயிலாதவர்கள் பகுத்தறிவற்ற

வர்கள் எனக்கருதப்பட்டார்களாம். மாதவியின் பரம்பரை வெகு காலம் வரை கலையின் பண்பு கெடாமலும் தெய்வத்தன்மை குறையாமலும் இந் நாட்டியக்கலையைக்கையாண்டு வந்ததாகவும், காலமாறுதலில் சிக்கிய நாட்டியக் கலையானது சிதைந்துவிடவே, அவர்களும் சிதைந்து விட்டனரென்றும் தெரிய வருகிறது. ஆயிரத்தி எண்ணூறு வருடங்களுக்கு முன் தஞ்சாவூரில் அரசு செலுத்தியவர்கள் சகல கலாபூஷணர்களாய் விளங்கினார்களாம். அவர்கள், சாத்திரங்கள் நிறைந்த ஓலைச் சுவடிகளைக் கண்டுபிடித்தும், உண்டாக்கியும், முன்னேற்றமடையுங் காலத்தில் நமது நாடு அன்னிய ஆட்சிக்கு அடி வணங்கவே நன்னெறியுடைய நாம் அன்னியருக்கு அடிமையல்ல என்றதை அறிந்த அரசர் குலம், பல அரிய விஷயங்கள் நிறைந்த ஓலைச்சுவடிகளையும், நவநிதிகளையும் விட்டு நிரபராதிகளாய் மறைந்தனர்களாம். அவர்கள் நிலையை எண்ணும் போது உள்ளம் உருகாமலிருக்குமா! இன்றும் தஞ்சாவூர் என்றாலே தனி மதிப்பு இருக்கத்தான் செய்கிறது. உண்மையிலேயே இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியானது இந் நாளின் நிலையை வாயாரவாழ்த்தாமல் இருக்கவே முடியாது. இசை வல்லவர்களும் நாட்டிய வல்லவர்களும் என்ன ஆர்வத்தோடு எத்தனை சுறுசுறுப்போடு தம் பணியில் பிரவேசிக்கிறார்கள். அவர்களை நோக்கி எத்தனை ஆயிரம் மாணவர்கள் ஓடிவந்து தங்கள் அவா நிறைந்த முகத்தைக் காட்டுகிறார்கள். வீதிதோறும் அவர்களின் இளங்கால்கள் ஜதி மிதிக்கும் ஓசையைக் கேட்கும் பேறு நம் நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றதே! அவர்கள் நெஞ்சம் அனைத்தும் நித்தம் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றதே! ஆடல் துறையிலும் பாடல் துறையிலும் எவ்வளவு அமைதி! அந்த நெஞ்சங்களில் என்ன ஊக்கம்!

ஒருசாராரிடமே அடிமைப்பட்டு கிடந்த பரதம் இப்போது பலருக்கும் பயன்பட்டு வருவதை எண்ணும்போது, எனது உள்ளம் பெருமிதமடைகின்றது. ஆட்டி வைப்பவர்களும் ஆடுபவர்களும் ஓரினத்தவர்களாகவே இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. பெரும்பாலும் ஒரு சாராரிடமே ஆட்டிவைக்கும் திறனும் ஆடும் திறனும் அமைந்திருப்பதாயிருப்பினும் அத்திறமை அனைவருக்கும் பொது; அனைவரும் ஆடவும் ஆட்டி வைக்கவும் முன் வரலாம். ஆனால் நட்டுவாங்கத்தை கையாளுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையுடன் நடக்க வேண்டி சில விபரங்களைத் தருகிறேன்.

அங்கம், உபாங்கம், பிரத்யாங்கம் என, மூன்று அங்கங்களாக நாட்டிய நன்னூலை வகுத்து இருக்கிறார்கள். வகுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு அங்கங்களிலும் தோய்ந்து கிடக்கும் நுட்பங்களையும் அதன் அலங்கரிப்புகளையும் அறிந்து ஆட்டுவிப்பது நட்டுவாங்கம். நட்டுவாங்கமென்பது சாதாரணமாய்ச் செய்யப் படுவதல்ல. பூர்வ புண்ய பலனாகவும் 'பெரியோர்' ஆசி பெற்றவனாகவும், லயம் உள்ளவனாகவும், தன் தொழிலை பிரதி பலிக்கச் செய்யும் திறமை வாய்ந்தவனாகவும் புலமை யுடையவனாகவும் இருப்பவனே நட்டுவாங்கத்தைக் கையாள வேண்டும். அவனே ஆடலாசிரியன் எனப் பெயர் பெற்றவன்.

அகக் கூத்தும், புறக்கூத்தும், ஆகிய இருவகைக் கூத்தின் இலக்கணங்களையும் அவைகளின் பகுதிகளாகிய பல கூத்துகளையும், அதன் உண்மைகளையும் உணர்வதுடன் ஆட்டும்,

பாட்டும், கொட்டும் முறையே கையாளுபவர்கள், ஆடல் நிகழும்போது அபிநயம் நிகழாமலும் அபிநயம் நிகழும்போது ஆடல் நிகழாமலும் தெளிவு படுத்த வேண்டும்.

ஆடலின் நுட்பம் அறியாது அரங்கினில் ஆடவும், ஆட்டுவிக்கவும் சிலர் முற்படுவதினால் அவர்கள் நடத்தும் நாட்டியக் கலையானது நிலை குலைந்து கோமாளிக் கூத்தாகவே தோற்றமளிக்கின்றது. அந்நிலை நம் நாட்டினர்க்குப் பொருத்தமில்லை என்றே கருதுகிறேன். பரதக் கலையைக் காணும்போது சிலர் ரசிக்கிறார்கள். சிலர் தப்புக் கண்டுபிடிக்கிறார்கள். சிலர் தெரிந்தது போல் பாவனை செய்கிறார்கள். சிலர் பரதத்தையே கரைத்துக் குடித்ததாக எண்ணி கரடிவிடுகிறார்கள். நாட்டிய நுட்பங்களில் சிலவற்றை அறிந்தவர்களோ ஆமாம் சாமி ஆகிவிடுகிறார்கள்.

இந்நிலையில் ஆசிரியர்களும் ஆடுபவர்களும் நடந்த வரை நடக்கட்டும் இனிமேல் நமது வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைத் தேடிக் கொள்வோமென்ற ஒரே நோக்கத்துடன் இருப்பதை முதலில் அகற்ற வேண்டும். கலைஞர்கள் ஒன்று சேர்ந்து ஊக்கத்துடனும் உறுதியுடனும் இப்பரத கலையைப் பாரெங்கும் பரப்ப முயற்சிக்க வேண்டும். கலையின் சாராம்சம் இன்னதெனத் தெரியாது கலையில் பிரவேசிப்பவர்கள் தெரிந்தவரைக் கேட்டுத் திருந்த வேண்டும். திரும்பிய பக்கமெல்லாம் செந்தமிழ்ப் புலவர்கள் இருக்கும் நம் நாட்டில், வேண்டுவதைக் கேட்டால் சொல்லிக் கொடுக்க மாட்டார்களா?

வீட்டிலேயே அச்சிடக்கூடிய பாக்கெட் பிரஸ் :—

பெயர்கள், விலாசம், கடிதங்கள் லேபில்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளை வீட்டிலேயே வெகு அழகாக அச்சிடலாம். ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியமானது. நெ. 1 ரூ. 1-4-0 நெ. 2 ரூ. 2-4-0 ஸ்பெஷல் ரூ. 3-0-0, உயர்ந்த ரகம் ரூ. 3-8-0.
Big Size High Class Rs 4-4 0.
தபால் செலவு அணா 1-8-0

உயர்தர கடிகாரங்கள்
ஸ்விஸ் மேக் 10 வருஷ உத்திரவாதம் 5 ஜுவல் க்ரோமியம் கேஸ் ரவுண்டு ஷேப் ரூ. 16. சிறந்தது ரூ. 16/8. நீண்ட சதுரம் க்ரோமியம் கேஸ், 7 ஜுவல் ரூ. 24. ரோல்டுகோல்டு 15 வருஷ உத்திரவாதம் 9 ஜுவல் ரூ. 28. சிறந்தது ரூ. 30. ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 27. அலாரம் டைம்பீஸ் ரூ. 10. சிறந்தது ரூ. 17.
தபால் செலவு அணா 1-8-0.
French Commercial Stores, (B.S.B.)
P. B. No. 12216. CALCUTTA. 5)

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.
விலை ரூபாய் 5—0—0
தையல் கட்டிங் & மானுவல!
இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக்கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.
விலை ரூபாய் 2—8—0
பீதாம்பர ஜாலத்திரட்டு
(MAGIC BOOK)
பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.
விலை ரூபாய் 2—4—0
VANI BOOK DEPOT (U)
Post Box No 239, MADRAS-1

பட உலகம்

[எம்பிஎஸ்]

சந்திரஹாரம்

விஜயா புரொடக்ஷன்ஸார் தங்களது அதி உன்னத தயாரிப்பான சந்திரஹாரத்தை ஜனவரி 14ந் தேதி பொங்கலன்று தமிழ் நாடெங்கும் நூறு தியேட்டர்களில் வெளியிட்டிருக்கின்றனர். விஜயா இதுவரை எடுத்த படங்களில் அதிகமாக செலவு செய்த படம் இது தான். சுமார் 25 லக்ஷ ரூபாய் செலவில் தயாரான இப்படம் ஜனரஞ்சகமானது என்று பெயர் பெற்றுவிட்டது. வாஹினி தன் முழுத்திறனையும் காட்டி செய்திருக்கும் பிரம்மாண்டமான ஸீன் ஜோடனை பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறது. மிஸ்டர் பார்ட்லியின் படப்பிடிப்பு ஏ-1 ஆக இருக்கிறது. என். டி. ராமராவ் பெரிய சந்தனாக வந்து திறம்பட நடித்திருக்கிறார். ஜூனியர் ஸ்ரீரஞ்சினிக்கும், சாவித்திரிக்கும் பொருத்தமான வேஷங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சாவித்திரி படத்தில் அவ்வளவு சோபிக்கவில்லை. பழங்காலத்து பாட்டி கதையாயிருந்தாலும் கடைசி வரை சிக்கலில்லாமல் சுவாரஸ்யமாக இருக்கிறது. பாமரரஞ்சகமான ஹாஸ்யங்கள் நம்மை வயிறு குலுங்க சிரிக்க வைக்கின்றன. விஜயா புரொடக்ஷன் ஸாரின் கூட்டு முதலாளிகளான நாகிரெட்டியும், சக்ரபாணி

ராஜி என் கண்மணியில் டி. ஆர். ராமச்சந்திரன் கைதி கோலத்தில்

பட்டணம் பொடித் தொழிற்சாலைகளில்

மிகப் பெரியது.

தந்தி :

மூக்குத் தூள்



போன் :

4071

N. V. ஷண்முகம் கம்பெனியார்

த. பெ. 555. வண்ணாரப்பேட்டை

மதராஸ் - 21.

ஆங்கிலக் கல்வி

தமிழ் மட்டும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு ஆங்கில ஆரம்ப எழுத்து முதற் தொடங்கி ஒரே வருடத்தில் நான்காம் பாரத்திற்கொப்பான ஆங்கில அறிவையும், இடையில் கல்வியை நிறுத்தியவர்களுக்கு அது முதலும், தத்தம் இல்லத்திலிருந்து பிறர் உதவியின்றி பெறலாம். தொடர்ந்து கற்றால் 2 வருடங்களில் மதராஸ் மெட்ரிகுலேஷன் பரீட்சையும் தேறலாம்.

S. S. L. C. Matriculation, இவைகளுக்கு ஒப்பான இதர பரீட்சைகளில் தேறியவர்களுக்கு பிரைவேட்டாகவே Intermediate தேறலாம். வயது கல்வி முதலிய குறிப்புகளுடன் விண்ணப்பிக்கவும்.

கேம்பிரிட்ஜ் காலேஜ் (U) திருவனந்தபுரம்—1

யும் பெருமை அடையவேண்டிய படம் தான்.

ஜாதகம்

ஆர். என். ஆர். பிக்சர்ஸின் முதல் படமான ஜாதகம் (தமிழ்) ஜனவரி மாதம் 25-ந் தேதியன்று திரையிடப்பட்டது. ஏவி. எம். ஸ்டுடியோவில் தயாரான இப்படம் முழுக்க முழுக்க ஹாஸ்ய விருந்தளிக்கிறது. ஆர். நாகேந்திரராவ் இப்படத்தை டைரக்ட் செய்திருப்பதுடன் முக்கியமானதொரு பாத்திரத்தையும் ஏற்று நடிக்கிருர். நாகேந்திர ராவ் வழக்கம்போல் தன் வரையில் பிரமாதமாக நடித்திருக்கிருர் என்று சொல்லலாம். கே. சாரங்கபாணியும் செல்லமும் சக்கைபோடுபோடுகின்றனர். புதுமுகம் சூர்யகலாவும் பாலசந்தரும் காதல் ஜோடியாக நடித்திருக்கின்றனர். டி. எம். யு. பதி இப்படத்திற்கு கதை வசனத்தை அமைத்து கொடுத்திருக்கிருர். விருவிருப்பான. கதையையும், எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய வசனத்தையும் எழுதி இவர் ஜாதகத்தை பார்பவர்களிட மிருந்து நல்ல பெயர் தட்டிக்கொண்டு விட்டார். ஜாதகம் ஒரு முழு ஹாஸ்யப் படமாக தோன்றினலும் கதையில் விருவிருப்பும் ஸ்வாரஸ்யமும் இருக்கிறது.

ராஜி என்கண்மணி

தடுக்கி விழுந்தால் சினிமா டைரக்டர் மேல் தான் விழ வேண்டும் என்ற அளவுக்கு தமிழ் நாட்டில் அவ்வளவு மலிந்துவிட்டனர். இதற்குக் காரணம் அவர்களிடம் இருக்கும் பண வசதி என்று சொல்லலாம். ஒரு படத்தைஎடுக்க முற்பட்டவுடன் அந்த பட சொந்தக்காரர் ஒரு சாதாரண ஆளுக்கு டைரக்ஷன் பொறுப்பை கொடுத்துவிட்டு புரொட்யூஸர் அண்டு டைரக்டர் என்று தன் பெயரை விளம்பர படுத்துகிருர். இந்த சினிமாத் தொழில் சம்பந்தமாக எந்த பெயர் விளம்பரப்படுத்தப் பட்டாலும் ஒரு கனம் நாம் அதன் உண்மையை சந்தேகிக்கவே தோணுகிறது. ஆனல் ஜெமினியின் சரித்திரத்தில் இம்மாதிரியான போலி கவுரவங்களை காண முடியாது. ஜெமினியின் ராஜி என் கண்மணியின் டைரக்டர் கே. ஜே. மஹாதேவன் இங்கிலாந்து சென்று இக்கலையைப்படித்துடைரக்ஷன் தொழிலை முறைப்படி அதன் நுணுகங்களை எல்லாம் தெரிந்து கொண்டு ஜெமினியர் இப்படத்

பாரிஸ் அழகிகள்

அழகிற் சிறந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை அப்படியே தத்ருபமாகப் பலவகைப் படுக்கையறைக் கோலத்துடன் காண பிரமிக்க தக்கது.

24 வகை (Bromide) போட்டோ படங்கள் ரூ 7.

36 கொண்ட முழுசெட் ரூ. 10.

தபாற் செலவு இலவசம்.

ஒவ்வொரு ஆர்டருடன் "பெண் இன்பம்" என்னும் புத்தகம் இனமாக அனுப்பப் படும்.

கர்ப்புத் தடை

ரப்பர் பாதுகாப்புக் கருவிகள் (நீடித்து உழைப்பவை)

		ரூ.	அ.
ஆண்களுக்கு:—			
	ஒன்று	1	6
,,	மூன்று	3	12
பெண்களுக்கு:—	ஒன்று	1	12

(உபயோகிக்கும் முறையுடன்)

தபாற் செலவு 1-2-0 தனி. ஐந்து ரூபாய்க்கும் குறைந்த ஆர்டருக்கு முன் பணம் தேவை.

வீனஸ் டிரேடிங் கம்பனி (U) P. B. No 1693, சென்னை-1

தில் தன் திறமை அனைத்தையும் வெளியிட்டிருக்கிறாராம். பல புதிய அம்சங்கள் இருக்கும் இப்படத்தில் ஜூனியர் ஸ்ரீ ரஞ்சினியும் டி. ஆர். ராமசந்திரனும் பிரதமபாகத்தில் தோன்றி நடிக்கின்றனர். ஸ்ரீ ரஞ்சினியின் உருக்கமான நடிப்பு அவர் குருடியாக வரும் போது நன்றாக வெளிப்படுகிறது. நல்ல பாத்திரத்திற்கு எற்ற நடிகையை தேர்ந்தெடுத்திருக்கின்றனர் ஜெமினி என்று சொல்லலாம். டி. ஆர். ராமசந்திரன் இதுவரை நடித்த படங்களைவிட இப்படத்தில் பிரமாதமாக நடித்திருக்கிறார். ஸ்ரீராம், முத்துலக்ஷ்மி, எஸ். வி. ரங்கராவ், சந்திர பாபு, வசந்தரா ஆகியோரும் வரும் தங்கள் பாகம் வரை திறம்பட நடித்திருக்கின்றனர்.

இல்லறஜோதி

சிவாஜி கணேசன், பத்மினி, ஜூனியர் ஸ்ரீரஞ்சினி நடிக்கும் இப்படத்தை மாடர்ன் தியேட்டர்ஸார் அவர்களது ஸ்டுடியோவில் டி. ஆர். சுந்தரம் டைரக்ஷனில் மும்மரமாக தயாரிக்கின்றனராம்.

ஒருநாள்

ஏ வி. எம். மின் அடுத்த வெளியீடான இப்படம் முற்றிலும் புதுமாதரியான கதையாம். சிவாஜிகணேசன் கதநாயகனாக நடிக்கும் இப்படத்தில் பண்டரிபாய் கதாநாயகியாக தோன்றுகிறாராம். மற்றும் சூர்யகலா ஜாவர் சீதாராமன், பி. டி. சம்பந்தம் முதலியோர் தோன்றுகின்றனர். வசனங்கன் ஜாவர் சீதாராமன் எழுதி இருக்கும் இப்படத்தை எஸ். பாலசந்தர் டைரக்ட் செய்து வருகிறார். படத்தில் ஒரு பாட்டோ நாட்டியமோ இல்லாமல் வெளியிட்டால் கூட ரசிக்கக் கூடிய அளவில் இருக்குமாம் ஒரு நாள்.

ஜெயந்தியின் "பொன் வயலி"ல் டி. ஆர். ராமச்சந்திரனை அஞ்சலி தடவி பார்க்கிறாரோ?

பெண்

வருகிற ஏப்ரல் மாதத்தில் தமிழ் நாட்டுக்கு நல் விருந்தளிக்க விரைந்துக் கொண்டிருக்கும் ஏவி. எம். மின் 'பெண்'ணில் பால சந்திரன் பெண் வேஷம் போட்டு ரகளைபபடுத்துகிறாராம். கல்யாணத்தின்போது மாப்பிள்ளையை மைத்துனிமார்கள் பரிகசிக்கிறார்களல்லவா! ஆனால் இந்தப் பால சந்திரனே தன் ஆருயிர்த் தோழன் கணேசனுக்கு கலியாண சீன் முடிந்ததும் பெண் வேஷம் போட்டுக் கொண்டு "கல்யாணம், கல்யாணம்" என்று பாடி ஆடி பரிகசித்து விளையாடுகிறாராம். அப்போ, படத்தில் ஏகபபடட தமாஷிற்கு இடமிருக்கும் போலிருக்கிறது.



ஜெமினிராஜி என் கண்மணியில் 'ராமச்சந்திரா இந்த அம்மாவின் கையை பிடி' என்கிறார் போலும் எஸ். வி. ரங்கராவ்.



மனோஹரா

டி. ஆர். ராஜகுமாரி, சிவாஜி கணேசன், கண்ணாம்பா, கிரிஜா, எஸ் நடராஜன், ஜாவர் சிதாராமன், சதாசிவராவ் முதலியோர் நடிக்கும் இப்படத்தின் கதை பிரபல நாடகாசிரியர் ப. சம்பந்த முதலியார் எழுதியது. நிறைய பொருட்செலவில் பிரம்மாண்டமான செட்டுகள் போட்டு தயாரித்திருக்கும் இப்படத்தை மூன்று பாஷைகளில் தயாரிக்கின்றனராம். பிரஸாத் டைரக்ஷனில் வளரும் இப்படம் நெப்ட்யூன் ஸ்டுடியோவில் மும்மரமாக தயாராகிறதாம்.

சம்பூர்ண ராமாயணம்

இந்தக் கலியுகத்தில் சென்னையில் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியார் ஒரு அற்புத காரியத்தை செய்கின்றனர். நாஸ்திகமும், பழமையைக் கிண்டல் செய்யும் கீழ்த்தர பண்பும் சினிமா, நாடகத் துறையில் பெருகி வரும் இந்த சமயத்தில் துணிகரமாக — வெற்றிகரமாக புராண நாடகங்களையே நடித்து மக்களின் ஆதரவை அவர்கள் பெறுவது சாமான்ய விஷயமல்ல. தி ஸ்டேஜ் அடுத்தபடியாக அளிக்கப்போகும் சம்பூர்ண ராமாயணம் ஒற்றைவாடை தியேட்டரில் பூரண வெற்றி அடையும் என்பதில் சந்தேகம் என்ன?

உயர்திரு சைவமணி குகஸ்ரீ ச. கண்ணன் அடிகளாருக்கு பொன்னாடை போர்த்தும் விழா சென்னை பள்ளியப்பன் தெரு, ஸ்ரீ அருணாசலேஸ்வரர் வரதராஜப் பெருமாள் தேவாலயத்தில் 10—1—54-ல் நடைபெற்றது. வித்வான் சோமசுந்தரத் தம்பிரான் ஸ்வாமிகள் தலைமையில் திரு, ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் அவர்கள், 'உமா' ஆசிரியர் திரு. ஜி. உமாபதி உபகரித்த பொன்னாடையைப் போர்த்தினர். சிவத்திரு இளவழகனார் ஆசி மொழி கூறினார். விழாவுக்கு பக்தர்களும் பொது மக்களுமாக திரளான பேர் கூடியிருந்தனர்; இறுதியில் திரு. ஜி. உமாபதி வந்தனோபசாரம் கூறினார்.

பொன்னாடை போர்த்தும்போது எடுக்கப்பட்ட போட்டோக்கள்.

வாழ்க்கையும் இலக்கியமும்

நா. பார்த்தசாரதி

“வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் இடையில் வேறுபாடு உண்டா? இல்லையா? உண்டு என்றால் எவ்வாறு? இல்லை என்றால், ஏன் இல்லை?” இவை நாம் இங்கே எழுப்பிக் கொள்ளும் கேள்விகள். வாழ்க்கை சமுதாயத்தின் பொதுச் சொத்து; இலக்கியம் அப்படி அல்ல. வாழ்வதற்குத் தகுதியும் அறிவும் மட்டும் பெருங் காரணங்களாக அமைதி பெறுவதில்லை. பொருள் தான் வாழ்க்கையின் அமைதி. ஆனால் இலக்கியம் அறிவின் உரிமை. தகுதியுடையவரின் தனிப் பெருஞ் செல்வம். பிறந்தவர் யாவரும் வாழ்வது ஒருதலை. ஆனால் பிறந்தவர் யாவரும் இலக்கியம் பெறுவது ஒருதலையில்லை. ‘இலக்கியம் இலக்கியம்’ என்று இங்கு நாம் குறிப்பிடுவது சீரிய குறிக்கோளாகத் தேர்ந்து பின்னர் அவை முடிவு பெற உழைக்கும் சிறப்பு வாழ்வின் பகுதியே ஆகும். உண்டுந் தின்றும் பருகியும் உடுத்தும் படுத்தும் உறங்கியும் வாழ்கின்ற வாழ்க்கை எல்லோருக்கும் பொது. இன்னும் நன்றாகச் சொல்லப் போனால் அது மனித உரிமை. (Social property of men) நினைந்து நினைந்து நெஞ்சம் பண்பட்ட நிலையில் குறிக்கோள் வாழ்க்கை நடத்துகின்ற அந்த ஒரு நிலை, இலக்கியத்திற்கே உரிய தனியுரிமை. முன்னது வாழ்க்கை உலகம்; பின்னது இலக்கிய உலகம். முன்னது சோறும் நீரும் உண்டு வாழும் அவ்வளவில் முடிவது. பின்னது அறிவும் நினைவும் பெற்று வாழும் அவ்வளவில் நிகழ் காலத்தை எதிர் காலத்தும் அழியாது நிலைக்கச் செய்வது. வெற்றுடம்பு மறையப் புகழுடம்பு நிறைய வாழ்வதுதான் இலக்கிய வாழ்க்கை. வெற்றுடம்பு மறைய எல்லாமே மறைவதுதான் மனிதப் பொது வாழ்க்கை. இலக்கியம் என்பது சீரிய குறிக்கோள்களுக்கு இலக்காகச் செய்யப்பட்டது என்ற பொருளையுடையது. சீரிய குறிக்கோள்களையுடையதாக நிகழ்த்தப்படும் வாழ்வு இலக்கிய வாழ்வு. அந்த வாழ்வில் மதிகிடந்த நெஞ்சு கொண்டு விதிகடந்து விளையாட முடியும். மலை மலையாக வருகின்ற துன்பங்களைக் காற்றில் இலவின் பஞ்சாகப் பறக்கச் செய்ய முடியும். சந்தனத்தையும் செந்தழலையும் ஒன்றாக எண்ணித் தீண்டும் சால்பு நிலை கைகூடும். அது ஓர் அமரவாழ்க்கை.

ஆனால் அதே நேரத்தில் இந்தப் பொதுவாழ்க்கை பெற்ற மனித உலகம் மணல் வீடு கட்டி விளையாடுகிறது. கடற்கரையில் சிறுகுழந்தைகள் மணல் வீடு கட்டுகின்றன; திடுமென்று ஓர் பெரிய அலை வந்து அள்ளிக் கொண்டு போகிறது அந்த மணல் வீட்டை. மீண்டும் கட்டுகின்றன. மீண்டும் அலை வருகிறது, அவலப்படுத்துகிறது.

காலம், திசை முதலியன மனிதனால் திரித்துவிடப்பட்ட கற்பனைச் சரடுகள். காலம் ஒன்றே ஒன்றுதான், திசையும் ஒன்றே ஒன்றுதான். அதை வைத்துக் கொண்டு மனிதன் கண்ட கனவுகள்தான் இறப்பு, நிகழ்வு, எதிர்வு, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, என்னும் விந்தைப் பிரிவுகள். இதையெல்லாம் உணர்ந்து செல்லும் நெறி திறக்க வாழ்வதுதான் இலக்கியம். உணர்வின்பாது உழன்று உழன்று செக்கிழுக்கும் மாடு போல் சுற்றி வருவது சாதா

ரண வாழ்க்கை. ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே ஆசிரியன் என்று எண்ணி மனத்திற்கு வஞ்சனை புரியாமல் வாழ்வானேயானால் சாதாரண வாழ்வு மங்கி இலக்கிய வாழ்வு தலையெடுக்கும் என்று கூற முடியும். பொது வாழ்வு மனித மனத்தை இறுக்கி இறுக்கி இளகாத கல்லாக மாற்றி விடுகின்றது. இலக்கிய வாழ்வு மனதை இளக்கி இளக்கி மலராக மாற்றி விடுகின்றது. இது பண்படுகிறது. அது பண்படுவதில்லை. இனியொன்று சொல்ல வேண்டும். இலக்கிய வாழ்வு(Idea life) வாழ்கின்றவன்தான் இலக்கியத்தைத் தர முடியும். ஒரு பிளாத்தனும், அரிஸ்தோதலனும், வள்ளுவரும் இலக்கிய கர்த்தாக்கள் ஆக முடிந்ததென்றால் அவர்கள் பொதுமனித வாழ்க்கையிலிருந்து விலகி இலக்கிய வாழ்வு வாழ்ந்ததுதான் அதற்குக் காரணம். கருத்துக்கள் முழுவதும் அனுபவத்திலிருந்துதான் பிறக்க முடியும். (Ideas are birth from own feelings) அனுபவத்திலிருந்து பிறவாத கருத்து வெறும் பொன் மலர்தான். மனோபாவமும் தோய்ந்த எண்ணமுமின்றி எந்த முடிபும் இலக்கிய உலகில் எழுவதில்லை. வள்ளுவர் நூல் செய்தாரென்றால் ஆயிரத்து முன்னூற்று முப்பது முடிபும் அனுபவ உணர்ச்சியின் வெளியீடு என்றுதான் கூறவேண்டும்.

இங்குதான் பொது வாழ்க்கைக்கும் இலக்கிய வாழ்க்கைக்கும் இடையிலே மிகப் பெரியதோர் வேறுபாட்டைக் காண முடிகிறது. உணர்ந்து அமைதியெய்தாமல் உணர்ந்தை உணர்ந்தவாறே எதிர்காலமறிய எழுதி வைக்கிறது இலக்கிய உலகம். மனித உலகம் எதையும் உணருவதுமில்லை, எழுதி வைப்பதுமில்லை. கிணற்றில் நீரிறைக்கும் ஒட்டகத்திற்குக் கண்ணை மூடிவிடுவதுபோல் வாழ்க்கையில் ஈடுபடும் மனிதனின் கண்ணை அந்தப் பொது வாழ்வு மூடிவிடுகிறது. ஒட்டகம் கண் தெரியாது கிணற்றைச் சுற்றிச் சுற்றி வரும், உருளை சுழலும், நீர் இறைக்கப்படும். மனிதப் பொது வாழ்வும் அதே போலத்தான் இருக்கிறது. சிந்திக்க நேரமின்றி உழைப்பில் சிக்கிவிட்டான் மனிதன். புறவுடலின் தேவைகளைப் பெருக்கும் மனிதன் அந்த உழைப்பிலேயே அகவுடலை மாசு படிய விட்டுவிடுகிறான். என்பு பிளக்க உழைக்கிறான்; பண்பு சிறக்க எண்ணுகிறானில்லை, எண்ண நேரமுமில்லை. தேவை குறைந்தாலொழியத் தன்னையுணரும் உணர்வு நிறைய வழி இல்லை. இந்தத் துறையில் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையே உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவிற்கும் உள்ளது போன்றது. இலக்கிய உலகம் தன்னையுணர்கின்ற பாதையில் முன்னேறிச் செல்கின்றது: ஆனால் முன்னேறிச் செல்கின்றோம் என்ற எண்ணத்தோடு அது பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே இலக்கியம் வேறு, வாழ்க்கை வேறு. இது பொருளைக் கொண்டு தேவைப் பெருக்கத்தின் பசிதீர்க்க உடலை அடகு வைத்திருக்கிறது. அது தன்னை உணர்ந்து முன்னேறும் நெறியில் விழிப்போடு முன்னேறி வருகிறது. அதில் தெளிவிருக்கிறது- திட்பமிருக்கிறது. எதிர்காலம் அறிய உரைக்கும் இயல்பும் இருக்கிறது.

"இருவே றுலகத் தியற்கை வேறு
திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

அந்த உலகத்து இயற்கை வேறு. இந்த உலகத்து இயற்கை வேறு. அதாவது இலக்கிய வுலகம் வேறு, வாழ்வுலகம் வேறு. அதாவது ஒளியும் இருளும் போல. முன்னர்க் கூறிய இலக்கியம் ஒளி நெறியில் போகின்றது. பின்னர்க் கூறிய வாழ்க்கையுலகம் இருட்புதையில் மயங்கி நிற்கிறது.

மதிப்புரை

மரகதம்: அயோக்கியன் என்று பெயரெடுத்த ஒருவனை மணக்க விரும்பாத மரகதம் பெற்றோரின் முடிவுக்கு எதிராக ஒரு புரட்சி செய்கிறாள். பக்கத்து வீட்டுக்கு வந்திருந்த சிவராஜன், மரகதத்தின் புரட்சி மனப்பான்மைக்கு வித்தாகநிற்கிறான். இருவரும் ஓடிப்போய் விடுகின்றனர். வெளியூரில் மரகதத்தை முறைப்படி மணந்து வாழ்க்கை நடத்த சிவராஜன் முயற்சிக்கிறான். பக்குவமடையாத உள்ளத்தில் பிறந்த புரட்சி அடங்கிவிட்ட காரணத்தால் மரகதம் அவனிடம் ஒத்துழையாமைத் தகராறுகள் செய்கிறாள். அதனால் அவளே பல இன்னல்களை அடைந்து மனம் திருந்துகிறாள். இந்தச் சாதாரண கதையை உள்ளத்தை ஈர்க்கும் அற்புத முறையில் அமைத்திருக்கிறார் ஆசிரியர் **லக்ஷ்மி.**

அடுத்த நிமிஷம் என்ன நடக்கும் என்ற ஆவலை எழுப்பி புயல் வேகத்தில் பறந்து செல்லும் சம்பவங்கள் நம்மைப் பிரமிப்படையச் செய்கின்றன. மரகதம் தமிழ்ப் பெண்களுக்கு அறிவுரை கூறும் அருமையான மனோதத்துவ நாவல்.

வெளியீடு: இன்ப நிலையம், மயிலாப்பூர் சென்னை-4. விலை: ரூ. 1-8-0.

வீரத்தேவன் கோட்டை: வெளிப்புறக் காட்சி ஒன்றை படமாக்கும் முயற்சியில் ஈடுபட்ட சினிமாக் கம்பெனி யொன்று ஒரு இடத்துக்கு படையெடுக்கிறது. சூரியன் படப்பிடிப்புக்கு அனுகூலம்செய்யாததனால் முதலாளி டைரக்டர், நடிகர்கள் எல்லோரும் ஒரு இடத்தில் அமர்ந்து உல்லாசமாகப் பொழுது போக்குகின்றனர். அந்த சமயத்தில் உற்சாக மிகுதி காரணமாக அந்தப் பக்கமிருந்த ஒரு இடிந்த கோட்டையை ஆதாரமாக வைத்து சினிமாக் கதை ஆசிரியர் ஒரு புதுக் கதை புனைகிறார். அந்த கதைதான் வீரத்தேவன் கோட்டை. சரித்திரப் பின்னணியுடன் திடுக்கிடும் சம்பவங்கள் சகிதம் கதையை சுவாரஸ்யமாக எழுதியிருக்கிறார் ஆசிரியர் லக்ஷ்மி.

வெளியீடு: இன்பநிலையம்; விலை ரூ. 1-8-0.

தேச பக்தர் மூவர்: தேச பக்தர்களைப்பற்றிய வாழ்க்கை வரலாறுகள் தான் பெரும்பாலும் தமிழில் நூல்வடிவம் பெற்றிருக்கின்றன. தேச பக்தர்களின் குண விசேஷ ஆராய்ச்சி நூல்கள் இன்றுவரை தமிழில் குறைவாகவே உள்ளன. இது ஒரு குறையே. **நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை** எழுதிய இந்நூல் மேற்கண்ட குறையைப் போக்க முனைந்துள்ள முதல் முயற்சியாக விளங்குகிறது. கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி; சொல்லின் செல்வர் சத்தியமூர்த்தி; சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் ஆகிய மூவரைப் பற்றிய அருமையான குணச்சித்திரங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. இதுவும் இன்ப நிலைய வெளியீடு; விலை: 1—4—0.

—"**எம்பிஎஸ்**"

மணமக்களுக்கு சில யோசனைகள்: ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கல்யாணம் மிகவும் முக்கியமான மங்கள சம்பவம். ஆனால், தென்னாட்டில் பல இளந்தம்பதிகள் 'வெட்கப்பட்டுக் கொண்டு', மண வாழ்க்கையை எப்படி அனுபவிப்பது என்று தெரியாமல், மனதுக்குள் பொருமிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக் கெல்

லாம் ஒரு சமய சஞ்சீவி இந்தப் புத்தகம். திருமணத்துக்கு முன்பும் பின்பும் எல்லோரும் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய பலவிஷயங்கள் இந்த நூலில் மிகவும் அழகாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனல், ஆபாஸ முறையில் இறங்கி விடாமல், மனேதத்வம், விஞ்ஞானம் முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டு, உடற் கூறு—உளக் கூறு சம்பந்தமாக உள்ள, இளந் தம்பதிகளுக்கு வேண்டிய பல முக்கியமான கருத்துகளை இந்நூல் ஆசிரியை மிகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துரைத்திருக்கிருர். பட விமர்சனங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

ஆசிரியை: சீதாலக்ஷ்மி. பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17. விலை ரூ. 1-12-0.

பெண்களுக்கு: 'ஆண்களுக்கு' என்ற முகவுரையுடன் கூடிய "பெண்களுக்கு" என்ற இந்தப் புத்தகத்தில், பெண்கள் தங்கள் வாழ்க்கையை இனிது நடத்த அறிந்து கொள்ளவேண்டிய பல இன்றியமையாத விஷயங்கள் கொண்டிருக்கிறது. "கர்ப்பமும் மனேநிலையும்" என்ற அத்தியாயத்தை ஒவ்வொரு பெண்ணும் அவசியம் அறிந்திருக்க வேண்டும். "ஆபாசமான விஷயம்" என்று பெண்கள் கூட அறியாமையால் கருதும் பல சம்பவங்களை, வரம்புக்குட்பட்டு, மிக நயமாக எடுத்துச் சொல்லி இருக்கிருர் ஆசிரியை. நல்ல மனைவி, குழந்தை வளர்ப்பு முதலியவை பற்றி, வரட்டு நாகரிகத்தில் மோகங் கொண்டிருக்கும் நம் நாரீமணிகளில் பலர் அவசியம் அறிய வேண்டியவை.

ஆசிரியை: சீதாலக்ஷ்மி. பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராய நகர், மதராஸ்-17. விலை: ரூ. 2-0-0.

மணப் பெண்ணுக்கு உபதேசம்: இதுவும் பெண்களுக்காக எழுதப்பட்ட புத்தகமே. மணப் பெண்களை தவிர, 20 வருஷம் குடும்பம் நடத்தியும் இல்லற சுகம் இல்லாமல் தவிக்கும் வேறு பெண்கள் கூட படிக்க வேண்டியது. ஒரு குடித்தனப் பெண் அறிய வேண்டிய பல இல்லற தர்மங்கள் இதில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. முக்கியமாக நாவடக்கத்தைப்பற்றிச் சொல்லலாம்! செயற்கை அழகும் நாகரிக அலங்காரமும் வேண்டியவை தான்—ஒரு எல்லை வரை. ஆனல், தாய்மையின் சௌந்தர்யத்தின் முன், அது பதினேராவது குழந்தையாக இருந்தாலும் சரி—போலி அழகுக் கர்வம் எல்லாம் எப்படி மங்கி விடுகின்றன என்பதைப் பெரிமிதத்துடன் விளக்கி இருக்கிருர். இதில் வரும் 'பாட்டி'யின் சுலபமான, ஆனல் விலையுயர்ந்த கருத்துகள், போற்றிப் பேண வேண்டியவை. "ஃபாஷன் மங்கைகள்" என்று தங்களைக் கருதிக் கொண்டு மழலைச் செல்வத்தை இழந்து விடும் நம் செயற்கைக் கோமளாங்கிகள் கையில் அவசியம் இருக்க வேண்டிய நூல்.

ஆசிரியை: நாகலக்ஷ்மி; பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17. விலை ரூ. 2-0-0.

1001 இரவுகள்: கதைகள் (முதலிரண்டு பாகங்கள்) **"தினமும் ஒரு பெண்ணை மணப்பேன்; மறு நாள் அவள் தலை தரையில் உருளும்; அப்போது தான் பெண்களின் கௌரவமும் கற்பும் காப்பாற்றப் படும்!"** என்று மன்னன் ஷாரியர் தீர்மானம் செய்தான்! தன் ராணியும், தன் சகோதரன் ஷாஜாமன் ராணியும் தங்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்கள் என்று நேருக்கு நேராகக் கண்டதே இந்தத் தீர்மானத்துக்குக் காரணம்.

''அன்பும் அருளும் பேரும் புகழும் படைத்த ஷாரியர் மன்னா! கேளுங்கள்! முன்னொரு காலத்தில், எல்லாம் வல்ல அல்லாவின் அருளால், இந்தப் புவி மண்டலத்தில்....'' என்று முதல் இரவில் கதை சொல்ல ஆரம்பித்தாள் அவனை மணந்த பிரதானியின் மகள் ஷாஜரத். அவள் சகோதரி துன்யாஜத்தும் உடனிருந்து கதை கேட்டாள். அந்தக் கிளி மொழியாளின் நட்சத்திரக் கதைகளின் சுவாரஸ்யமும், அவள் கதை சொன்ன அழகான பாணியும் ஒவ்வொரு நாளும் கதையின் சிறந்த கட்டத்தில் 'தொடரும்' என்று கொடுத்த நய அறிவிப்பும்........ மறு நாள் வட்டப் பாறையில் சிரச்சேதம் செய்யப்படவிருந்த ஷாஜரத்தை, 1001 இரவுகள் வரை கதை சொல்லவைத்தன! இதற்குள், காதல் இலக்கியங்களின் சம்பிரதாயப்படி, மன்னன் ஷாரியர், தன் உடல், பொருள், ஆவி மூன்றையும், அந்த மெல்லியாள் ஷாஜரத்திடம் ஒப்படைத்து விட்டான்!

சுமார் 2000 வருஷங்களுக்கு முன், பிரபலமான ஒரு பேராசிரியரால் அரபு மொழியில் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் இந்தக் காவியக் கதைகள் ஒவ்வொன்றும் அமரத்தன்மை வாய்ந்தவை.

தமிழில், தொகுப்பாக இவைகள் இல்லாத குறையை, எஸ். எஸ். மாரிசாமி நிவர்த்தி செய்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. மிகவும் சரளமான நடை. கதைகளின் பாத்திரங்களில் ஒன்றிப் போகும் வகையில் வெகு அழகாக மொழிபெயர்த்திருக்கிறார்.

மொழி பெயர்ப்பு: எஸ். எஸ். மாரிசாமி; பிரசுரம்: அன்னை நூலகம், திருவல்லிக்

JAIN'S
For GUARANTEED GOLD, GEMSET JEWELLERY & SILVERWARES.
THE JAIN JEWELLERY CO.,
1, NAGESWARA RAO ROAD,
T. NAGAR, MADRAS-17.

கேணி, மதராஸ்-5. விலை: ஒவ்வொரு பாகமும் ரூ. 3-0-0.

நாயகமே!: (கவிதை) "திரு நபியவர்களின் அரிய வாழ்வையும். பேருரைகளையும், சிறப்பியல்களையும் வடித்தெடுத்துக் கவிதைத் தேனிலே குழைத்து தமிழக மக்களுக்கு ஊட்ட வேண்டுமென்பது எனது நெடு நாளைய எண்ணம்" என்று முன்னுரையில் கவிஞர் கூறுகிறார். கவிதைகளைக் காணும் போது. இந்த ஆவல் சிறந்த முறையில் பூர்த்தியாகி இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

> **"பாதுகையைப் பழுது பார்த்தீர்**
> **பால் கறந்தீர்! துணிதைத்தீர்!**
> **யாது மற்றோர்க்குதவி நின்றீர்**
> **யாமுவக்கும் நாயகமே"**

போன்ற வெகு எளிய கவிதைகளால், நபிகள் நாயகத்தின் வாய்மையையும், தூய்மையையும் சிறுவர் சிறுமிகளுக்கு மிகவும் நன்றாகப் பதியும் வண்ணம் அழகாகத் தொடுத்திருக்கிறார்.

ஆசிரியர்: கே. அப்துல் கபூர் எம். ஏ., கிடைக்குமிடம்: திருக் குர்ஆன் இயக்கம்; சென்னை—கொழும்பு. விலை 6 அணா.

இரட்டைக் கொலை: 'முத்துச் சிரிப்பும் சோகமுகமும்' கொண்ட வாஸந்தி, 'புற்றீசல் போல் புடை சூழும் புதிர்களின் மத்தியிலே புரண்டு புறப்பட்டு'ப் புதிர் போடும் மாணிக்கம்—இந்த இரண்டு இளங் காதலர்களின் வாழ்க்கையைப் பின்னிக் கொண்டு புதிர்மேல் புதிராகப் போகிறது இந்தத் துப்பறியும் கதை. கதையின் கடைசியில், 'பயந்த சுபாவமும்' 'பதுமை போன்ற அடக்கமும்' கொண்ட நளினி, "மாலையிட்ட கணவனை இந்தக் கைதான் சுட்டு வீழ்த்தியது!" என்று ஒப்புக் கொள்ள, புதிர்கள் எல்லாம் பிரிகின்றன.

ஆசிரியர்: ஜெகசிற்பியன். பிரசுரம்: பிரேமா பிரசுரம், ஆற்காடு ரோடு, சென்னை—24. விலை ரூ. 1-4-0.

—ஏ. எம். ரஜனி.

வரப் பெற்றோம்

துருக்கியின் தந்தை: ஆசிரியர்: வி. சிவப்பிரகாசம் பி. ஏ; வெளியிட்டோர்: ஔவைப் பதிப்பகம், தெப்பக்குளம். திருச்சிராப்பள்ளி: விலை அணா. 10.

தமிழகத்தில் அடிகளார்: கிடைக்குமிடம்: ஸ்ரீ நவநீத கண்ணன் பஜனைக் கூடம்; கல்யாண மகால், 17 கீழ மாரட்டுத் தெரு, மதுரை. விலை அணா. 6.

முன்னேற்றப் பாதை: திருநபி (ஸல்) அவர்களின் பிறந்த தின விழா இலவச வெளியீடு; வெளியிட்டோர்: இக்பால் சொற்பயிற்சி மன்றத்தார்; 56. அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

யார் இந்த அண்ணா?: ஆசிரியர் ரா. ப. தங்க வேலன்; வெளியிட்டோர்: சாந்தன் பதிப்பகம், பாலக்கரை திருச்சி; விலை அணா ஒன்று.

திராவிட எதிர்ப்புப் பாடல்கள்: இயற்றியவர்: சாந்தன். சாந்தன் பதிப்பகம், பாலக்கரை திரச்சிராப்பள்ளி. விலை அணா ஒன்று.

இணைப்பா?: ஆசிரியர்: பி. எஸ். மணி, ராமவர்ம புரம், நாகர் கோயில். விலை அணா ஒன்று.

உழைப்பாளி: (திங்கள் இருமுறைப் பத்திரிகை) கௌரவ ஆசிரியர் எஸ். எஸ். ராமசாமி எம். எல். ஏ.

உழைப்பவனின் உள்ளக் குமுறலுக்குப் பரிகாரம் தேடும் வேகத்துடன் வெளிவரும் இப் பத்திாகையில் உழைப்பாளிகட்குத் தேவையான நல்ல விஷயங்கள் அடங்கியுள்ளன.

வெளியீடு: திருக்குறள் அச்சகம், கடலூர் ஓ. டி.

[S२०८७

விநாயகர்

சுருட்டுகள்

ஷெல் பிராண்டு

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18, அண்ணா பிள்ளை தெரு, சென்னை

N.3. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும் எம்மிடம் கிடைக்கும்.

நீரிழிவு

ஏழு நாட்களில்

குணமாகும்

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள் சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். அதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்கு பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புததகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0

[பாக்கிங் தபால் செலவும் இனம்]

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (U. M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா.

ஆண்மையுள்ள ஆண்களையே பெண்கள் விரும்புவார்கள்

மனோவலிமையை இழக்காதீர்கள்.

டிரிடோன் டிலாய் (ஆண்களுக்கு)

இது உயர்ந்த மூலிகைகளினால் தயாரிக்கப்பட்ட ஓர் அரிய டானிக். ஆண்களுக்குண்டான சகலவிதமான நோய்களையும் முக்கியமாக ஆண் குறி வளராதிருத்தல். சம்போக இச்சையின்மை முதலியவைகளை நீக்கி உடனே குணமாகிறது ரூ. 5.

எண்டிமோ பில்ஸ்

(நரம்புச் சக்திக்கும், நரம்புத்தளர்ச்சிக்கும் உலகப் புகழ் பெற்ற மருந்து)

ஆண் குறி இளைத்து செயலற்றுப்போதல், நரம்புத் தளர்ச்சி, தாது நஷ்டம், சுக்கிலத்தில் ஜீவக்கிருமிகள் இல்லாமை, சம்போகத்தில் அயர்வு, பெண்கள்மேல் இச்சையில்லாதிருத்தல் இவைகளுக்குக் கைகண்ட மருந்து.

32 மாத்திரைகள் கொண்ட பாட்டில் 1-க்கு ரூ. 5-0-0

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

V. P. STORES

(U. T. M.) P. B. 51, MEERUT

BIRTH CONTROL

Rubber goods for Ladies and Gents

GENTS.	Per Doz.	Rs.	As.
Filco F. L.	,, ,,	4	0
Silco U. S. A.	,, ,,	5	4
Washable F. L.	,, ,,	7	8
Lightex British	,, ,,	8	4
Premox U. S. A.	,, ,,	10	0
Crocodile F. L.	,, ,,	13	8
American Tips	,, ,,	5	8
LADIES.	EACH	Rs.	As.
Check Pessary	,,	2	0
Neeto Tablets (tube)	,,	3	0
Sponge Ball	,,	1	0
B. C. Jelly	,,	1	12

Woman's Most difficult problem solved. PULS CAPS (U. S. A.) is an unfailing cure for Female Irregularities and DELAYED MENSES for any reason, give desire result 3 to 4 days. **Rs. 6/.**

PULS CAPS (Special) Gives desired result within 24 hours.

Warning On no account to be used during pregnancy as they cause abortion and miscarriage.

V. P. STORES

U. M. T.) P. B. 51, MEERUT

ஆசிரியர், அச்சிட்டு வெளியிடுபவர் : ஜி. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1: நிர்வாக ஆசிரியர் : ர. சண்முகம்.

மணத்தில் சிறந்தது
மறதியை போக்குவது
மகிழ்ச்சி அளிப்பது
மதியை வளர்ப்பது
மக்கள் விரும்புவது

M.S

No.1

பட்டணம் பொடி

ஒன்றே!

மோகன்
கம்பெனி

B.A.RAJU

தந்தி: EMMES' த. பெ. [illegible] மதுரை-2

Regd. No. M. 6309. UMA February 1954

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers,
4/32. Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200